
சரிநிகர்
SARINIHAR
# சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

தொடரும் தணிக்கை:
**147** வது நாள்

இதழ் 158 ஒக்.29-நவ.11. 1998
விலை ரூபா 10.00



படையினரின் பாலியல் வல்லுறவு :
## ஆணாதிக்கத்தினதும், அரசியல் அதிகாரத்தினதும் வீறாப்பு !

## காக்கைதீவு: சதுப்புக் குழியுள் புதையுண்ட சடலம் !

## தமிழ்-முஸ்லிம் உறவு: தொடக்கப் புள்ளி எது ?

பசறை தொழிலாளர் வேலை நிறுத்தம் :
## முறியடிக்கச் சதி ?



## ஓடாத பஸ்கள்!

கடந்த மாதம் 500 பஸ் என்ஜின்கள் இந்தியாவிலிருந்து மத்திய போக்குவரத்துச் சபையால் இறக்குமதி செய்யப்பட்டு சகல பிராந்திய போக்குவரத்துச் சபைகளுக்கும் வழங்கப்பட்டன. இந்த என்ஜின் கையளிப்பு வைபவம் 7.9.98 அன்று வெகு கோலாகலமாக நடைபெற்றது. எனினும் இந்த 500 என்ஜின்களில் வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு ஒரு என்ஜின் கூட வழங்கப்படவில்லை. ரிவிரச இராணுவ நடவடிக்கையின பின் 43 புதிய பஸ்களும் 40 பழைய பஸ்களுமே வட பிராந்திய போக்குவரத்துச் சபைக்கு வழங்கப்பட்டுள்ளன. இதில் தற்போது 30 பஸ் என்ஜின்கள் செயலாற்ற முடியாத நிலையில் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இப்போது இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட பஸ்கள் ஏனைய பகுதிகளில் ஓடி முடித்து கட்டையில் ஏற்றும் நிலை வந்ததும் அவற்றை வட பிராந்திய போக்குவரத்துச் சபைக்கு வழங்கக்கூடும். சிலவேளை அந்தக் கையளிப்பு வைபவம் 7.9.98 ல் நடைபெற்றதை விட விமரிசையாக கொண்டாடப்படவும் கூடும்.

## கலைத்துப் பிடித்துகடற்படை செய்த அட்டூழியம்!

கடந்த 17.10.98 அன்று வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சண்முகம் கமலினி என்ற 16 வயது பாடசாலை மாணவி கடற்படையினரால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டுள்ளார். அன்றைய தினம் இரவு 9.30 மணியளவில் இப்பெண்ணின் வீட்டுக்கு சைக்கிளில் வந்த கடற்படையினர் பெண்ணின் தந்தையை தாக்கினர். பெண்ணின் தகப்பனார் கமலினியை அடுத்த வீட்டுக்குச் செல்லுமாறு சைகை செய்யவே அவரும் அடுத்த வீட்டுக்கு வேலிக்குள்ளால் ஓடியுள்ளார். அடுத்த வீட்டுக்கு அவரைத் துரத்திச் சென்ற கடற்படையினர் அங்கிருந்த வயோதிப மாதுவையும் இன்னுமொருவரையும் தாக்கிவிட்டு கமலினியை இழுத்துச் சென்று பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கியுள்ளனர். அன்றைய தினம் சம்பத்தினால் பாதிக்கப்பட்ட பெண்மணிக்கு மாதவிடாய் ஏற்பட்டிருந்தபடியால் மருத்துவ, சட்ட ரீதியாக பாலியல் வல்லுறவை நிருபிப்பதில் சிக்கல் இருப்பதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## கொழும்பு வேறு ! யாழ்ப்பாணம்வேறு!

கடந்த 22.10.98 அன்று உதயன் இணையாசிரியர் வித்தியாதரன் பலாலியிலுள்ள இராணுவ அதிகாரிகளால் அழைக்கப்பட்டு எச்சரிக்கப்பட்டுள்ளார். புலிகளால் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரமொன்றைப் பிரசுரித்ததற்காகவே இவர் இராணுவத்தினரால் எச்சரிக்கப்பட்டுள்ளார். புலிகளால் யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கு அண்மையில் துண்டுப்பிரசுரமொன்று விடுக்கப்பட்டிருந்தது. அத்துண்டுப்பிரசுரத்தில் நீலப்படங்கள், மற்றும் ஆபாச சஞ்சிகைகள் போன்றவற்றிலிருந்து எமது சமூகத்தைப் பாதுகாக்க வேண்டும். கலாசாரச் சீரழிவிலிருந்து எமது மக்களைக் காப்பாற்ற வேண்டும். அதனைச் சீரழிக்கும் சக்திகறுக்கு இடங்கொடுக்கக் கூடாது எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்தத் துண்டுப்பிரசுரம் பற்றிய செய்தி பிரசுரிக்கப்பட்டதற்காகவே உதயனுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்ட இயக்கம். அவர்களின் அறிக்கைகளையோ அவர்கள் வெளியிடும் தகவல்களையோ பிரசுரிப்பது கடும் தண்டனைக்குரிய குற்றம் என படையினர் தெரிவித்துள்ளனர். அதற்கு வித்தியாதரன் அவர்கள் பொழும்பு வாரப்பத்திரிகை ஒன்றில் புலிகளின் அரசியல் துறைபொறுப்பாளர் தமிழ்ச்செல்வனின் பேட்டி அப்படியே பிரசுரமாகியிருந்தது. அதை ஏன் நீங்கள் தடை செய்யவில்லை என்று கேட்டிருக்கிறார்.

அதற்கு படை அதிகாரிகள், கொழும்பு நிலைமை வேறு, யாழ்ப்பாண நிலைமை வேறு என்றார்களாம். இது யுத்தபூமி . இங்கு சிவில் நிர்வாகம் முற்றாக வழமைக்குத் திரும்பவில்லை. புலிகளின் அறிக்கைகள் இங்கு சிவில் நிர்வாகத்தைக் குழப்ப முயல்வதாக அமைகின்றன. அதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது. இத்தகைய அறிக்கைகளைப் பிரசுரிப்பது புலிகளின் முயற்சிக்கு உதவுவதாகவே கணிக்கப்படும்.

ஆகவே புலிகளின் அறிக்கைகளைப் பிரசுரிக்கும் சட்டத்திற்கு முரணான செயலை மேற்கொள்ள வேண்டாம் என கண்டிப்புடன் அறிவுறுத்துகிறோம் என இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சரி, இது ஒரு புறமிருக்க, இராணுவத்தினரே கூறி விட்டார்கள் யாழ்ப்பாணத்தில் சிவில் நிர்வாகம் முற்றாக வழமைக்குத் திரும்பவில்லையென. நிமிடத்திற்கு நிமிடம் யாழ்ப்பாணத்தில் இயல்பு நிலை திரும்பி எல்லாம் வழமை போல் நடப்பதாக செய்திகளை வெளியிடும் தொடர்பு சாதனங்கள் கூறுவது உண்மையா? அல்லது இந்த இராணுவ அதிகாரி கூறுவது உண்மையா?

## துன்புறுத்துகிறது ஈ.பி.டி.பி

கடந்த 17.10.98 அன்று ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் இருவர் யாழ் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளனர். திருகோணமலையைச் சேர்ந்த துரைராஜா சந்திரசேகரன் (தேவதாஸ்), மன்னாரைச் சேர்ந்த செபஸ்தியாம்பிள்ளை பரமேஸ்வரன் (கணேஷ்) ஆகிய இருவருமே சரணடைந்தவர்களாவர். இவர்களிருவரும் ஈ.பி.டி.பி. யினர் தம்மை சிறையிலடைத்து வைத்து துன்புறுத்தியதாக பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.


## தராவிட்டால் தாக்கு!

ரெலோ இயக்கத்தினர் யாழ் ஸ்ரான்லி வீதியிலுள்ள யாழ்ப்பாண மினபொருள் விற்பனை நிலைய உரிமையாளரிடம் பணம் கேட்டு அவர் தர மறுக்கவே அவரைத் தமது முகாமுக்கு அழைத்து கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

## தொடர்பா? தண்டனை?

கொலை, களவு, பாலியல் வல்லுறவு போன்றவற்றில் ஈடுபடுவோருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என நவாலி வழுக்கியாற்றுப் பாலத்தில் துண்டுப்பிரசுரமொன்று புலிகளால் ஒட்டப்பட்டுள்ளது.

இதேவேளை ஈச்சமோட்டை வாசிகசாலையில் போடப்பட்டிருந்த துண்டுப் பிரசுரத்தில் இராணுவத்தினருடன் தொடர்புகளை வைத்திருப்போர் கடுமையாகத் தண்டிக்கப்படுவர் எனக் கூறப்பட்டுள்ளது. இத்துண்டுப்பிரசுரமும் புலிகளாலேயே வெிளியிடப்பட்டுள்ளது.



## ஒரு அரசியல்வாதியின் பேச்சு

ஒரு நாள் டர்பன் நகரில் "தமிழ் மக்கள் இலங்கையின் பூர்வீகக் குடிகளே அல்ல" என பேச்சு. பின் இலங்கை மண்ணில் பாடசாலை மாணவர் முன் "ஐயோ வரலாற்றையே திரிபுபடுத்தி தமிழ் மக்களை அந்நியராக காட்டிப் போட்டதனால் தான் இனப்பிரச்சினையே வந்தது" என பேச்சு. பின் "யுத்தத் தோல்விகள் என்பது தவிர்க்க முடியாதது. எனவே தொடர்ந்து யுத்தம் முன்னெடுக்க வேண்டும்" என்றவாறான உரை. அதன்பின் "அநியாய யுத்தம் தொடர்வதால் எத்தனை மனித உயிர்கள் பலி" எனும் போக்கில் அமைந்த உரை. இது ஒரு நாடகம் ஒன்றில் கோமாளி வேஷம் போட்டவரின் நடிப்பாக இருந்திருந்தால் கைதட்டி சிரித்திருக்கலாம். இன்னும் இன்னும் உரை வேண்டும் என எதிபார்த்து இருக்கலாம். ஆனால், துரதிஷ்டவசமாக எமது மதிப்பிற்குரிய மேன்மை தங்கிய கனம் ஜனாதிபதி அம்மையாரே இவ்வாறு உரையாற்றுகிறார் என அறிந்த பின் எம்மால் சிரிக்க முடிய்வில்லை.

முன்னம் இருந்து இன்று வரை இவர் எதை முதலில் கூறுகிறாரோ அதை அவரே மிகச் சிறப்பாக மறுப்பது போல் பேசுவது தொடர்ந்து கொண்டு தான் இருக்கிறது. ஆனால், அவருடைய அதிகாரபூர்வமான செயல்களோ தான் கூறிய சிறந்த விடயங்களை அமுல்படுத்துவதை விடுத்து அதனை மறுத்துச் சொல்லும் விடயங்களை நடைமுறைப்படுத்துவதிலேயே குறியாக இருந்து விடுவது தான் இலங்கை மக்களின் சாபமாக இருந்து வருகிறது. ஆனால், நன்கு ஆழமாக நோக்குபவர் ஜனாதிபதியின் பேச்சு, ஜனாதிபதியின் பேச்சாக இல்லாமல் ஒரு தேர்ந்த அரசியல்வாதியின் பேச்சாக - பொ.ஐ.மு. தலைவரின் பேச்சாக இன்னும் சொல்லப் போனால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையில் இருப்பவர்களில் ஒருவரின் பேச்சாகவே கொள்வர்.

தமிழ் மக்களின் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தி, மலினப்படுத்துவதற்காக டர்பன் நகரில் அவர்கள் பூர்வீகக் குடிகளே அல்லர் என அவர் பேசினார். இலங்கையில் தமிழ் மக்களிடமிருந்து புலிகளைத் தனிமைப்படுத்தி தன்னை தமிழரின் பால் அக்கறை கொண்டவராகக் காட்ட (அதனை இனி தமிழ் மக்கள் நம்பப் போவதில்லை என்பது வேறு விஷயம்) இங்கு பேசுகிறார். இராணுவத்தினரை கவர யுத்தம் தொடர்வது பற்றி (யார் கண்டது இராணுவமே யுத்தத்தை வெறுக்கிறதோ இல்லையோ என்று) பேச்சு, பின் நடைபெறும் யுத்தத்தை வெறுக்கும் மக்கள் முன் (இறுதிப் புள்ளி விபரம் 9சத வீதம் யுத்தத்தை ஆதரிக்கின்றதாகக் குறிப்பிடுகின்றது.) யுத்தத்தின் கோரம் பற்றி (முதலைக்) கண்ணீர் விடுதல். பேஷ்! பேஷ்!! இத்தனை அருமையாக ஒரு அரசியல்வாதியாக இருக்க முடியுமா என்பது அதிசயமே.

ஆனால், இப்போது இலங்கைக்குத் தேவையானது ஒரு சிறந்த அரசியல்வாதியல்ல. பிரச்சினைக்குத் தீர்வை பெற்றுத் தரும் தகுந்த தலைமைப் பொறுப்பே. இப் பொறுப்பை மேன்மை மிகு ஜனாதிபதி ஏற்பார் என நம்பியே மக்கள் அவருக்கு வாக்களித்து ஜனாதிபதி பதவியையும் கொடுத்தனர். ஆனால், வழக்கம் போல் இம்முறையும் தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டனர் என்பதே சோகமான விடயமாகப் போய்விட்டது. இந்த ஏமாற்றத்திற்கு அவர்கள் கொடுக்கும் விலையாகவே யுத்தமும், பேரழிவும், வறுமையும் காணப்படுகிறது. இதனை எப்போது ஜனாதிபதி உணர்வார். அல்லது தீர்ப்பார் என்பதும், தான் எப்போது ஒரு ஜனாதிபதி என்பதை உணர்வுபூர்வமாக உணர்வார் என்பதுமே இன்றுள்ள முக்கிய கேள்வி.

## இத் தீவில் எங்கணும்...

இத்தீவின் வடக்கும், கிழக்கும், தெற்கும், மேற்குமென மனிதர்கள் நிறைந்த ஊர்கள் தோறும் பரபரப்பாகின்றன. அன்னையர் தம் பிள்ளைகளை எண்ணி நித்திரை விழிக்கின்றனர். ஊரின் எல்லையில் கடந்து போகும் இறுதி நேர பஸ் இரைச்சல் அடங்கிய பின்னும் இளைஞர்கள் கண்விழித்து தம்மைத் தயார்படுத்துகின்றனர். ஆனால், அவர்களுக்கிடையே தான் எத்தனை வேறுபாடு? வடக்கு, கிழக்கு, இளைஞர்களின் அவர்கள் பெற்ற அன்னையரின் நித்திரை விழிப்பிற்கும், தெற்கு இளைஞரின் விழிப்பிற்கும் தான் எத்தனை வித்தியாசம். இரு வேறு துருவங்களாய் பிரிந்து கொண்டிருக்கும் இவர்களுக்கிடையே தான் எத்தனை துார இடைவெளி.

தெற்கில் இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களை பிடித்து இழுத்துக் கொண்டு வந்து மீள இணைக்க அரசு பெரும் பிரயத்தனம் எடுக்கிறது. யுத்தத்தின் மீது வெறுப்படைந்து அல்லது பாதிக்கப்பட்டு விலகி ஓடியவர்களைத் தேடும் பணியில் அரசு ஈடுபட அவர்களின் பெற்றோரும், உறவினரும் அவர்களைப் பாதுகாக்க பெரும் பாடுபடுகின்றனர். ஊரிற்கு வெளியில் அனுப்புகின்றனர். துார இடங்களில் வேலை பெற்றுக் கொடுத்து அனுப்பி வைக்கின்றனர். அவ்விளைஞரும் எக்காரணங்களிற்காக தாம் விலகி வந்தோமா அதைவிட பயங்கரமான நிலையில் எங்ஙனம் போவது என நினைக்கின்றனர். யுத்தம் செய்பவர்களின் அதிகாரப் போட்டியில் தம் உயிர்கள் பலியாவதை எங்ஙனம் அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியும். இதற்கிடையில் வேலையற்றுக் கிடக்கும் தென்னக இளைஞர்களை நோக்கி அரச எந்திரம் இராணுவத்திற்கு வருமாறு கடுமையான தொனியில் அழைப்பு விடுக்கின்றது. வேலையற்றவர்களின் பெயர்கள் கிராம அதிகாரிகளால் சேகரிக்கப்படுகிறது. இளைஞர்கள் நித்திரை இழக்கின்றனர்.

கிழக்கில் இன்னொரு வகையான நித்திரை விழிப்பு. புலிகளில் சேர, சேர்ந்து போராட இளைஞர்கள் பெருமளவு முயல்கின்றனர். இயலாத இளைஞர்களை நோக்கி புலிகள் தம் கடும் பிரச்சாரத்தைத் திருப்புகின்றனர். இனவிடுதலை பற்றிப் பேசுகின்றனர். அண்மைக்காலமாகச் சில இடங்களில் வற்புறுத்தியும் அழைத்துச் செல்கின்றனர்.இராணுவ அடக்குமுறையை வெறுக்கும் இளைஞர்கள் தாமாகவே சேருகின்றனர். அடிமை வாழ்வை எதிர்க்கும் அவர்கள் அமைதியான வாழ்விற்கு ஊறுவிளைவிக்கும் கொடுமை காணாது போய் இணைகின்றனர்.

பெற்றோர்கள் நித்திரை மறந்தனர். தம் பிள்ளைகளை புலிகள் இல்லாத இடத்திற்கு அனுப்ப முயல்கின்றனர் அன்னையர். கண்கள் திகில் கொண்டதாய் மாறுகின்றது.

இந்த இரு வாரங்களில் இலங்கைத் தீவில் நடந்து, நடந்து கொண்டிருக்கும் விடயம் இவை. ஒரு புறம் இராணுவ வாழ்வை வெறுத்த சிங்கள இளைஞர்களின் வாழ்வும், மறுபுறம் இராணுவ அடக்குமுறையை எதிர்க்கும் தமிழ் இளைஞர்களின் வாழ்வும் துருவப்படுகின்றன. இடைவெளிகள் நீள்கின்றன. வாழ்விற்காய் இரு வேறுபட்ட முறைகளில். ஒன்றிற்கு ஒன்று எதிர்மறையாய் போய் விட்ட முறையில் போராடும் இவர்களிற்கிடையேயான இந்த வேறுபாட்டை யார் நீக்க முன்வருவார் அடிப்படையிலேயே துருவ மயப்படும் இந்த இரு இனங்களுக்கிடையே எவர் சமாதானம் விளைவிக்க முயல்வர்? இந்நிலை மேலும் மேலும் நீளும் வரை இருந்து விட்டு ஈற்றில் முற்றிலுமாய் பிரிந்து போன பின், சமாதானம் பற்றிப் பேசுவதில் என்ன அர்த்தம் இருக்கப் போகிறது? தாமதமான சமாதானம் கிடைக்காத சமாதானத்திற்குச் சமன்.

## யுத்த விருட்ச கிளைகளாக...

த்தம் ஒன்று நீண்டதாய், முடிவின்றி பேரழி[illegible]ளையும் ஏற்படுத்திக் கொண்டு செல்லும் ஒரு நாட்டில் ஏற்படும் விளைவுகள் உயிர்ப்பலி, உடமை சேதம், நோய்கள் என்பனவற்றிற்கும் அப்பால் மனித வாழ்விற்குரிய சகல தளங்களையும் அது கடுமையாக பாதித்துச் செல்வதை நாம் பல நாடுகளில் கண்டுள்ளோம். அவற்றில் முக்கியமானவை ஆயுதங்களின் பாவனை சாதாரண வாழ்வு வாழும் மக்களிடையே அதிகரிப்பதும், யுத்தம் நடைபெறும் தேசத்து மக்களின் வாழ்வியல் வன்முறை மயமாகுவதும் ஆகும். தொடர்ந்து சாவும், வேதனையும் என துயரச்செய்திகள் கேட்டுப் பழகிப்போன மக்கள் அச்சம்பவங்கள் ஏற்படுத்தக்கூடிய நியாயமான அதிர்வுகளைக் கிரகித்துக் கொள்ள முடியாது போகின்றமை சர்வ சாதாரண நிகழ்வாகும். இத்தகைய தாக்கங்கள் முக்கியமாக இளைய சமூகத்தையே பெருமளவு சென்றடைகின்றன. அத்தேசத்து இளைய சமூகம் வன்முறை செயல்களுக்குப் பழக்கப்படுவதும், பின் அவ் வன்முறைகளுக்கே பழகி விடுவதும் துயரமான விடயங்கள்.

இலங்கையிலும் இத்தகைய மோசமான நிலைமையின் குறியீடுகள். அண்மைக் காலமாக காணக் கிடைக்கின்றது. அண்மையில் முகத்துவார கடற்கரையில் பாலியல் வல்லுறவு சம்பவத்தில் ஈடுபட்ட குற்றவாளிகளின் வயதும், சென்ற் தோமஸ் கல்லுாரியில் இடம்பெற்ற படுகொலையில் ஈடுபட்டவர்களின் வயதும் இவற்றையே எமக்கு

13ஆம் பக்கம் பார்க்க

யாழ்ப்பாணம்



வி.உருத்திரகுமாரன் அல்லது யூ.எஸ்.குமார் என்ற புலிகளின் வட அமெரிக்கப் பேச்சாளர் அண்மையில் லண்டன் 'சதம் ஹவுஸில்' நடை பெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றினார். புலிகளின் சட்ட நிபுணரான இவர் இக் கூட்ட முடிவின்பின் மிட்வீக் மிரர் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டி கீழே முழுமையாகத் தரப்படுகிறது. முக்கிய விடயங்களில் புலிகளின் நிலைப்பாடுகளை ஊகித்துக் கொதள்ள இந்தப் பேட்டி உதவும் என்பதால் அதைத் தமிழில் தருகிறோம்.

ஆ-ா.

# இனச்சுத்திகரிப்பு இலங்கை அரசு புலிகள்

## ருத்ரகுமாரனின் அபிப்பிராயங்கள்

'சதாம் ஹவுஸில்' நடந்த கூட்டத்தில் பேசும் போது, இலங்கை வாழ் தமிழ்மக்கள் கேட்பதெல்லாம் அரசாங்கம் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது தான் என்று பேசினீர்கள். புலிகள், இலங்கையில் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் இந்த விடயத்தைக் கணக்கில் எடுக்கவில்லை என்று திரும்பத் திரும்ப கூறிவருகிறார்கள். புலிகள் உண்மையில் இதன் மூலம் எதனைக் கருதுகிறார்கள் என்பதை உங்களால் கூற முடியுமா?

சுயநிர்ணய உரிமையைப் பல்வேறு வடிவங்களில் நடைமுறைப்படுதத முடியும். சுயாட்சி, சமஷ்டி அல்லது கூட்டமைப்பு என்று எந்த முறையிலும் அதை நடைமுறைப்படுத்துவது சாத்தியம் இது உங்களுக்கு விவாகரத்து உரிமை இருப்பதைப் போன்றது. அந்த உரிமை இருப்பதனாலேயே நீங்கள் விவாகரத்துச் செய்து விடுவதில்லை. நான் ஒரு வடிவத்தை இப்போது தெரிவிக்க விரும்பவில்லை. முதலில் அந்த உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும். அதன் பிறகு வடிவம் பற்றிப் பேசமுடியும். சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொள்வது பேச்சுவார்த்தைக்கான இயங்கு நிலையை உருவாக்கும்.

புலிகள் ஒரு சமஷ்டித் தீர்வுக்குத் தயாராக இருக்கிறார்கள் என்று கூறுகிறீர்களா?

நான் ஒரு முடிவைத் தெரிவிக்காமலிருக்கவே விரும்புகிறேன்.

தமிழீழத்தை அடையும் பாதையில் புலிகள் இப்போது எவ்வளவு தூரம் முன்னேறி இருக்கிறார்கள்?

இதற்கு நான் பதில் கூற முடியாது.

அரசாங்கம் புலிகளால் போதியளவுக்கு பலவீனப்படுத்தப்பட்டால் அது பேச்சுவார்த்தைக்கு தயாராகி வரும் என்று கருதுகிறீர்களா?

இப்போது புலிகளுக்கும் அரசுக்குமிடையிலான பலத்தைப் பொறுத்தவரை ஒரு அசமத்துவம் நிலவுகிறது. இது ஒரு நல்ல உறவைக் கொண்டிருக்க உகந்தது அல்ல. பரஸ்பரம் திருப்தி தரக்கூடிய ஒரு பேச்சுவார்த்தைக்கு பல சமத்துவம் ஒரு அவசியமான நிபந்தனையாகும். பலம் கிட்டத்தட்ட சமமாக இருக்கும் போது ஒரு பேச்சுவார்த்தை சமநிலையில் நடக்கும். பல சமத்துவம் ஒரு சமத்துவ சூழ்நிலைய்யை உருவாக்கும்.

பலம் சமமற்று இருக்கும் போது, சக்தி வாய்ந்த ஒரு வெளிச்சக்தியின் தொடர்பானது சண்டையிடும் இரு பகுதியினரையும் பேச்சுவார்த்தை மேசையை நோக்கித் தள்ள வேண்டும்.

புலிகள் ஒரு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தைக் கோரியுள்ளார்கள். யாரை நீங்கள் மனதில் வைத்துக் கொண்டு இதைக் கேட்டுள்ளீர்கள்.

உண்மையில், எனக்கு இது பற்றித் தெரியாது.

ஆனால் இந்த நிலையில் என்ன வழி இருக்கிறது? ஒரு மத்தியஸ்தமா அல்லது பேச்சுவார்த்தைக்கு வாய்ப்பை ஏற்படுத்தும் தொடர்புபடுத்தலா நல்ல வழி? புலிகள் தொடர்பு படுத்தாளராக ஒருரை ஏற்றுக் கொள்வார்களா?

ஆம். நான் அப்படித் தான் நினைக்கிறேன். ஒரு தொடர்புபடுத்துனர் இருப்பாரானால் எமக்கு மத்தியஸ்தம் தேவையில்லை. இப்படியான ஒரு வழியை நாம் கவனத்திலெடுக்க வேண்டும் என்று நான் நனைக்கிறேன். இரு பகுதியினரும் பேச்சுவார்த்தை மேசைக்குஅழைக்கப்படுகிறார்கள் என்றால், யார் தொடர்புபடுத்துனர் என்பது முக்கியமற்ற ஒன்றாகி விடும்.

இலங்கையில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் பிரித்தானியாவுக்கு ஒரு பாத்திரம் இருக்கிறதா?

தனிப்பட்ட முறையில் நான் சொல்வேன், எந்த நாடும் ஒரு பாத்திரம் வகிக்க முடியும் என்று. பிரித்தானியா, முன்னர் காலனிய அதிகாரத்தைக் கொண்டிருந்ததால், அதற்கு ஒருவகையான தொடர்பு இருக்கிறது என்று நினைக்கிறேன்.

ஆனால் இன்றைய தொழிற் கட்சி அரசாங்கத்தின் பாராளுமன்ற உறுப்பினரான பரி காடினர் உங்களது மேடையிலேயே இலங்கையின் வரலாற்றுக்கு தன்னால் எதுவும் செய்ய முடியாது என்று கூறியிருக்கிறார். அப்படியிருக்க நீங்கள் எப்படி பிரித்தானியா இலங்கையின் இன்றைய பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதில் பங்காற்ற முடியும் என்று கருதுவீர்கள்?

எமக்கு வேறு வேறு அபிப்பிராயங்கள் உண்டு. பரி காடினருக்கும் எமக்கும், அவரது இது தொடர்பான கருத்துக்களுடன் எனக்கு உடன்பாடில்லை.

அப்படியானால், இலங்கையின் இன்றைய நிலையில் ஏதாவது வழியில் பிரித்தானியா செல்வாக்கு செலுத்த முடியும் என்று கருதுகிறீர்களா?

எந்தவொரு பெரிய மேற்கு நாட்டுச் சக்திக்கும் அப்படிச் செல்வாக்கு செலுத்த முடியும். அவர்கள் கொஸ்ஸாவா, பொஸ்னியா போன்ற இடங்களில் உள்ள நிலைமைகள் மீது செல்வாக்குச் செலுத்தியுள்ளனர். பூகோள அரசியல் மற்றும் பொருளாதார நலன்களின் காரணமாக, மேற்கு நாட்டு அரசாங்கங்கள் செல்வாக்குச் செலுத்தும் சக்தியை கொண்டுள்ளன.

புலிகளுக்கு எதிராக மேற்குலக சக்திகளை வென்றெடுப்பதில் இலங்கை அரசாங்கம் போதியளவுக்கு செயற்படவில்லையா?

மேற்குலகின் பூகோள அரசியல் மற்றும் வர்த்தக நலன்களுக்கு சர்வதேச சமூகத்தின் மாறுபட்ட எதிர்வினைகள் உதவக் கூடும். இலங்கை அரசாங்கம் 'சமாதானத்திற்கான யுத்தம்' என்ற கொள்கையை அதன் அரசியற் பொதியாக அறிவித்திருக்கிறது. அரசியலமைப்புச் சட்டம் தொடர்பான உத்தேச பொதியானது, பிரமாண்டமான இராணுவமயமாக்கலுக்கு ஒரு கொழுக்கியை வழங்கியுள்ளது.

வடக்கிலுள்ள பிரமாண்டமான புதைகுழிகள் தொடர்பான செய்திகளுக்கு இராணுவ தணிக்கை நிலவுகிறது. இன்னும் மேற்கு நாடுகள் இதைக் கவனித்ததாகத் தெரியவில்லை. அவர்கள் இது தொடர்பாகக் கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது சரியானதும் பிரக்ஞையுள்ளதும் தொடர்ச்சியை பேணவேண்டுமென்கிறதுமான அவர்களது கோட்பாட்டின் கோரிக்கையாக இருந்து வருகிறது. இன்று கொஸ்ஸாவாவில் செய்யப்படுவது இலங்கையிலும் செய்யப்பட வேண்டும். இலங்கை அரசாங்கத்தின் தீர்வுப் பொதி இன்னமும் புலிகளுக்கு கொடுக்கப்படாமல் இருப்பதே அரசாங்கம் இதை ஒரு அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்த விரும்புகிறது. இது தமிழ்ப்பிரச்சினைக்கு ஒரு இராணுவத் தீர்வை தரவே விரும்புகிறது என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது.

நீங்கள் இன்னமும் எனது கேள்விக்குப் பதிலளிக்கவில்லை. புலிகள் சர்வதேச ரீதியில் இருந்த ஆதரவினைப் பெருமளவுக்கு இழந்து விட்டார்கள் அல்லவா?

பிரித்தானிய கொள்கை வகுப்பாளர்கள் அந்த மாநாட்டில் இருந்தார்கள். முதல் முதல௹க ஒரு பிரித்தானிய வெளிவிவகார உத்தியோகத்தர் புலிகளது கூட்டமொன்றில் கலந்து கொண்டிருக்கிறார். எனவே, நாம் சர்வதேச சமூகத்தின் ஆதரவை இழந்து விட்டோம் என்று நான் நினைக்கவில்லை.

அடுத்த மாதம் இலங்கை வரவிருக்கும் பிரித்தானிய பிரதி வெளிவிவகார அமைச்சர் டெரிக் ஃபற்செனறின் வருகையையொட்டி, அங்கு சமாதான தீர்வொன்றுக்காக அவர் முயல்வதற்கான முயற்சிகள் செய்யப்பட வேண்டும் என்று கருதுகிறீர்களா?

நிச்சயமாக. பிரித்தானிய அரசுக்குத் தேவையான வளங்கள் இருக்கின்றன. அதனால் இலங்கை அரசாங்கத்தின் மீது அழுத்தத்தைப் பிரயோகிக்க முடியும். ஒருவகை மிரட்டல் இராஜதந்திரமான சேபியர் மீது குண்டு வீசியதே மிலோசேவிக்குகளை பலவந்தமாக பேச்சுவார்த்தை

— 20


## மீண்டும் புலிகளிடம் கிளிநொச்சி!









## காக்கை தீவு:

# சதுப்பு நிலமும் சமூக விரோதிகளும் !



ரீட்டா



ரீட்டாவின் சம்பவத்திற்குப் பிறகு நடாத்தப்பட்ட தேடுதலில் கண்டெடுக்கப்பட்ட வேறு சில உடைகள்

முகத்துவாரம் காக்கைத்தீவு கடற்கரையில் அண்மையில் நடைபெற்ற பாலியல் வல்லுறவு நிகழ்ச்சி முழு நாட்டையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கிய ஒரு நிகழ்ச்சியாக நடந்து முடிந்துள்ளது. புதுமணத் தம்பதிகளான ரீற்றா மனோகரன் தம்பதிகள் இக் கடற்கரையில் உலாவச் சென்ற வேளையில் கணவனைத் தாக்கிவிட்டு பலவந்தமாக இழுத்துச் செல்லப்பட்ட ரீற்றா, நால்வர் கோஷ்டி ஒன்றினால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார். கொழும்பில் இருந்து வரும் எல்லா தினசரிப் பத்திரிகைகளிலும் தலைப்புச் செய்தியாகவும், முன்பக்கச் செய்தியாகவும் வெளிவந்த இந்தச் செய்தி இலத்திரனியல் தொடர்பு சாதனங்களிலும் முக்கிய இடத்தைப் பிடித்துக் கொண்டது.

காக்கைதீவின் கடற்கரையினை அண்டியிருந்த காட்டுப் பகுதிகள் கொழும்பு மாநகரசபை, காக்கைதீவு பொதுமக்கள் ஆகியோரது கூட்டு முயற்சியால் துப்புரவாக்கப்பட்டது. கடற்கரையில் மின் கம்பங்கள் நாட்டப்பட்டு மின்சாரம் வழங்கபட்டதுடன், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அமைச்சர் பௌசியின் உத்தரவின் பேரில் பழைய பஸ்வண்டி ஒன்று நிறுத்தப்பட்டு அங்கு பொலிசார் இரவு பகலாக கடமையில் ஈடுபடுத்தப்பட்டும் உள்ளனர். காக்கை தீவு வாசிகளைக் கூட்டி பிரதிப் பொலிஸ்மா அதிபர் நடாத்திய கூட்டமொன்றில் அப்பகுதிக்கான மக்கள் கண்காணிப்புக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

பஞ்பாயைச் சேர்ந்த இருபத்தெட்டு வயதான ரீற்றாவின் மீதான பாலியல் வல்லுறவும் படுகொலையும் நடந்ததன் பின் காக்கைதீவு கடற்கரைப் பிரதேசம், ஒரு கடற்கரைக்குரிய சில அடிப்படை வசதிகளைக் கொண்டதாக - கல் ஆசனங்கள், தண்ணீர் தாங்கி, பொலிஸ் பாதுகாப்பு, மின்சார வெளிச்சம் - மாற்றப்பட்டுள்ளது வரவேற்கத் தக்க ஒரு விடயம் என்பதில் மறுபேச்சுக்கு இடமில்லை. ஆனால், இந்த ஆரவாரங்கள் எல்லாம் எத்தனை நாட்களுக்கு நீடிக்கப் போகின்றன? மீண்டும் இவை பழைய நிலைக்குத் திரும்ப மாட்டாதா? பெண்களை தொந்தரவு செய்பவர்களும், வழிப்பறிக்காரர்களும், சமூக விரோதக் கும்பல்களும் மீண்டும் வந்து விட மாட்டார்கள் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இருப்பதாகத் தெரியவில்லை. இந்தச் சந்தேகத்தை எழுப்பும் விதத்தில் சில அடிப்படையான பிரச்சினைகள் அங்கு இன்னமும் இருக்கவே செய்கின்றன.

கொழும்பு மாநகர சபையால் துப்புரவு செய்யப்பட்ட பகுதியில், புல்டோசர்களால் தள்ளிவிடப்பட்ட பற்றை பறுகுகள் மற்றும் மரங்கள் அங்கே அப்படியே இருக்கின்றன. அவை அப்புறப்படுத்தப்படுவோ, ஒன்றாக குவித்து எரிப்பதற்கு ஏற்ற விதத்தில் நடவடிக்கை எடுக்கப்படவோ இல்லை. சுத்தப்படுத்தப்பட்ட பிரதேசம் இப்போது வெளியாக இருந்தாலும் கூட, மீண்டும் அங்கே பற்றைகளும், பறுகுகளும் வரப்போகும். மழையுடன் மீண்டும் செழித்து வளர்ந்து விடும் என்பது குறித்து சுத்தப்படுத்தலில் ஈடுபட்டவர்கள் கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை.

இவை எல்லாவற்றிற்றிற்கும் மேலாக ரீற்றா கொல்லப்பட்டு வீசப்பட்ட சதுப்பு நிலப் பகுதியோ, அதில் மண்டி வளர்ந்திருக்கும் பற்றைகளோ சுத்தப்படுத்தப்படவில்லை. இந்தப் பகுதி நாரா (Nara) என்று அழைக்கப்படும் தேசிய கடல்வள ஆராய்ச்சி நிலையத்திற்கு சொந்தமான நிலப்பகுதியின் எல்லையில் வரும் பகுதியாகும். அந்தப் பகுதியிலும் வீசப்பட்டிருந்த சதுப்பு வாய்க்காலிலும் இப்போதும் பல பெண்களது ஆடைகளையும் பாத அணிகளையும் காணக் கூடியதாக இருக்கிறது. சில காலங்களுக்கு முன் இப்பகுதியிலிருந்து நிர்வாணமாக அலறியபடி நாரா நிறுவனத்தை நோக்கி ஓடிவந்த பெண்ணை அங்கு கடமையில் இருந்த பாதுகாப்பு ஊழியர்கள், பாதுகாத்து உடையும் கொடுத்து அனுப்பியிருக்கிறார்கள். துரத்தி வந்தவர்களுடன் சண்டையிட்டதில் ஒருவருக்கு கத்திக்குத்து காயமும் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. இவ்வாறு தப்பியோடிய பெண்களை தவிர கொல்லப்பட்ட பெண்கள் இன்னும் எத்தனை பேரோ யாரறிவார்? இவ்வாறு கொல்லப்பட்டிருக்கக் கூடிய பெண்களது சடலங்கள் பல அந்த சேற்றுப்பகுதிக்குள் இன்னமும் இருக்கலாம் என்று அங்குள்ள பலரும் அபிப்பிராயப்பட்ட போதிலும், அதைத் தோண்டிப் பார்க்கும் முயற்சியில் எந்த அதிகாரத் தரப்பினரும் முயன்றதாகத் தெரியவில்லை. இ.போ.ச., நாரா நிறுவனம், கரையோர பாதுகாப்புத் திணைக்களம் ஆகியவற்றுக்குச் சொந்தமான பகுதிகளுக்குள் வரும். இப்பகுதியைத் தோண்டினால் பல அப்பாவிகளின் கொலைகள் பற்றிய தடயங்கள் அம்பலத்திற்கு வர வாய்ப்புண்டு. ஆனாலும், அதுபற்றி யாரும் அக்கறை காட்டுவதாக தெரியவில்லை. அவை துலக்கப்படாத மர்மங்களாக என்றென்றைக்குமாக மறைக்கப்பட்டு விடுவதற்கான வாய்ப்பகளே அதிகமாக இருக்கின்றன.

இந்த நிகழ்ச்சியில் உண்மையைக் கண்டுபிடிப்பதிலும், குற்றவாளிகளைத் தண்டிக்க நடவடிக்கை எடுப்பதிலும் இருந்த அக்கறையை விட அரசியல் தமாஷா காட்டுவதிலும், பிரச்சினையை அமுக்குவதிலுமே கவனம் செலுத்தப்பட்டிருப்பதாக தாம் சந்தேகிப்பதாக காக்கைதீவு வாசி ஒருவர் தெரிவித்தார். பெயர் குறிப்பிட விரும்பாத அவர் இங்கு நடந்த சுத்தப்படுத்தல் நிகழ்வை கண்டித்தும் அவற்றை காடழிப்பு நடவடிக்கை, கடலரிப்பை தூண்டும் நடவடிக்கை என்று சாடியும் உடனே தலையிட்டு அதை நிறுத்துமாறு கோரியும் பலர் ஜனாதிபதிக்கும், பிற மேலிடங்கட்கும் ஃபக்ஸ் அனுப்பிய வருவதாக பலர் தாம் கேள்விப்பட்டதாக கூறினார். இங்கு இருப்பது காடு என்று பத்திரிகைகள் எழுதியுள்ள போதும் அது உண்மையில் ஒரு காடு அல்ல பற்றைகளும், சதுப்பு நில சிறுதாவரங்களும் கொண்ட இந்தப் பகுதி அப்பிரதேச ஆரோக்கியத்திற்கு சவாலாக இருந்துவரும் ஒன்றாகும். கடலரிப்பு என்று கூறுவது உண்மையில் நகைப்புக் கிடமானது. முதலாவதாக இந்த தாவரங்களால் கடலரிப்பை நிறுத்த முடியாது. இரண்டாவதாக இவை கடற்கரை ஓர தாவரங்கள் அல்ல. மூன்றாவதாக கொழும்பு துறைமுகம் முதல் களனி ஆறு கடலில் கடக்கும் சங்கமப் பகுதி வரையான கடற்கரை கடல் அரிப்புக்குரிய பகுதி அல்ல என்பதை அடிப்படை விஞ்ஞானம் தெரிந்த எவரும் புரிந்து கொள்வர். ஆனாலும், இந்தக் 'காடு' அழிக்கப்படுவதை கடல் அரிப்புக்கு துணை போகும் செயல் என்று கண்டிக்கிறார்கள்.... இப்படிச் சொல்பவர்களுக்கு இந்தக் 'காடு' இருப்பதில் நிறைய லாபம் இருக்கிறது' என்கிறார் அவர்.

'இப்பகுதியில் போதைவஸ்து (தூள்), விபச்சாரம், கள்ளக்கடத்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கு இந்தக் காடு நிறைய வசதியாக இருக்கிறது. ஆளும் அரசியல்கட்சிகளுடன் தொடர்புள்ள, அதன் செல்வாக்குள்ள சிலர் இந் நடவடிக்கைகளுடன் சம்பந்தப் பட்டிருக்கிறார்கள் என்று சந்தேகிக்கப்படுகிறது. அவர்களது தொழிலுக்கு ஆபத்து வரும் என்பதாலேயே அவர்கள் இதை எதிர்க்கிறார்கள்' என்கிறார் இன்னொரு காக்கை தீவு வாசி.

இந்த பாலியல் வல்லுறவு சம்பவம் வெளியே வந்ததற்குக் காரணம் அவர்கள் கணவன் மனைவியாக இருந்ததும், கணவனது தகப்பனாருக்கு பொலிசில் செல்வாக்கு இருந்ததும், பெண் இந்தியப் பிரஜையாக இருந்ததுமே. இவ்வாறல்லாதிருந்தால் இந்தச் சம்பவமும் அந்தச் சகதிக்குள் கொல்லப்பட்ட பெண்களுடன் சேர்ந்து புதையுண்டிருக்கும்.

'கொலையாளிகள் மற்றும் சமூக விரோதிகள் பாவித்திருக்கக் கூடிய பாதைகள், இருப்பிடங்கள் என்று பல இடங்களை இந்தப் பற்றைக் காட்டுக்குள் காணக்கிடக்கிறது. ஆயினும், அவற்றை முழுமையாகச் சோதனைக்கு பொலிசார் உட்படுத்தவில்லை. ரீற்றாவின் கொலைகரர்களைக் கண்டுபிடித்தவுடன் தமது கடமை முடிந்தது என்று அவர்கள் போய்விட்டார்கள். ஆனால், கொழும்பில் காணாமல் போன எலும்புக் கூடுகளைக் கூட கண்டெடுக்க நிறைய இங்கே வாய்ப்பிருக்கிறது' என்று அங்கலாய்க்கிறார் இன்னொருவர்.

காக்கைதீவு கடற்கரை திரும்பவும் பழைய கலகலப்பு நிலைக்கு திரும்பிவிட்டது. மாலையில் அங்கு வருவோர் தொகை வழமைபோல் அதிகமாகவே இருக்கிறது. ரீற்றா கொலையால் எழுந்த ஆத்திரமும் ஆவேசமும் போய் அது இப்போது ஒரு சோகக் கதையாக கதைக்கப்படும் நிலை தோன்றிவிட்டது. காக்கை தீவு வீடுகளுக்கு கடந்த வாரம் வருகை தந்த பொலிசார் இச்சம்பவம் தொடர்பாக காக்கைதீவு வாசிகளிடம் தகவல்கள் கேட்டார்கள். அவர்களது கேள்வியில் 'ரீற்றா பற்றி வேறு தகவல் தெரியுமா?' என்ற கேள்வியே பிரதானமாக இருந்தது.

'இந்தக் கேள்வியும், வெலிக்கடையில் கைதிகள் தாக்கப்பட்டதும் பலத்த சந்தேகங்களைக் கிளப்புகிறது. குற்றவாளிகள் நால்வரும் காக்கைதீவு வாசிகளைப் பொறுத்தவரை வெறும் கருவிகள் மட்டுமே. அவர்களுக்குப் பின் செல்வாக்கான பலமிக்க கரங்கள் இருக்கின்றன. அவை பொலிசையும், பிற அதிகார அமைப்புகளையும் கூட கட்டுப்படுத்தும் சக்தி மிக்கவையாக இருக்கலாம். நீதிமன்றுக்கு இக்கைதிகள் அழைத்து வரப்படும்போது அவர்கள் உயிருக்கு விஷேட பாதுகாப்பு வழங்கப்படுவது அவசியம். இல்லாவிட்டால் இந்தப் பலமிக்க சக்திகள் தொடர்பான உண்மைகளில் சில துளிகளையாவது இனங்காணமுடியாமல் போய்விடலாம்' என்று நீர்கொழும்பு நீதிமன்ற சூட்டுச்சம்பவத்தை நினைவூட்டிக் கூறினார் நடுத்தர வயதான ஒரு தனியார் துறை ஊழியர்.

குற்றவாளிகட்கு மரணதண்டனை வழங்குவதுபற்றி பரவலான அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்பட்டன. பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சிகளிலும் சட்டத்தை மரண தண்டனை வழங்குவதற்கேற்ற விதத்தில் மாற்ற வேண்டும் என்று அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன. 'அது நியாயமானதாக இருக்கலாம்.. ஆனால், நீதித்து றையில் அரசியல் ஆதிக்கம் நிலவும்வரை எந்தச் சட்டம் வந்துதான் எதைச் செய்ய முடியும்' என்று அபிப்பிராயப்பட்டார் ஒரு இளைஞர்.

ஆக, மொத்தத்தில் எழும் கேள்வி இதுதான்:

இந்தக் கடற்கரை இன்றுள்ள நிலை எத்தனை நாளைக்கு நீடிக்கும்?

பொன்-சிறீசி ▫



# சமாதானத்துக்கான பம்மாத்து:

## பொ.ஐ.மு. பல்கலைக்கழக ஆசிரியர்கள்(யாழ்.), போலி ஜனநாயகவாதிகள், மற்றும் புலிகள் பற்றி சில குறிப்புகள்

அண்மையில் இந்தப்பத்தியாளர் இனங்களுக்கிடையே நல்லுறவு பற்றித் தீவிர அக்கறை காட்டும் ஒரு நண்பருடன் பேசிக் கொண்டிருக்கும்போது அவர் தெரிவித்த கருத்து இது:

"உண்மையில் த.வி.புலிகள் சமாதானத்தை விரும்புகிறார்கள் என்று எதை வைத்து நாம் நம்ப முடியும்? தமிழீழம் என்ற ஒரு தனிநாட்டுக்காக போராடுவதையே தமது இலட்சியம் என்று கூறும் அவர்கள், தமிழீழத்தைத் தவிர பிரச்சினைக்கு வேறு தீர்வில்லையென்று கருதியபடி யுத்தத்தை நடாத்தும் போது எப்படி அரசாங்கத்திடம் யுத்தத்தை நிறுத்துமாறு நாம் கோர முடியும்?"

அவரது இந்தக் கருத்தையே இன்றைய சகல சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகளும் பிரதிபலிக்கின்றன. எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, யுத்தம் நடந்து கொண்டிருக்கும் அதேவேளை புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தலாம்: நடத்துவது அவசியம் என்று சொல்லப்போக, அவரை புலிகளின் கையாள் என்று சாடியதுடன் சில பத்திரிகைகள் அப்படிச் செய்வது புலிகளுக்கு அவர்களது யுத்தத்தைத் தொடர்ந்து நடத்த வாய்ப்புக் கொடுப்பதாகும் என்றும் சாடியிருக்கின்றன. புலிகளுடனான சமாதானப் பேச்சு ஒன்று ஏற்படுமானால் அது அவர்களை இராணுவ ரீதியில் பலப்படுத்த நாம் உதவுவதே அன்றி வேறல்ல என்று அவை அடித்துக் கூறுகின்றன.

அண்மையில் பி.பி.சி. வானொலிக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் அமைச்சர் கதிர்காமர் அரசாங்கம் புலிகளுடன் பேசுவதற்குத் தயாராக எப்போதும் சமாதானக் கதவுகளைத் திறந்து வைத்திருக்கின்றது என்று தெரிவித்திருந்தார். தமிழ் மக்களின் கேள்விகட்குப் பதில் என்ற பேரில் தமது அரசியல் பிரச்சாரத்திற்காக ஜனாதிபதி சந்திரிகா கடந்த வாரம் ரூபவாஹினியில் நடாத்திய பதிலளிப்பு நிகழ்ச்சியிலும், தாம் சமாதானப் பேச்சுக்கு தயார் என்று அறிவித்திருந்தார். ஆனால், இந்தப் பேச்சுவார்த்தைக்கு அவசியமான நிபந்தனையாக புலிகள் தாம் தமிழீழத்தைக் கைவிடத் தயாராக இருப்பதாகவும், வன்முறை பிரச்சினைக்குத் தீர்வல்ல என்று ஏற்றுக் கொள்வதாகவும் ஒப்புக் கொண்டு பேச வர வேண்டும் என்று அமைச்சர் கதிர்காமர் தெரிவித்திருந்தார்.

யுத்தத்தைத் தொடங்கியது புலிகள் 'என்பதாலும், சமாதானப் பேச்சைக் குழப்பியது அவர்கள் என்பதாலும், இன்றைய யுத்தத்திற்கான முழுப்பொறுப்பும் அவர்களதே என்கிறது அரச தரப்பு. மனித உரிமைகட்கான யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்களும், இதைத் திருப்பித் திருப்பிச் சொல்லி வருகிறார்கள். தவிரவும், புலிகள் ஒரு போதும் சமாதானத்தை விரும்பவில்லை என்றும் கூறிவருகிறார்கள். ஆக, புலிகளுடன் யுத்தம் புரிவதைத் தவிர இப்பிரச்சினையைத் தீர்க்க வேறு வழியில்லை என்பது அரசாங்கத்தினதும். கொழும்பு புத்திஜீவிகளதும் நிலைப்பாடு.

அப்படியானால், புலிகள் முற்றாக அழியும் வரை அல்லது அவர்கள் இயங்காமல் போகும்வரை சமாதானம் பிறப்பதற்கு வழியில்லை என்றாகிறது.

தமிழீழத்திற்கு மாற்றான ஒரு நியாயமான தமிழ் மக்களின் அபிலாஷைகளைத் திருப்தி செய்யக்கூடிய ஒரு தீர்வினை அரசாங்கம் முன் வைத்தால் அதை பரிசீலிக்கத் தாம் தயார் என்று புலிகள் பல தடவை அறிவித்திருந்தார்கள். அத்தகைய ஒரு தீர்வு சுயநிர்ணய அடிப்படையில் அமைந்ததாக இருக்க வேண்டும் என்றும் அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். சுயநிர்ண உரிமை என்பது சுய அழிப்புக்கான உரிமை என்று, வியாக்கியானம் செய்யும் மனித உரிமைகட்கான யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர்களைத் தவிர மற்றெல்லோரும் பொதுவாகவே இது நியாயமான ஒரு கோரிக்கை என்றே கருதுகின்றனர்.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க அவர்கள் பாராளுமன்றத்தில் தமக்கு 16 வாக்குகள் இல்லாதபடியால் தான் இன்னமும் சமாதானப் பொதியை சட்டபூர்வமாக மாற்ற முடியாதுள்ளது என்று கவலை தெரிவித்திருக்கிறார். ஆனால், இந்தப் பதினாறு வாக்குகளைப் பெற்று அதைச் சட்டமாக்கினாலும், அது இனப்பிரச்சினைக்குத் தீர்வைத் தருமா என்ற கேள்விக்கு அவர் என்ன பதில் வைத்திருக்கிறாரோ தெரியவில்லை.

இன்று பாராளுமன்றத்தில் அவருக்கு ஆதரவு தரும் எந்தத் தமிழ்க் கட்சியும் அவரது இந்தத் தீர்வுப் பொதி பிரச்சினையைத் தீர்க்கும் என்று ஒப்புக் கொள்ளவில்லை. அப்படியிருக்க 16 வாக்குகளைக் காரணம் காட்டி தீர்வுப்பொதி நடைமுறைக்கு வராமல் இருப்பதை சமாதானத்திற்காக அரசு அக்கறையாக செயற்படவில்லை என்ற குற்றச்சாட்டுக்குப் பதிலாக எப்படிச் சொல்ல முடியும்?

ஆனால், அவர் சொல்கிறார். அவர் இப்படிச் சொல்வதை, ஒன்றில் அவர் வெறும் கற்பனையில் பேசுகிறார் என்று சொல்ல வேண்டும். அல்லது அவர் இந்த இனப்பிரச்சினையை ஒரு சில்லறைப் பிரச்சினையாகவே கணக்கெடுத்து வைத்திருக்கிறார் என்று கொள்ள வேண்டும்.

த.வி.புலிகள் தமிழீழக் கோரிக்கையையும், ஆயுதங்களையும் கைவிட்டுவிட்டு சமாதானப் பேச்சுக்கு வந்தால் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்ந்து விடும் என்பது சிலரது நம்பிக்கை. ஆனால், இதே நம்பிக்கையுடன், இதே வேலையை செய்த பல தமிழ்க்கட்சிகள் தாம் செய்த தவறுக்காக இன்று கழிவிரக்கப்படுவதை இவர்கள் காண்பதில்லை. மனித உரிமைகட்காகவும், இனங்களுக்கிடையே சமாதானத்திற்காகவும், அக்கறைப்படும் அதேவேளை நாட்டின் அரசியல் யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளும் நேர்மையும் அவசியம். அந்த நேர்மை இல்லாத போது, பக்கச்சார்பான அபிப்பிராயங்களை அரசியல் முடிவுகளாக நினைக்கும் பேதமை அவர்களுக்கு வந்துவிடுகிறது.

அரச படைகளால் நடாத்தப்படும் பாலியல் வன்முறைகள், கொலைகள், சூறையாடல்களை யுத்தத்தின் போது ஏற்படும் தவறுகளாக இனங்காண முடிகிற இந்த நேர்மை, த.வி.-புலிகளின் நடவடிக்கைகளை ஆய்வுசெய்வதில் இல்லாமல் போய்விடுகிறது. புலிகளது தவறுகள், அல்லது ஜனநாயக விரோத நடவடிக்கைகள் அல்லது அரசியல் படுகொலைகளை, தமிழ் மக்களின் அரசியல் விடுதலைக்கான போராட்டத்தின் மோசமான தவறுகளாகக் காண அவர்களுக்கு முடிவதில்லை. அது அவர்களுக்கு சுயநிர்ணய உரிமையை, அவர்களது அரசியல் உரிமையை எல்லாவற்றையுமே நிராகரிக்கப் போதுமான ஒரு நியாயமாகி விடுகிறது.

விடுதலைப் புலிகளின் அரசியலுடன் அதன் போராட்டப் பாதையுடன் உடன்பட முடியாதவர்கள், அந்த இயக்கத்தையும், அதன் நடவடிக்கைகளையும், இவ்வடிப்படையில் எதிர்ப்பவர்கள். எல்லோரும் தமிழ் மக்களின் அரசியல் உரிமைக்கும், விடுதலைக்கும் எதிரானவர்கள் அல்ல என்பதைப் புலிகள் புரிந்து கொள்வதில்லை. எதிர்ப்பவர்கள் எல்லோரும் எதிரிகள் என்ற கருத்து மேலோங்கி இருப்பதன் விளைவு இது. இவ்வாறு தான் புலிகளை எதிர்க்காதவர்கள், அதை நிராகரிக்காதவர்கள் எல்லோரும் புலிகளின் ஆதரவாளர்கள் என்று கருதுகிறது அரசாங்கம். ஏன் மனித உரிமைகட்கான யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்கள் கூட அப்படித்தான் நினைக்கிறார்கள். இப்படி நினைப்பதால், இவ்வாறான சமாதான ஜனநாயக விருப்பமுள்ளவர்கள் எல்லோரும் தம்மை அறியாமலேயே அரசாங்கத்தின் சார்பானவர்களாகப் போய் நிற்கிறார்கள். அவர்களது தர்க்கம் அவர்களை அங்கு கொண்டு போய் நிறுத்தி விடுகிறது.

ஆனால், இன்றைய அரசியல் யதார்த்தம் அது அல்ல. இன்றைய யதார்த்தம், அரச சார்புமற்ற புலிசார்புமற்ற இன்றைய ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலையை விரும்புகிற ஜனநாயகவாதிகளைக் கொண்ட ஒரு அணியையும் கொண்டுள்ளது. இவர்கள் புலி சார்பானவர்களல்ல. ஆனால், எதிர்ப்பானவர்களுமல்ல. புலிகள் தமிழ் மக்களின் அரசியலை, உரிமைகளை உயர்த்திப் பிடிக்கும் ஒவ்வொரு தடவையும் அதை ஆமோதிக்கிறார்கள். அவர்கள் இவற்றுக்கு எதிராக போகக் கூடிய நடவடிக்கையில் இறங்கும் போது அதைக் கண்டிக்கிறார்கள்.

அதேபோல் அரசாங்கம் சிங்கள பேரினவாத அரசாங்கமாக இருக்கும்வரை அதை எதிர்க்கிறார்கள். அதன் இன ஒதுக்கல், இன அழிப்பு யுத்தம் போன்ற நடவடிக்கைகளை எதிர்க்கிறார்கள். அதேவேளை அரசாங்கக் கட்சிகளுக்கிடையிலான தன்மை வேறுபாடுகளை இனங்காணாத குருடர்களாக அவர்கள் இல்லை.

சந்திரிகா அரசாங்கம் வந்த போது, அது ஐ.தே.கவிடமிருந்து வேறுபட்டிருந்த நல்ல அம்சங்களுக்காக அதை வரவேற்ற போதும், அவர்கள் எக்காரணம் கொண்டும் தம்மை அதனுடன் இணைத்துக் கொள்ளவிரும்பவில்லை. அது தன்மையில் அதே இனவாத, ஜனநாயக விரோத இயல்பினைக் கொண்டிருக்கிறது என்பதை அவர்கள் அறிந்தே இருந்தார்கள். அரசாங்கம் புலிகளின் மீது பொறுப்பைப் போட்டு விட்டு யுத்தத்தில் இறங்கிய போது அவர்களால் அதை சமாதான யுத்தம் என்று வரவேற்க முடியாமல் போனதும், இன்னொரு ஆக்கிரமிப்பு யுத்தமே அது என்று கூறியதும் இந்த அடிப்படையில் தான்.

இந்த யதார்த்தம் மனித உரிமைக்கட்கான யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்கட்கோ, மற்றும் மேற்கூறிய ஜனநாயகவாதிகட்கோ புரிவதில்லை. அவர்களுக்கு லங்காதீப ஜனநாயகம் பேசுவதாக தோன்றும். (இலங்கை இராணுவத்தை தேசிய இராணுவம் என்றும், அந்தத் தேசிய இராணுவத்தை ஊக்குவிப்பது தேசியக் கடமை என்றும், இந்திய எல்லைச் சண்டையின் போது இந்தியப் பெண்கள் தமது நகைகளை அடகு வைத்து இராணுவத்துக்கு உதவியது போல இங்கும் உதவ வேண்டும் என்ற சாரப்படவும் எழுதுவது தான் அதனது ஜனநாயகம். பார்க்க லங்காதீப ஆசிரிய தலையங்கம்.-ஒக்23) சரிநிகர் புலிக்கு வால்பிடிப்பதாகத் தோன்றும்: அரசாங்கம் சமாதானத்திற்காகவே யுத்தம் செய்வதாகத் தோன்றும்.

இது ஒரு துயர்நிறைந்த நிலை.

என்னுடன் பேசிய நண்பர் இந்த ரகத்தினைச் சார்ந்தவர் அல்ல. ஆனால், இந்த ரகத்தினரின் கருத்துக்களால் குழம்பிப் போனவர்.

அரசாங்கத்தை யுத்தத்தை நிறுத்துமாறு கோருவது அவசியம், ஏனென்றால், இது வெறும் புலிகளுக்கு எதிரான யுத்தமல்ல. தவிரவும், புலிகளுக்கு மட்டுமல்ல, இனப்பிரச்சினைக்கு சரியான தீர்வொன்றை அரசாங்கம் மனப்பூர்வமாக வெளியிடாத வரை தமிழீழம் தேவை என்று கோரிப் போராடுவதற்கான உரிமையும் அவசியமும் யாருக்கும் இருக்க முடியும். ஏனென்றால், இந்த நாட்டில் அமைதி நிலவுவதற்கு அதுவும், ஒரு தீர்வாக இருக்க முடியும் என்ற அவர்களது நம்பிக்கையை மறுக்க எந்தப் பலமான ஆதாரங்களும் இல்லை.

அதேவேளை ஆயுதமேந்திப் போராடாமல் உரிமைகளைப் பெற முடியும். பாராளுமன்ற ஆசனங்களின் பலத்தால் அதைச் சாதிக்க முடியும் என்று நம்புவோருக்கு அப்படிச் செய்ய நிச்சயம் உரிமை இருக்கிறது.

புலிகள் சமாதானத்தை விரும்பாவிட்டால் என்ன? சமாதானத்தை விரும்பும் மக்கள் பெரும்பான்மையாக இருக்கிறார்கள். அவர்களுக்கான நேர்மையான ஒரு வழியை அரசாங்கம் முன்வைக்கட்டும். நொண்டிச்சாட்டுக்களை விட்டுவிட்டு உருப்படியான ஒரு தீர்வை முன் மொழியட்டும். அதை தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் மத்தியில் எடுத்துச் செல்லட்டும். அதற்குப் பிறகு புலிகளைப் பற்றியும், சிங்கங்களைப்பற்றியும் பேசலாம்.

அதுவரை நாம் சமாதானத்திற்காகவே நிற்கிறோம் என்ற சொல்வதை விட பெரிய பொய்யை யாரும் சொல்ல முடியாது என்பது மறுக்க முடியாத ஒரு உண்மையாகவே இருக்கும்!





வடக்கு கிழக்கு யுத்தத்தில் சிக்கிக் கொண்ட எல்லைக்கிராமங்கள் தொடர்பான தகவல்களைத் தேடும் பிரஜைகள் ஆணைக் குழு, கடந்த வார இறுதியில் பொலன்னறுவை மாவட்டத்தில் பன்சல்கொட, மற்றும் வெலிஓயா ஆகிய பிரதேசங்களில் சாட்சிகளை விசாரித்தது. அச்சந்தர்ப்பத்தில் சாட்சி வழங்கவென மகாதலகொடல்ல மற்றும் பன்சல்கொடல்ல, சுங்காவில, அல்லாமுன, பம்புரன, அக்பர்புர, குருகொடல்ல, நிக்கஹேன, செவனபிட்டிய, சோறிவில்ல, நாமல்பொகுன, அசேலபுர ஆகிய பிரதேசங்களில் பலர் வருகை தந்திருந்தனர். சுனிலா, வைத்தியர் ஜேயெல் பெர்னாந்து மற்றும் அனோமா ராஜகருணா ஆகியோர் பங்குபற்றினர்.

**''ஆண்கள் கிராம பாதுகாப் புக்குச் செல்கின்றனர். பெண் பிள்ளைகள் பாடசாலையில் இருந்து விலகுகின்றனர்.''**

*காந்திஹேமலதா*
*- வெலிகந்த மகா வித்தியாலயம்.*



''நான் வெலிகந்த மகா வித்திலயாலயத்தில் 13ம்ஆண்டு கலைப் பிரிவில் படிக்கின்றேன். எமக்கு உயர்தரத்தில் விருப்பமான பாடங்களைக் கற்கும் வாய்ப்பில்லை. இருக்கும் பாடங்களைத் தான் கற்க வேண்டியுள்ளது. அப்பாடங்களைக் கற்பிக்க ஆசிரியர்கள் இல்லை. எமது பாடசாலையில் விஞ்ஞானப் பிரிவில் கற்கும் எட்டுப் பேர் உள்ளனர். அவர்களுக்கு சாதாரண ஆசியர்களே கற்பிக்கின்றனர். மகாவலி அதிகார சபை அவர்களுக்கு சம்பளம் வழங்குகின்றது. பௌதீகம், இரசாயனம், உயிரியல் போன்ற பிரிவுகளுக்கு ஆய்வுகூடம் இல்லை. எமது பாடசாலையில் ஆண்பிள்ளைகள் பகல்வேளையில் பாடசாலைக்கு சென்று விட்டு இரவில் கிராமத்தைப் பாதுகாக்கச் சென்று விடுவர். அவர்கள் 15, 16வயதாகும்போது படையில் சேர்ந்து கொள்கின்றனர். பாடசாலைக்குச் செல்லும் பெண் பிள்ளைகள் 16, 17 வயதுகளில் இராணுவத்தினரை மணம் முடித்துக் கொள்கின்றனர்.''

**''எல்லைக் கிராமங்களின் தமிழ் மக்கள் இரு பக்கத்தாலும் தாக்குத லுக்குள்ளாக்கப் படுகின்றார்கள்.''**

*= வைத்திய பேராசிரியர்*
*எல்.டி.ஹேமச்சந்திர, திம்புலாகல.*



''நாமல் பொக்குன எல்லைக் கிராமத்தில் வசிக்கும் தமிழ் மக்கள் சிங்கள மக்களை விட வறுமையில் வாடுகின்றனர். இராணுவமும், சுற்றி வளைப்புக்களை மேற்கொண்டு அவர்களைக் கைது செய்து பல நாட்களுக்கு தடுத்து வைக்கின்றது. எமது கிராமத்தின் பிரபல வைத்தியரான கணேசன் அவர்களை புலிகள் பல தடவைகள் தாக்கியுள்ளனர். கை, கால் உடைந்த இராணுவத்தினருக்கு அவர் சிகிச்சை அளிக் கின்றார் என்பதே காரணமாகும். பாரம்பரிய வைத்தியர்களான எமக்கு சிங்கள, தமிழ் நோயாளர்கள் என இன வேறுபாடு பார்க்கத் தெரியாது''.

**''நான் தண்ணீர் குடிக்கும் ஆற்றில் யானைகள் அடித்துச் செல்லப்படு கின்றன.''**

*ஆலோக்க ஹேரத் - மலித்த.*



''நான் மலிந்த பாடசாலைக்குச் செல்கிறேன். ஆண்டு 3 படிக்கிறேன். எமது பாடசாலையில் தலைமை ஆசிரியரும், இன்னும் ஒரு ஆசிரியரும் மட்டுமே உள்ளனர். தலைமை ஆசிரியருக்கு சுகமில்லாமல் கடந்த இரு மாதங்களாக பாடசாலைக்குச் சமுகமளிக்க வில்லை. இதனால் பாடசாலை மூடிக் கிடந்தது. அக்காலத்தில் நாம் மதுரங்கல பாடசாலைக்குச் சென்றோம். அப்பாடசாலைக்கு காட்டு வழியில் 3, 4 மைல் தூரம் நடந்து செல்ல வேண்டும். அவ்வழியில் செல்லும்போது வெடிச்சத்தங்கள் கேட்பதால், சில பிள்ளைகள் வீடுதிரும்பி விடுவர். நான் அடுத்த வருடம் ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். என்னுடன் சரியாக 8 பிள்ளைகள் படிக்கின்றனர். புள்ளிகளை எடுத்துக் கொண்டால், கண்டி 126, பொலன்னறுவை 138. எமது பாடசாலைக் குழாய்களில் குடிக்க உகந்த நீர் வருவதில்லை. தண்ணீர் குடிக்க ஆற்றுக்குப் போகவேண்டும். இவ்வாற்று நீரில் யானைகளும் அடித்துச் செல்லப்படுகின்றன.''

# ''நாங்கள் அனைவரும் யுத்தத்தை புறமொதுக்கிவிட்டு வந்த மனிதர்கள்''

## பொலநறுவை மாவட்ட பன்சல்கொடல்ல, வெலிஓய எல்லைப்புற கிராமவாசிகள்



**''எனது கணவர் சென்றவர் சென்றவர் தான்.''**

*எஸ். சீலவதி, மகாத்தலை, கொலவேவ.*

''எனது கணவர் டி.ஆர். மத்துமபண்டா, 1989.01.07 திகதியிலிருந்து காணாமல் போயுள்ளார். அன்று பகல் 2மணியளவில் இராணுவத்தினரால் பஸ் ஒன்றுக்குள் ஏற்றப்பட்டார் என பார்த்தவர்கள் கூறுகின்றனர். இராணுவத்தினர் மீதிருந்த பீதியினால், பொலிசாருக்கும் முறைப்பாடு செய்யவில்லை. இதனால், மரண சான்றிதழும், நலன்புரி உதவிகளும் கிடைக்கவில்லை. அச்சம்பவம் நடைபெறும் போது அவருக்கு வயது 50. அவர் ஆறு பிள்ளைகளின் தந்தை. ஒரு மகன் 1996 வலிப்பு நோய் வந்து இறந்து போனான். நான் கூலிவேலை செய்து பிள்ளைகளைக் காப்பாற்றுகின்றேன். அவ்வாறு இல்லாவிட்டால் மருந்து இல்லாமல் பிள்ளைகள் இறந்து விடும்.''



**''எமது மருந்தகத்தில் கிருமிநாசினிகளும் விற்கப்படுகின்றது.''**

*உபாலி திசாநாயக்கா- விஜேயபுர.*

''இங்கு தெலிசீமியா நோய் உள்ளது. அதைத் தேடிக் கண்டு பிடிக்கவும் வழியில்லை. வைத்தியசாலை மிகத் தூரத்தில் உள்ளது. விசேட வைத்தியர் பொலன்னறுவையில் மட்டுமே உள்ளார். இங்கு இரண்டு வைத்தியர்கள் உள்ளனர். ஒருவர் தோட்டப் பகுதியில் வேலை செய்த இராசையா. நாம் அவரை கமகே என்று தான் அழைப்போம். அவர் மட்டும் தான் ஓரளவு தகுதியானவர். மருந்து கலவை செய்தவர். அவரது மருந்தகத்தில் கிருமிநாசினிகள், டயர் என்பனவும் விற்பனைக்குள்ளன. நாம் பயங்கரவாதத்திற்குள் விடப்பட்டவர்கள். புலிகள் எம்மைச் சுட்டுக் கொன்று விடுவர். சாகும் சந்தர்ப்பம் தந்துள்ளனர் அவ்வளவே.

**''எனது அம்மா கடன் வாங்கி செயற்கைக் கால் ஒன்றை வாங்கித் தந்தார்.**

*கே.டபிள்யூ.உபசேன - அசேலப்புர.*

''நான் ஒவ்வாரு இடமாகச் சென்று முடிதிருத்தும் வேலை செய்வதோடு கிராமப் பாதுகாப்பு சேவையிலும் ஈடுபடுகிறேன். ஒரு நாள் இரவு கிராமத்தைக் காவல் செய்து விட்டு காலை வீட்டுக்கு வரும் போது புலிகள் பொலிஸ் காவலரணை கைப்பற்றியிருந்தனர். தப்பியோடும் புலிகளை விரட்டிச் செல்லுமாறு காவலரண் ஓ.ஐ.சி. அவர்கள் கூறினார். இதன்படி ஓடும்வேளை கண்ணிவெடியில் அகப்பட்டு எனது காலை இழந்து விட்டேன். கையொன்றும், கண்ணும் பலத்த காயத்துக்கு உள்ளாகின. ஆறு மாதங்களுக்கு பின்னர் ரூ. 75 ஆயிரம் நஷ்டஈடு கிடைத்தது. அதுவரை பெற்ற கடனை அடைத்தவுடன், மிகுதிப் பணம் எஞ்சவில்லை. அம்மா கடன் வாங்கி செயற்கைக் கால் ஒன்றை வாங்கித் தந்தார். இப்பொழுது அக்கடனைக் கொடுக்க முடியாது தவிக்கிறேன்.''

**''வயல் கிடைத்தாலும் வயலுக்குச் செல்ல வழியில்லை.''**

*ஜயலலிதா - மதுரங்கல.*

''நாம் செய்வது வயல் வேலை. மகாவலியில் 1 1/2 ஏக்கர் நிலம் கிடைத்தாலும் வயலுக்கு செல்வதற்கு வழியில்லை. எமது கிராமத்தில் 25 தமிழ்க் குடும்பங்கள் உள்ளன. அவர்கள் சிங்களக் குடும்பங்களுடன் எவ்வித பிரச்சினைகளும் கொண்டிருக்கவில்லை. கிராமத்தில், சிறுவர்கள் பாடசாலைக்கு வயல் வழியில் தான் செல்கின்றனர். மழைக்காலம் வந்தால், பாடசாலைக்குச் செல்லமுடியாது. வயல்களில் நீர் நிறைந்து விடும். பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்ல பாதை ஒன்றை அமைத்து தாருங்கள் என்பதே நான் முன் வைக்கும் கோரிக்கை.''

தமிழில் : ரத்னா

நன்றி : யுக்திய

பொலிஸ் பதிவுத் துண்டு:

# கொண்டு செல்லத் தேவையில்லை, எனினும் கொண்டு செல்வது நல்லது!

- சட்ட மா அதிபர் சரத் என். சில்வா

**இலங்கைச் சட்டக் கல்லூரி சட்ட மாணவர்களான எஸ். நிலக்ஸன், ஏ:கே. ஜெயாநிதி, வி. சசிதரன் ஆகியோர் சட்ட மா அதிபர் சரத் என் . சில்வா அவர்களுடன் நடாத்திய நேர்காணலிலிருந்து சில பகுதிகள் இங்கு தரப்படுகின்றன.**

நன்றி: நீதி முரசு '98

சில மாதங்களுக்கு முன் கொழும்பில் உள்ள பல லொட்ஜ்கள் மூடப்பட்டு அங்கு தங்கியிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் எந்த முன்னறிவித்தலும் இன்றி பலவந்தமாக வெளியேற்றப்பட்டிருந்தார்கள். அரசு இவ்வாறு வெளியேற்றப்பட்டவர்களுக்கு எந்தத் தங்குமிட வசதிகளும் செய்து கொடுக்கவில்லை. இந்த மக்களுக்கு தாங்கள் கொழும்பிலே விரும்பிய இடங்களில் தங்கியிருப்பதற்கான அடிப்படை உரிமை இல்லையா என்பதை நாம் அறியலாமா? இது தொடர்பாக அரசு, அரசியலமைப்புச் சட்டத்தின் 27சீ பிரிவின்படி இவ்வாறு வெளியேற்றப்பட்ட மக்களுக்கு இருப்பிட வசதி வழங்கப்பட வேண்டும் என்ற சட்டநியதியை மதிக்காமல் நடந்துள்ளது என்று ஏன் கூற முடியாது?

இல்லை. அப்படி லொட்ஜ்சுகள் மூடப்பட்டதாக நான் கேள்விப்படவில்லை. உங்களுக்கு யார் சொன்னார்கள்?

அது பத்திரிகையில் வெளிவந்தது.

இல்லை.

கௌரவ ஜெயராஜ் பெனாண்டோப்பிள்ளை அவர்கள் கூட இவ்வாறு விடுதிகள் மூடப்பட்டதற்கு காரணம் பாதுகாப்புக் காரணங்களே என்று கூறியிருந்தார். பத்திரிகைகளில் கூட இது வெளியாகியிருந்தது. அவர் ரூபவாஹினிப் பேட்டியொன்றில் பயங்கரவாதிகள் இந்த விடுதிகளுக்கு வந்து தங்கியிருந்திருக்கிறார்கள், இதனால் தான் நாம் அவற்றை மூடவேண்டி ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்திருந்தார்.

இதற்கு நான் என்ன சொல்லமுடியும் என்றால் தமிழ் மக்களும் பொறுப்புணர்வுடையவர்களாக இருக்க வேண்டும் என்பது தான். இரு பிரிவினரும் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப வேண்டும். இந்த நம்பிக்கையை கட்டியெழுப்ப நாம் எம்மால் முடிந்தளவுக்கு முயற்சி செய்கிறோம். எல்லாப் பகுதிகளிலும் சில கட்டுப்பாடுகள் தேவை. உங்களது பக்கத்தில் ஒரு யுத்தம் நடக்கிறது என்றால் சிங்களவர்கள் பக்கத்தில் பையன்கள் சண்டையிடப் போயிருக்கிறார்கள். இந்த நிலைமை அல்லது தவறான புரிதல்கள் எல்லாவற்றையும் வளர்த்து விட்டுள்ளது.

விடுதிகள் பற்றிய பிரச்சினை பொலிசினதும், பிற அதிகாரிகளினதும் கவனத்தை கடந்த சில காலங்களாக ஈர்த்து வந்திருக்கிறது. இது மிக அண்மைக் காலத்திய ஒரு நிகழ்வு. முன்பெல்லாம் இவ்வாறு இருந்ததில்லை. மாநகர சபைச் சட்டங்களின்படி இவ்வாறான விடுதிகள் அடிப்படையில் சட்ட விரோதமானவை. தங்குமிட வசதிகள் கொண்ட ஒரு இடத்தை, தங்குவதற்குரிய போதிய வசதிகள் இருப்பதாகக் காட்டி உரிய அனுமதி பெறாமல் நீங்கள் நடாத்த முடியாது. இப்போது என்ன நடக்கிறது என்றால் சாப்பாட்டுக் கடைகள் எல்லாம் விடுதிகளாக மாற்றப்பட்டுள்ளன. அதாவது எந்தப் போதிய வசதியும் இல்லாமல் இருவர் மட்டுமே தங்கக் கூடிய அறைகளில் இவர்கள் 20பேரை வைத்திருக்கிறார்கள். எனவே இவை அடிப்படையில் சட்ட விரோதமானவை. மாநகர சபை தன் சட்டங்களை உரிய முறையில் நடைமுறைப்படுத்துமானால் இவை மூடப்பட வேண்டியவையே. ஆனால் பெருமளவில் வடக்குக் கிழக்கில் இருந்து அங்கு நடைபெறும் யுத்தம் காரணமாக மக்கள் இங்கு வந்து சேரும் நிலைமை இருப்பதால் இவை அனுமதிக்கப்பட்டு வந்தன.

அவர்கள் மலைநாட்டில் இருந்தும் வருகிறார்கள் அங்கு நிலைமை சற்று வித்தியாசமானது. ஏனென்றால் அங்கு பிரஜா உரிமையற்றவர்களும் இருக்கிறார்கள். இதனால் அவர்களுக்கு அங்கு இருப்பது கடினமாகத் தோன்றுகிறது. அங்கு வேலை வாய்ப்பு தேடுவது கடினமாக இருக்கிறது. எனவே அவர்கள் இங்கு வருகிறார்கள். இதெல்லாம் சரிதான். ஆனால் பிரச்சினை என்னவென்றால் இப்போது தலைநகரின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. கொழும்பு மத்திய வங்கிக் குண்டு வெடிப்பு, கலதாரி ஹொட்டல் குண்டு வெடிப்பு, பெற்றோலிய கூட்டுத்தாபனக் குண்டு வெடிப்பு என்பவற்றை நாம் மறந்து விட முடியாது. இவையெல்லாம் நகரத்தை உலுக்கி விட்டுள்ளன. இவை இங்கிருந்தவர்களாலேயே செய்யப்பட்டிருக்கின்றன. இந்த நடவடிக்கைகளைச் செய்ய இவர்களுக்குத் தொடர்புகள் கிடைத்திருக்கின்றன. நிச்சயமாக இவற்றுக்குப் பின்னால் புலிகள் இருந்திருக்கிறார்கள். இதன் காரணமாக இங்கு வருபவர்களது ஆளடையாளங்கள் தெரியாது இருப்பதால் அது எப்போதும் நகரத்தின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவே இருக்கும் என்று பொலிஸ் தரப்பு தொடர்ச்சியாக அழுத்தம் கொடுத்துக் கொண்டிருந்தது. நான் தனிப்பட்ட முறையில் இந்த விடயத்தில் தலையிட முயன்றிருக்கிறேன் ஆனால் இப்படி வருபவர்களுடன் புலிகளும் வரலாம் அல்லது புலிகள் இவர்களைப் போல வேடமிட்டு வரலாம் என்பதால் இவர்களைச் சோதிக்க வேண்டும் என்று பொலிசார் கூறுகின்றனர். அப்படிப் புலிகள் வந்தால் அது முழு நகரத்தினதும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஆகி விடும் என்று கூறுகின்றனர். இது தான் நடந்தது.



சட்ட விரோதமான தங்குமிட வசதிக்காக உருவாக்கப்படாத இடங்களில் மக்கள் தங்கியிருப்பதை நாம் அனுமதித்திருந்தோம். ஏனென்றால் இது ஒரு மனிதாபிமானப் பிரச்சினையாகும். அதே வேளை அங்குள்ள மக்களைச் சோதனை செய்தே ஆக வேண்டும். இதனால் பொலிஸ் இத்தகைய விடுதிகளை நடத்துவோர் அங்கு தங்கியிருப்போர் பற்றிய விபரங்களை தமக்குத் தரவேண்டும். அத்துடன் அவற்றை அடிக்கடி புதுப்பித்துக் கொள்ள வேண்டும் என்று ஒரு முறையை உருவாக்கினர். இந்த முறை பொலிசாலும், தமிழ் அரசியல் கட்சிகளாலும் கூட்டாக உருவாக்கப்பட்ட ஒரு முறையாகும். பெரும்பாலான மக்கள் கைது செய்யப்பட்ட சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன. நான் இராணுவத்தினருடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு இவற்றை நிறுத்தியிருக்கிறேன்.

நான் அறிந்த வரை இந்த விடுதிகள் மூடப்பட வேண்டும் என்றாலும் கூட அவை மூடப்படவில்லை. சில இடங்களில் சில சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டிருக்கலாம். இது பொலிசுக்கும் விடுதி உரிமையாளருக்கும் இடையிலான நம்பிக்கையை இல்லாமல் செய்திருக்கலாம். ஏனென்றால் இந்த விடுதி உரிமையாளர்கள் அங்கு தங்கியிருப்பவர்கள், புலிகளுடன் சம்பந்தம் அற்றவர்கள் என்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்ற நம்பிக்கை உடன்பாட்டுடனேயே இவ்விடுதிகள் இயங்க அனுமதிக்கப்பட்டிருந்தன. எனவே இந்த நம்பிக்கை தகர்ந்த மறுகணமே பொலிசார் அந்த விடுதியை மேலும் விட்டு வைக்க விரும்பமாட்டார்கள். இதுதான் நடந்திருக்க வேண்டும். ஆனால் இன்னும் பெருமளவில் மக்கள் பல விடுதிகளில் தங்கியிருக்கிறார்கள். மருதானையில் இப்படிப்பட்ட நூற்றுக்கணக்கான விடுதிகள் இருப்பதாகப் பொலிசார் தெரிவிக்கின்றனர் எனவே இந்தக் கேள்வி சரியானது என நான் நினைக்கவில்லை.

ஒன்றிரண்டு சம்பவங்கள் நடந்திருக்கலாம். விடுதி உரிமையாளருக்கும் உங்களுக்கும் இடையில் ஒரு செயல் ரீதியான உறவின் அடிப்படையில் மக்களைத் தங்க வைக்க அனுமதிக்கும்படி நாம் பொலிசாருக்குக் கூறியுள்ளோம். இது ஒரு கடினமான நிலை. சில வேளைகளில் பொலிசார் இலஞ்சம் கோருவதாகக் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. இது சரியாக இருக்கலாம். இதை நான் மறுக்கவில்லை புலிகளுடன் தொடர்புள்ளவர்கள் என்று யாரும் கைது செய்யப்படும் வரை இவையெல்லாம் சரியாக இருக்கும். அப்படிப் பிடிபட்டால் எமக்கு எதாவது செய்வது கடினமாகி விடுகிறது. இதற்குரிய சரியான பதில் என்னவென்றால் கொழும்பிலுள்ள தமிழ் சமூகம் செயலில் இறங்கியாக வேண்டும். இங்குள்ள யாராவது கௌரவமான நிலையில் உள்ள ஒருவர் கைது செய்யப்படுபவரை தனக்குத் தெரியும் என்று உறுதிப்படுத்தினால் அவரை உடன் விடுதலை செய்யும்படி நாம் கூறியுள்ளோம். ஏனென்றால் கைது செய்யப்படுபவரைத் தெரிந்த ஒருவர் எமக்கு இருக்கிறார்.

நான் நினைக்கிறேன். தமிழ் சமூகம் இதில் பங்கெடுத்தாக வேண்டும் பல சிவில் அமைப்புக்கள் இங்கு இருக்கின்றன. இது ஒரு சமூகப்பிரச்சினை. இந்த ம[illegible]க்கு கௌரவமான ஒரு தங்குமிடத்தை நீங்கள் கண்டு பிடிக்கலாம். இந்த விடுதிச் சொந்தக்காரர்களால் அவர்கள் ஏமாற்றப்படாதிருக்க இது அவசியம். இது ஒரு வியாபாரம் என்பதை விட முக்கியமான ஒரு சமூகசேவையாகும். ஆனால் அது இப்போது வியாபாரமாக நடைபெறுகிறது என நான் கருதுகிறேன். நீங்கள் இந்த விடயத்தில் கைகளைக் கழுவி விட்டு சும்மா இருக்க முடியாது.

நாம் ஒரு வழிமுறையைக் கண்டுபிடிக்க வேண்டும். இது நீண்ட நாட்களுக்கு நின்று பிடிக்கப்போகும் ஒன்றல்ல. இம்மக்களுக்கு நாம் ஒரு பொது இடத்தைக் கண்டுபிடிக்க வேண்டும். அப்படி ஒரு இடம் இருந்தால் நீங்கள் அதைச் சொல்வதன் மூலம் எமக்கு உதவலாம். இதற்கு பயன்படுத்தப்படக்கூடிய கட்டிடங்கள் இருப்பதாகச் சொன்னால் அவற்றைத் தற்காலிக தங்குமிடங்களாக மாற்ற அரசாங்கத்திற்கு உதவியாக இருக்கும். இது தற்காலிகமானதே. இல்லாவிட்டால் இலங்கையர்கள் அவர்கள் சிங்களவர்களோ தமிழர்களோ இலவசமாகத் தங்கவிட்டால் தொடர்ந்து இருந்து விடுவார்கள் இது அவர்களின் சுபாவம். நான் ஜனாதிபதியிடமும், பீரிஸ் அவர்களுடனும் பேசியுள்ளேன். நாம் இதற்கு நிதி ஒதுக்க முடியும். ஆனால் சமூகமும் சேர்ந்து ஒத்துழைக்க வேண்டும். இதை சமூகசேவைகள் திணைக்களம் நடாத்த முடியாது. தமிழர்களுடன் மட்டுமல்ல சிங்கள, முஸ்லீம் மக்களுடனும் பேசி இதற்கான அபிப்பிராயங்களை உருவாக்க வேண்டும்.

இதை ஒரு அரசியல் விடயமாக நீங்கள் செய்லாம் என்று நா்ன் நினைக்கவில்லை. இது ஒரு சமூகப்பிரச்சினை. மனிதாபிமான பிரச்சினைகளுக்கு மனிதாபிமானத் தீர்வுகள் தேவை. இதற்கு எனது ஆதரவும் உண்டு எனது சொந்தப்பாதுகாப்பையும் பொருட்படுத்தாமல் நான் பல கைதுகளில் தலையிட்டு நிறுத்தியிருக்கிறேன். நான் இதைச் செய்ததற்கு காரணம் இது மனிதாபிமானப் பிரச்சினை என்பதே நான் மலையக தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்த தேவராஜன், யோகராஜன் ஆகியோருடன் பேசியிருக்கிறேன் தம் பிரதேசங்களில் இருந்து வரும் மக்களுக்கு உறுதியளிக்க முடியும் என்று அவர்கள் கூறியுள்ளார்கள். ஒருவர் மலையகத்தில் இருந்து வந்தால் அவர் யார் எந்தத் தோட்டத்தைச் சேர்ந்தவர் என்று தமக்குக் கூற முடியும் என்று கூறியிருக்கிறார்கள். அப்படி ஒரு அமைப்பை நீங்களும் வன்னி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலைப் பகுதிகளில் உருவாக்க வேண்டும். விடுதி உரிமையாளர்களை விட்டு விடுவோம். அவர்கள் வியாபாரிகள். பணம் சேர்க்கும் நோக்கம் உடையவர்கள். சில அதிகாரிகள் இலஞ்சம் வாங்குவதாகவும் முறைப்பாடுகள் இருக்கின்றன. எனவே இந்த விடுதி என்ற கோட்பாட்டையே மாற்ற வேண்டும்.

**ஒரு விடுதியில் ஒருவர் கைது செய்யப்பட்டதற்காக முழு விடுதிகளில் உள்ளவர்களையுமே வெளியேற்ற முடியுமா?**

இல்லை. அதனால் தான் நான் சொல்கிறேன். இந்த விடயமே பரஸ்பர நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு நடக்கிற ஒன்றாகும். பொலிசுக்கும் விடுதி உரிமையாருக்கும் இடையில் நம்பிக்கை அடிப்படையிலான உறவு இருக்கிறது. உரிமையாளர் புலியுடன் தொடர்பு இருக்கிறவர்கள் யாரும் அங்கு இல்லை என்று உறுதிப்படுத்த உடன்படுகிறார். இந்த உடன்பாடு மீறப்படும் போது இவையெல்லாம் நடக்கின்றன. இது சரியல்லத் தான். ஒருவரால் மற்றவர்கள் துன்பத்துக்குள்ளாகும் நிலை ஏற்படக்கூடாது. ஆக தீர்வு என்னவென்றால் இந்த விடுதி என்ற கோட்பாட்டையே மாற்றுவது தான். சில சுதந்திரமான உடனடியாக வரக்கூடிய இடத்தைத் தேட வேண்டும். அங்கு அவர்கள் ஓரிரு மாதங்கள் இருக்கலாம். இந்த இடைக்கால இடம் முக்கியமானது. அப்போது நாம் அவர்களது அடையாளங்களை அறிந்து கொள்ளலாம். இதன் பிறகு அவர்கள் ஒரு நிரந்தர இடத்தைத் தேடிக் கொள்ளலாம். நான் தமிழ் கட்சிகளிடமும், இ.தொ.காவிடமும் இதனைக் கூறியுள்ளேன். நீங்கள் ஒரு இடத்தைக் காட்டினால் அரசாங்கமும் உதவி செய்யலாம்.

**பொலிஸ் நிலையத்தில் பதியப்பட்ட பத்திரத்தை எடுத்துச் செல்வது அவசியம் இல்லை என்று பொலிஸ் மா அதிபரும் நீங்களும் சொன்னதாக தொடர்பூடகங்களில் செய்திகள் வந்திருக்கின்றன ஆயினும் பொலிஸ் உட்பட ஆயுதப்படையினர் அடையாள அட்டையுடன் இந்தப் பத்திரமும் காட்டப்பட வேண்டும் என்று வலியுறுத்துகின்றனர். இவ்வாறு காட்டாத பல சந்தர்ப்பங்கள் துன்புறுத்தல்கட்கும், கைதுகளுக்கும், தடுத்து வைப்புகட்கும் இட்டுச் சென்றுள்ளன. அவசரகால சட்ட விதி 20ஏ பொலிஸ் உதவி அத்தியட்சகர் பதவிக்குக் கீழ்ப்படாத பதவியில் உள்ள ஒருவர் கோருமிடத்து வீட்டிலுள்ளோர் விபரத்தை பிரகடனப்படுத்த வேண்டும் என்று கூறுகிறது. எமக்குத் தெரிய இது வரை எந்த உதவி பொலிஸ் அத்தியட்சகரும் யாரையும் இவ்வாறு பிரகடனப்படுத்துமாறு கோரியது கிடையாது. இந்த நிலையில் இப்பிரகடனத்தை எடுத்துச் செல்ல வேண்டிய அவசியம் இல்லை. சட்டத்துக்கும் நடைமுறைக்கும் இடையில் இந்தளவு பெரிய இடைவெளி இருப்பதற்கான காரணம் என்ன? இதைக் குறைக்க என்ன செய்யலாம் என்று கருதுகிறீர்கள்? உங்களதும் பொலிஸ் மா அதிபரதும் உத்தரவுகள் பொலிசாராலும்**

— 17

# தமிழ் முஸ்லிம் நல்லுறவு: எங்கிருந்து தொடங்குவது ?

ஸிராஜ் மஸ்ஹூர்

தமிழ் முஸ்லிம் இனங்களிடையே பரஸ்பரம் நல்லுறவை கட்டியெழுப்புவதன் அவசியம் குறித்து ஆக்கபூர்வமான ஒரு கருத்தாடலை நடாத்தும் நோக்குடன் இக் கட்டுரை இங்கு பிரசுரமாகிறது. வாசகர்கள் இக் கருத்தாடலில் அக்கறையுடன் பங்கெடுத்து இது தொடர்பான கருத்துக்களை செழுமைப்படுத்த உதவவேண்டும்.
(ஆ-ர்)

தமிழ் - முஸ்லிம் உறவு குறித்து மிக ஆழமாய்ப் பேச வேண்டிய தன் அவசியத்தை நாம் அடிக்கடி உணர்கிறோம். எனினும், உணர்வுபூர்வமான இந்த உறவு இன்னமும் கைகூடாத ஒன்றாகவே இருந்து வருகிறது. இந்த இன விரிசலில் இருசமூக சக்திகளுக்கும் பங்கிருக்கிறது. ஆயினும், அதில் ஒவ்வொருவரும் வகித்த பாத்திரம் வேறுபட்ட பரிமாணங்களையுடையது என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

எந்தவொரு பிரச்சினையினதும், மையங்களாகவும் தூண்டற் சக்திகளாகவும் யார் தென்படுகிறார்கள் என்பதை நுட்பமாகப் புரிந்து கொண்டு செயற்படுவதற்கும் எதிர்வினையாற்றுவதற்குமான பக்குவமும் பொறுமையும், குழப்பகரமான ஒரு சூழ்நிலையில் வெகுஜனங்களிடையே அற்றுப் போய் விடுகிறது என்பது தான் மிக வேதனைக்குரிய யதார்த்தமாகும்.

பொதுவாக தமிழ் ஆயுதக்குழுக்கள் இழைக்கும் தவறுகளை முழுத் தமிழ்ச் சமூகமே இழைக்கிறது என்று முஸ்லிம்களும், முஸ்லிம் அரசியற் தலைமைகள் இழைக்கும் தவறுகளை முழு முஸ்லிம் சமூகமுமே இழைக்கின்றதெனத் தமிழர்களும் தவறாக அர்த்தம் கொள்கின்றனர். சாதாரண மக்களை இவர்களிலிருந்து நுட்பமாக வேறுபிரித்து அடையாளம் காணமுடியாமையே கிழக்கில் சமூக உறவுகள் சீர்குலைவதற்கு உடனடிக் காரணமாக அமைந்து விடுகிறது.

தமிழ் - முஸ்லிம் உறவானது பரந்துபட்ட மானிட நேயத்தினூடாக மட்டும் அடையப்பட முடியுமென்று எதிர்பார்ப்பது பிரச்சினை பற்றிய மேலெழுந்தவாரியான புரிதலாகும். தமிழர்களும், முஸ்லிம்களும் பிட்டும் தேங்காய்ப் பூவையும் போல் இருந்தார்கள் என்பது போன்ற புளித்துப் போன பழைய கோஷங்களால் பிரச்சினையின் சரியான பரிமாணத்தைப் புரிந்து கொள்ள முடியாது.

இரு சமூகங்களிலுமுள்ள முற்போக்கு சக்திகளுக்கு நொய்ந்துபோன இந்த உறவை மீளக்கட்டியெழுப்ப வேண்டிய தார்மீகப் பொறுப்பு உள்ளது. இப்பரஸ்பர உறவு சீர்குலைந்து போனதற்கான அடிப் படைக் காரணிகளையும் பின்னணிகளையும் மிக ஆழமாக ஆராய்ந்து அடையாளம் காண்பதனூடாக மட்டுமே இவ்வரலாற்றுக் கடமையைச் செவ்வனே செய்ய முடியும்.

எனினும், இரு சமூகங்களிலுமுள்ள முற்போக்கு சக்திகளுக்கு நொய்ந்துபோன இந்த உறவை மீளக் கட்டியெழுப்ப வேண்டிய தார்மீகப் பொறுப்பு உள்ளது. இப்பரஸ்பர உறவு சீர்குலைந்து போனதற்கான அடிப்படைக் காரணிகளையும் பின்னணிகளையும் மிக ஆழமாக ஆராய்ந்து அடையாளம் காண்பதனூடாக மட்டுமே இவ்வரலாற்றுக் கடமையைச் செவ்வனே செய்ய முடியும். இவ்விடயம் தொடர்பான ஆழ்ந்த தெளிவில்லாது முன்னெடுக்கப்படும் எந்தவொரு முயற்சியும் வெறும் கனவுப் புரட்சியாக மாறி கிடப்பில் போடப்பட்டு விடும். கடந்த காலங்களில் இதற்கு ஏராளமான உதாரணங்கள் உள்ளன.

தேசிய இனப்பிரச்சினையில் முஸ்லிம்கள் வகிக்க வேண்டிய பாத்திரம் மிகக் கவனமாக அலட்சியம் செய்யப்பட்டு வருகிறது. எங்கு ஒட்டுமொத்தமான ஒரு மக்கள் திரள் ஒடுக்குமுறைக்கும் அடக்குமுறைக்கும் உள்ளாகுமோ அங்கிருந்து புதிய போராட்டங்கள் கிளர்ந்தெழுவது யதார்த்தமாகும். சுதந்திரத்திற்குப் பிந்திய இலங்கை அரசியல் தலைமைத்துவம் தமிழ் மக்களுக்கு இழைத்த அநீதிகளுக்குரிய எதிர்வினையையே அது இன்று அனுபவிக்கிறது. காலவோட்டத்தினூடே முஸ்லிம்களது தரப்பிலிருந்தும் சமகால நிகழ்வுகளின் தர்க்க ரீதியான விளைவுகளாக மிக்க கடுமையான எதிர்ப்புணர்ச்சி வெடிக்கும் சாத்தியங்களை நாம் மறுக்கமுடியாது.

ஒரு பல்லின தேசத்தில் சிறுபான்மை சமூகமொன்று எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சினை அதன் தனித்துவ அடையாளம் மறுக்கப்படுவதாகும்.

புறத்தேயுள்ள கருத்தியல்கள், மனோபாவங்கள், ஐதீகங்கள் என்பன அதனைக் கடப்பமாக உள்வாங்க முனைகின்றன. இலங்கை முஸ்லிம்களது அடையாளம் (Ethnic Identity) மறுக்கப்பட்டபோதே முஸ்லிம் தேசியவாதம் முளைவிடத் தொடங்கியது. சிங்களப் பேரினவாதம் திணிக்க முனைந்த பௌத்தமேலாதிக்கக் கருத்தாக்கம் எவ்வாறு தமிழ்ச் சமூகத்தில் ஜீரணமாகவில்லையோ, அதே போன்று முஸ்லிம் சமூகத்திலும் சற்றுத் தாமதமாகவே எனினும் - உளப்பூர்வமாக உள்வாங்கப்படவில்லை.

மற்றொரு சிறுபான்மை தமிழ்த் தரப்பிலிருந்து மேற்கிளம்பிய சைவ வேளாள சிந்தாந்தம் முஸ்லிம் சமூகத்தின் தனித்துவ அடையாளத்தினை; தொடர்ந்து மறுத்தே வந்துள்ளது. தமிழ் ஆதிக்கம் செலுத்த முனைந்த இந்த இரு சக்திகளையும் புறந்தள்ளும் எதிர்க் குரல்கள் முஸ்லிம் சமூகத்துள் படிப்படியாக வளர்ச்சியடையத் தொடங்கின. 80களின் பின்னரைத் தசாப்தங்களிலிருந்து தமிழ் ஆயுதக்குழுக்கள் கட்டவிழ்த்து விட்ட முஸ்லிம் விரோத நடவடிக்கைகளால் இந்த எதிர்ப்புணர்வு நன்கு ஆழம் பெற்றது. இந்தச் சூழலின் யதார்த்தம் நிறுவன ரீதியான கட்டமைப்புகளின் அவசியத்தை வேண்டிநிற்கின்றன. ஜிஹாத் குழுக்களும், ஸ்ரீ.ல.மு.காவும் இந்தச் சந்தர்ப்பத்தில் தோன்றிய குறிப்பிடத்தக்க ஒழுங்கமைப்புகளாகும். தமிழ்த் தேசியவாத கருத்தியலை முன்னெடுத்த அணிகளிடமிருந்து கூட முஸ்லிம்களது இன அடையாளம் மறுக்கப்பட்டமை முஸ்லிம் முற்போக்கு சக்திகளுக்கு ஆழ்ந்த அதிர்ச்சியைத் தந்தது.

தமிழ்த் தரப்பில் தனியான ஒரு தேசிய இனமா என்பது ஒரு விவதத்திற்குரிய விடயமாக ஆக்கப்பட்டது. பெரும்பாலானோர் முஸ்லிம்களைத் தமிழ்த் தேசிய இனத்தின் ஓர் உட்பிரிவாகவே கருதினர். எனினும், முஸ்லிம் இனத்தனித்துவத்தை அங்கீகரிக்கும் நேர்மையான குரல்கள் சில மிக மெதுவாக ஒலித்ததையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

'தமிழ் பேசும் மக்கள்', 'இஸ்லாமியத் தமிழர்கள்', 'ஈழவர்கள்' என்கின்ற பிரயோகங்கள் முஸ்லிம்களால் திட்டவட்டமாக நிராகரிக்கப்பட்டுவிட்டன என்பதைத் தமிழ்ச் சகோதாரர்கள் மிகக் கவனமாக புரிந்து கொள்ள வேண்டும். முஸ்லிம்களையும் தமிழ்த்தேசத்தின் ஒரு பகுதியாக அடையாளம் காணமுனையும் இந்த ஆக்கிரமிப்பு மனோபாவத்தை முஸ்லிம்கள் ஒருபோதும் ஏற்கப் போவதில்லை. மிகவும் காலம்கடந்தாயினும் இந்தக் கருத்தை தமிழ் முற்போக்கு சக்திகள் ஏற்றுக் கொண்டிருப்பது மிகுந்த நம்பிக்கையைத் தருகின்றது. இவ்வாறான பரஸ்பர நம்பிக்கைகளூடாக மட்டுமே தமிழ் - முஸ்லிம் உறவின் செல்நெறி ஆரோக்கியமானதாக அமைய முடியும்.

இலங்கை முஸ்லிம்களை அடையாளப்படுத்துவதற்கு 'சோனகர்' என்ற பதம் பயன்படுத்தப்படுகின்றது. ஆனால், தமிழர்கள் முஸ்லிமகளை 'சோனி' என அழைககின்றனர். சோனி என்பதற்கு வலுவற்ற, மெலிந்த உடல், மெலிந்த வலுவற்றவன் என க்ரியாவின் தற்கால தமிழ் அகராதி குறிப்பிடுகின்றது. தமிழ் இலக்கியங்களில் இவ்வாறான அர்த்தத்திலேயே இச்சொல் பயன்படுத தப்பட்டுள்ளது. முஸ்லிம்களை தரக்குறைவாக அடையாளப்படுத்தும் ஒருவகை மேலாதிக்க மனோபாவமே ''சோனிக் காக்கா'' என்ற பிரயோகம் மூலம் வெளிப்படுகிறது.

தமிழ்த் தேசத்தையும், அவர்களது சுயநிர்ணய உரிமைகளையும் எவ்வாறு இலங்கை அரசும் சிங்கள தேசமும் அங்கீகரிக்க வேண்டும் என்று தமிழ் மக்கள் கோருகின்றனரோ அதேபோன்று முஸ்லிம் தேசத்தையும், அவர்களது சுயநிர்ணய உரிமைகளையும் தமிழ் தேசம் அங்கீகரிக்க வேண்டும் என்பதை தமிழ் சகோதரர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

80களின் பிற்கூறில் முஸ்லிம்களது சமூக இருப்பு கேள்விக்குள்ளாக்கப்பட்டபோது தோன்றிய ஜிஹாத், ஸ்ரீ.ல.மு.கா. போன்ற அமைப்புகளது பாத்திரம் குறித்து ஆக்கபூர்வமான அணுகுமுறை அவசியமாகும். ஏனெனில் இவை பின்னைய காலங்களில் தவறான திசைகளை நோக்கி நகர்ந்துள்ள போதிலும், முஸ்லிம் தேசத்திற்கு ஓர் வடிவம் கொடுத்து அதை வெளிக்கொணர்ந்ததால் அவற்றிற்குள்ள பங்கை யாரும் மறுக்க முடியாது.

முஸ்லிம் இளைஞர்கள் தமிழ் ஆயுதக்குழுக்களின் அடக்குமுறைக்கெதிராக போராடுவதற்காகவே ஜிஹாத், ஊர்காவற்படை போன்றவற்ளில் சேர வேண்டி வந்தது. ஆனால், இதை அடிப்படையாக வைத்து முஸ்லிம்கள் காட்டிக் கொடுக்கும் துரோகிகள், சிங்கள இராணுவத்தின் உளவாளிகள் போன்ற பலவீனமான குற்றச்சாட்டுக்கள் சும்த்தப்பட்டன. ஆனால், ஆரம்பகாலத்தில் இருந்த தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தில் பங்காளிகளாகவும், ஆதரவாளர்களாகவுமே முஸ்லிம்கள் இருந்து வந்தனர். பின்னர் போராளிகளது துப்பாக்கிகள் தங்களை நோக்கி திருப்பப்பட்டபோது தான் அவர்கள் தங்களது தனித்துவமான அடையாளத்தையும், வேர்களையும் தேடுவதற்கு வழிவகுத்தது என்பதை நாம் மனம் கொள்ள வேண்டும்.

இன்றும் கூட தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு முஸ்லிம்கள் ஆதரவாகவே உள்ளனர். போராளிகள் தவறான பாதையை தேர்வுசெய்துள்ள போதிலும் போராடுவதற்கான நியாயமும், அடிப்படைகளும் மாறாமல் அப்படியே உள்ளன என்பதை முஸ்லிம்கள் மிகத்தெளிவாகவே புரிந்து கொண்டிருக்கின்றனர். சிங்களப் பேரினவாத ஒடுக்குமுறைகளுக்கு எதிராக முஸ்லிம்களும், தமிழர்களும் ஐக்கியப்பட்டு போராட வேண்டியுள்ளது. இதை தமிழ் முஸ்லிம் தரப்பில் உள்ள முற்போக்கு சக்திகள் மிக ஆழமாகப் புரிந்து கொண்டிருக்கின்றன.

கடந்த காலங்களில் தமிழ் முஸ்லிம் உறவை திட்டமிட்டுச் சீர்குலைப்பதில் சிங்கள இராணுவத்திற்கு குறிப்பிடத்தக்க பங்கு உள்ளது. எனவே தமிழ் முஸ்லிம் உறவை சீர்குலைப்பதற்கான காரணங்களை ஒரு பன்முகப்பட்ட பார்வையினூடாகவே அடையாளங் காணவேண்டும்.

ஒடுக்கு முறை என்பது ஆயுத ரீதியானது மட்டுமல்ல. கலாசார ரீதியான ஒடுக்குமுறைகளையும் முஸ்லிம்கள் எதிர்க்கின்றனர். முஸ்லிம்கள் ஓர் தேசிய இனமா என்பது போன்ற விவாதங்களை இனியும் அவர்கள் ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை.

ஏனெனில், எங்களை ஓர் தனித்துவ அடையாளம் உள்ள தேசமாக நாம் வெகுநாட்களுக்கு முன்பே ஸ்தாபித்து விடடோம். தமிழ்த் தேசம் இதை ஏற்றுக் கொண்டாலும் சரி, ஏற்றுக் கொள்ளாவிடினும் சரி இதுவே யதார்த்தமாகும். லண்டனில் இருந்து வெளிவரும் 'உயிர்ப்பு' சஞ்சிகை வெளியிட்ட முஸ்லிம் தேசம் பற்றிய சிறப்பிதழில் விக்டர் இதை மிகவும் ஆழமாக நிறுவியுள்ளார். தமிழ்த் தரப்பில் இருந்து இவ்வாறான முற்போக்கான பார்வைகளையுடைய எழுத்து மூலமான ஆவணங்களை முஸ்லிம் சமூகம் ஆழ்ந்து எதிர்பார்க்கின்றது. இந்த வகையில் வ.ஐ.ச..ஜெயபாலனின் பங்களிப்பும் குறிப்பிடத்தத்து. ''தேசிய இனப்பிரச்சினையும் இலங்கை முஸ்லிம்களும்'' என்ற நூலை 1983இலேயே அவர் எழுதியது இங்கு கவனத்திற்கு கொள்ளத்தக்கது.

80களின் பிற்கூறில் வாழ்ந்து வந்த முஸ்லிம் இளைய தலைமுறை தமிழ் தரப்பை ஆயுதம் ஏந்தி தங்களைக்கொல்ல வந்தவர்கள் என்றே புரிந்து கொண்டது. இது பல்வேறு எதிர்விளைவுகளுக்கு இட்டுச் சென்றது. ஆயினும், ஜனநாயகம் மறுக்கப்பட்ட இந்தச் சூழலிலும் முஸ்லிம்களுக்கு ஆதரவான குரல்கள் தமிழ்த் தரப்பில் இருந்து வெளிவந்தததையும் நாம் மறக்க முடியாது.

இந்தச் சூழ்நிலையில் தமிழ் முஸ்லிம்களிடையேய் கருத்துப் பரிமாறுவதற்கான ஓர் திறந்த களமாக 'சரிநிகர்' பத்திரிகை இருந்து வருகிறது. மிகவும் சிக்கலான ஒரு காலகட்டத்தில் தமிழ் - முஸ்லிம் மக்களிடையே ஆக்கபூர்வமான கருத்துப் பரிமாறல்களை ஏற்படுத்தியன் ஊடாக சரிநிகர் ஒரு முற்போக்கான வரலாற்றுப் பணியைச் செய்தது. இது முஸ்லிம் இளைஞர்களுக்கு நம்பிக்கையை அளிப்பதாய் இருநதது. எனவே இவ்வாறான தொடர்ச்சியான உரையாடல்களை நாம் மிகக் கவனமாக முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக தமிழ் - முஸ்லிம் மக்களிடையே உணர்வுபூர்வமான நெருக்கத்தை ஏற்படுத்துவதில் இலக்கியம் ஒரு முக்கியமான பாலமாகத் தொழிற்பட்டு வந்திருக்கிறது. உலகெங்கிலும் இலக்கியம் ஒரு ஆழமான தொடர்பாடற் சாதனமாகத் தொழிற்படுகிறது என்பதற்கு நமது சூழலும் விதிவிலக்கல்ல. இன்றும் கூட தமிழ் - முஸ்லிம் உறவு பற்றி மிக அதிகமாகப் பேசுவோர் இலக்கியத் தோடு தொடர்புபட்டவர்களாகவே உள்ளனர். எனவே, தமிழ் - முஸ்லிம் உறவை மிக ஆழமாக முன்கொண்டு செல்வதில் இலக்கியம் ஒரு முக்கிய சாதனமாகத் தொழிற்பட முடியும். ஏற்கெனவே அது இப்பணியை ஓரளவு செய்தே உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

எல்லாவற்றையும் விட, இன்று தீர்க்கமாக மேலெழுந்துள்ள பிரச்சினை வடக்கு முஸ்லிம்கள் பற்றியதாகும். 1990 ஒக்டோபரில் தாம் காலம் காலமாக வாழ்ந்து வந்த தமது தாயகத்திலிருந்து இவர்கள் புலிகளால் விரட்டியடிக்கப்பட்டு இன்று 8 வருடங்கள் நிறைவெய்தி விட்டன. இந்த நீண்ட எட்டு வருடங்களாக அவர்கள் அனுபவித்து வரும் துயரங்களிலிருந்து அவர்களை விடுவிப்பதோடு அவர்களைத் தமது தாயகங்களிலேயே மீளக்குடியமர்த்துவதற்கான அனைத்து முயற்சிகளை முன்னெடுக்க வேண்டியது முற்போக்கு சக்திகள் ஒவ்வொன்றினதும் வரலாற்றுக் கடமையாகும். தமிழ் - முஸ்லிம் உறவைக் கட்டியெழுப்ப முனையும் எவரது நிகழ்ச்சி நிரலிலும் மிக ஆரம்பத்திலுள்ள விடயம் இதுவாய்த் தான் உள்ளது. எனவே இது குறித்து நாம் மிகத் தீவிரமான அக்கறை கொள்ள வேண்டியுள்ளது.

இவ்விடயங்களினை அடிப்படையாகக் கொண்டு தமிழ் - முஸ்லிம் உறவு பற்றிய ஆரம்ப முயற்சிகள் தொடங்கப்பட வேண்டும்.

# ''எமது அங்கவீனப் பெண்களின் உரிமைகளை மறுக்கிறது சமூகம்''

## -என்.ஜீ.கமலாவதி- அங்கவீனப் பெண்கள் அமைப்பின் தலைவி



என்.ஜி. கமலாவதி (40), அங்கவீனப் பெண்களுக்கென ஓர் அமைப்பை ஸ்தாபித்து நடாத்தி வருகின்றார். இலங்கையில் 6 சதவீதமான அங்கவீனர்கள் உள்ளனர். எனினும், அவர்களுக்கென எந்த விசேட வசதிகளும் இல்லை. அவர்களுக்கான, அவர்கள் குரல்களுக்கான ஒரு களமாக இந்த அமைப்பு செயற்படும் எனக் குறிப்பிடும் இவர் 5 வயதில் போலியோ நோயினால் தம் கால்களை இழந்தவர்.

ஹொங்கொங், இந்தோனேசியா, ஜப்பான் போன்ற நாடுகளில் இடம்பெற்ற அங்கவீனர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளில் தாம் வென்ற தங்கம், வெள்ளிப் பதக்கங்களை பெருமையுடன் சுட்டிக் காட்டுகின்றார். நமது தொடர்பூடகங்களின் அக்கறைக்குட்படாத அங்கவீனப் பெண்களின் வாழ்வு பற்றி அவர் கவலை கொள்கின்றார். அவருடனான பேட்டி கீழே தரப்படுகிறது —

- நேர்காணல் : ரத்னா

***பெண்களை இரண்டாம் தரப் பிரஜைகளாக கருதும் இச்சமூக கட்டமைப்பில், ஓர் அங்கவீனப் பெண் என்ற வகையில் இவ்வாறான அமைப்பொன்றை கட்டியெழுப்பும் எண்ணம் உங்களுக்கு எவ்வாறு ஏற்பட்டது?***

எனக்கு சுமார் ஐந்து வயதிருக்கும் போது போலியோ நோய் ஏற்பட்டது. இதனால் ஏற்பட்ட அங்கவீனத் தன்மை எ[illegible]ன பெரிதும் பாதிக்கவில்லை என்றே கூற வேண்டும். சாதாரண பிள்ளைகளுடன் நானும் இணைந்து கல்வி கற்றதாலோ என்னவோ நானும் அவர்களைப் போல் இருக்க வேண்டும் என்ற மனப்பான்மை சிறு வயது முதலே உருவாகிவிட்டது. இதை எனது உளவியல் பலம் என்றும் கூறுவேன்.

பெண் என்ற வகையில், அதுவும் அங்கவீனப் பெண் என்ற வகையில் நான் சுயமாக வாழ விரும்பினேன். இந்த எண்ணம் ஆழமாக வேரூன்றியதால் எனது அங்கவீனத்தை தடையாக ஒரு போதும் நான் கருதியதில்லை. எனது அங்கவீனத்தை நான் முழுமையாக ஏற்றுக்கொண்டேன். அது தானே யதார்த்தம். இதன்படி சமூகத்தில் முற்றாக ஒது ப்பட்டு, அவதியுறும் அங்கவீனப் பெண்களை முன்னணிக்கு கொண்டு வருவதை திண்ணமாகக் கொண்டு செயல்படும் ஆர்வம் ஏற்பட்டது. ஏனைய அங்கவீனப் பெண்களுடன் இணைந்து அவர்களது உரிமைகளைப் பெற்றுக்கொடுக்கும் வாய்ப்பும் கிட்டியது என்றே கூற வேண்டும்.



***அங்கவீன மகளிர் சங்கத்தைப் பற்றி, அச்சங்கத்தின் தலைவர் என்ற வகையில் சற்று விரிவாக குறிப்பிட முடியுமா?***

உண்மையில் அங்கவீனப் பெண்கள் அனைவரும் நிறுவனமயப்பட்டு போராட வேண்டும் என எண்ணியதற்கு பல காரணங்கள் உண்டு. முதலில், அவர்களுக்கு குரல் கொடுக்க ஒரு களம் தேவை. அத்துடன், அங்கவீனப் பெண்கள் தொழில்புரியும் இடங்களில், பாதைகளில், குடும்ப அமைப்பில் பல சவால்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். இதன்படி, நாம் நிறுவனமயப்பட்டால் தான் எம்மால் எதையும் கற்றுக்கொள்ள முடியும் என்பதை உணர்ந்தோம். இதன்படி 1989ல் அங்கவீன மகளிர் புனருத்தாரண சம்மேளனம் என்ற பெயரில் சிறிய அமைப்பொன்றை ஆரம்பித்தோம். எனினும், துரதிருஷ்டவசமாக, அச்சம்மேளனத்தை கொண்டு நடாத்த பல விடயங்கள் தடையாக அமைந்தன. அத்தடைகளுள் குறிப்பாக, அங்கவீனப் பெண்கள் இவ்வாறான புறக்காரணங்களில் அக்கறை காட்டாமை, அவர்களது குடும்பக் கட்டுப்பாட்டு நிலைமைகள் என்பவற்றைக் கூறலாம்.

1995-12-30ம் திகதி நாம் மீண்டும் இச்சம்மேளனத்தை புனருத்தாரணம் செய்தோம். சுவீடன் சியா மன்றத்தின் அனுசரனையுடன் இதை நாம் மேற்கொண்டோம். அத்துடன், அங்கவீனப் பெண்களையும், அங்கவீனமற்ற ஏனைய பெண்களையும் அழைத்து இது பற்றிய முழு நாள் கருத்தரங்கை நடாத்தினோம். இதன் மூலம் அங்கவீனப் பெண்களின் உரிமைகள், தேவைகள் தொடர்பான அறிவூட்டல்களைப் பெற்றுக் கொடுக்க முடிந்தது. இந்த வகையில் அங்கவீன மகளிர் சங்கம் முனைப்புடன் செயலாற்றத் தொடங்கியது.

***தற்போது இவ் அங்கவீன மகளிர் சங்கத்தின் செயற்பாடுகள் எவை?***

நாம் கேகாலை, அறநாயக்க, குளியாப்பிட்டிய, அனுராதபுர மத்தியப்பகுதி, இப்பலோகம, தலாவ, நாவல, கடுபலகஸ்வெவ, பிங்கிரிய, மத்திய கண்டி போன்ற 10 பிரதேச சபைகளிலிருந்து 10 இணைப்பாளர்களைத் தெரிவு செய்து, இப்பகுதிகளில் இருக்கும் அங்கவீனப் பெண்களுக்கு எமது அமைப்பின் நோக்கங்களை தெளிவுறுத்தி வருகின்றோம். இப் பிரதேசங்களில், இவ் இணைப்பாளர்களின் உதவியுடன், அங்கவீனப் பெண்களுக்கான உரிமைகள், அவர்கள் பாரபட்சம் காட்டப்படாது நடாத்தப்பட வேண்டும் போன்றவை தொடர்பான முழுநாள் பயிற்சி முகாம்களை நடாத்தி வருகின்றோம். இதன் மூலம் பின்தங்கிய கிராமங்களிலும், பகுதிகளிலும் சிறு குழுக்களாக அவர்களை ஒன்று திரட்டும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

***அரச தரப்பில் உங்கள் அமைப்புக்கு கிட்டும் ஆதரவு பற்றி?***

குறிப்பாக, நாம் அனுராதபுரம் பகுதியில் செயற்பட்டு வரும்வேளை, சமூக சேவைகள் அமைச்சர் பேர்ட்டி பிரேமலாலின் முழு உதவியும் கிட்டியது. அனுராதபுரம் மாவட்டத்தில் நாம் அங்கவீனப் பெண்களுக்கான தொழிற்பயிற்சி நிறுவனமொன்றை ஆரம்பித்தோம். இதற்கான கட்டிட வசதிகள் யாவும் அமைச்சராலேயே பெற்றுத் தரப் பட்டது.

***இவ்வாறானதொரு அமைப் பொன்றை கொண்டு நடாத்தும் போது ஏற்படுகின்ற சிக்கல்களைப் பற்றி கூற முடியுமா?***

எமக்கு ஏற்பட்ட பிரதான சிக்கல், அங்கவீனப் பெண்களை எவ்வாறு திரட்டுவது என்பதே. பெரும்பாலான பெற்றோர்கள் தமது அங்கவீனப் பெண் பிள்ளைகளை இவ்வாறான சமூக செயற்பாடுகளுக்கு அனுமதிக்க மறுக்கின்றனர். இவர்கள் வீட்டிலேயே ஒடுக்கி வைக்கப்படுகின்றனர். இதுதான் உன் உலகம் என கட்டுப்படுத்தி வைக்கின்றனர். சில பெண்கள் சமூகத்துடன் பழக கூச்சப்படுகின்றனர். சில சமயம் சமூக அபிப்பிராயங்களும் இவற்றுக்கெல்லாம் பெரும் சார்பாக அமைந்து விடுகின்றன.

அங்கவீனப் பெண்களுக்கும் உரிமைகள் உண்டு என்பதை இன்னும் இச்சமூகம் ஏற்க மறுக்கின்றது என்பது கண்கூடு. இதனால் அங்கவீனப் பெண்களை நிறுவனமயப்படுத்த அவர்களுக்கும், அவர்களைச் சார்ந்தோருக்கும் அறிவூட்டல்களை மேற்கொள்ள வேண்டி வந்தது. "நான் ஒரு அங்கவீனப் பெண். நான் என்ன செய்ய வேண்டும். என்னால் என்ன செய்ய முடியும்" என்பதை விளங்க வைக்க மிக்க கடினமாக இருந்தது. இதே விடயத்தை இச்சமூகத்துக்கு விளங்க வைப்பதும் அதை விடக் கடினமாக இருந்தது.

***நீங்கள் கூறுவதிலிருந்து இச்சமூகத்தில், அங்கவீனப் பெண்கள் விசேட சிக்கல்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது எனக் கொள்ள லாமல்லவா?***

குறிப்பாக, பின்தங்கிய கிராமங்களில், பல அங்கவீனப் பெண்களை சந்திக்கும் வாய்ப்பு கிட்டியது. அவர்களில் பலர் பாலியல் வல்லுறவுக்குள்ளானவர்கள். குறிப்பிட்டதொரு கிராமத்தில், சுமார் 18 வயதுடைய கண் தெரியாத பெண்ணை சந்தித்த வேளை, அவர் 70வயது மதிக்கத்தக்க நபரால் தாம் பாலியல் வல்லுறவுக்குள்ளானமையை தெரிவித்தார். அதேபோல் இன்னொரு கிராமத்தில் குறிப்பிட்டதொரு பெண்ணை அவரது உறவினன் பாலியல் இம்சைக்குள்ளாக்குகிறார் என தெரிவித்தார். இவர்களுக்கு பொலிசோ, சட்டமோ எந்தவித உதவிகளையும் செய்வதில்லை என்பது வருத்தத்திற்குரிய விடய மாகும். ஒரு புறம் அங்கவீனம், மறு புறம் பெண் என்ற நிலை இவர்களைப் பெரிதும் பாதிக்கின்றது. அதேபோல், சித்தசுவாதீனமற்ற அங்கவீனப் பெண்களின் நிலையை கூறத் தேவையில்லை. அங்கவீனம் என்ற ஒரே காரணத்தினாலேயே அவர்களை எந்தவித அச்சமுமின்றி இவ்வாறான நிலைக்கு உள்ளாக்க இந்த ஆணாதிக்க சமூகம் முனைந்துள்ளது. நாம் இது தொடர்பாக பரந்த அளவில் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த எண்ணியுள்ளோம். இது கடினமான காரியம் என்ற போதிலும் இத்திட்டத்தை செயற்படுத்த திடமாயுள்ளோம் என்றே கூற வேண்டும்.

***உங்களது அமைப்பு, ஏனைய பெண்கள் அமைப்புகளில் இருந்து எவ்வாறு வேறுபடுகிறது எனக் கூறுவீர்களா?***

எனக்குப் பல பெண்கள் அமைப்புகளுடன் இணைந்து பணி புரிந்த அனுபவமுள்ளது. முன்னரைவிட இப்பொழுது பெண்கள் தமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ள போராடுகிறார்கள். எனினும், பெண்கள் பிரச்சினைகளை கொழும்பு - குளிரூட்டிய அறைகளுக்குள் இருந்து தீர்க்க முடியாது. மார்ச் 8 அன்று கருத்தரங்குகளை நடாத்தி, அன்று மட்டும் கோஷம் போடுவதனால், பெண்கள் ஒருபோதும் முதலாம் பிரஜைகள் என்ற நிலையை அடைய முடியாது. பெண்கள் அமைப்புகள், துன்பப்படும் பெண்களுக்கிடையே சென்று அவர்களுடன் உறவாடியே அந்நிலைமையை அடைய முடியும். எந்நாளும் பெண்கள் அமைப்புகள் அனைத்தும் ஒன்றிணைந்து கருத்தரங்குகள் நடாத்துகின்றன. நாமும் கலந்துகொண்டு கருத்துக்களைப் பகிர்ந்துகொள்கின்றோம். இந்த கருத்துக்கள் சமூகத்தின் ஏனைய ஆண்களை சென்றடையும் வாய்ப்பும் இல்லை. நமது பிரச்சினைகள் தொடர்பாக நாம் முதலில் ஆண்களுக்கே அறிவூட்ட வேண்டும். எமக்கு சம உரிமைகளை வழங்க மறுக்கும், தடைபோடும் கட்டமைப்புகளைதாம் நாம் தகர்க்க வேண்டும். நான் பல கருத்தரங்குகளில் கலந்து கொள்ளும் போதெல்லாம் இவ்விடயத்தைப் பற்றிக் குறிப்பிடத் தவறுவதில்லை.

***யுத்தத்தின் ஓர் விளைவாக உருவாகிய எல்லைக் கிராமங்களில், உங்கள் அமைப்பின் செயற்பாடுகள், அனுப வங்கள் பற்றி கூறமுடியுமா?***


நாம் அனுராதபுரத்தில் பிரதானமாக செயற்படக்காரணம், அங்குள்ள எல்லைக் கிராமங்கள் தாம். எமது அமைப்புக்கு, கெப்பித்திக்கொல்லாவ எனும் பிரதேசத்தில் பல அங்கவீனப் பெண்கள் உள்ளதாக செய்தி கிட்டியது. இராணுவ நெருக்கடிகளுக்கு மத்தியில் நாம் அங்கு சென்றோம். அங்கு ஒரு தாயும், 5 பெண் பிள்ளைகளும் உள்ள குடும்பமொன்றைச் சந்திக்க முடிந்தது. இவ் 5 பெண்களும் கண் பார்வையற்றவர்கள். அவ் எல்லைக் கிராமத்தில், ஒவ்வொரு குடும்பத்திலும் இரு உறுப்பினர்கள் இரவில் காவல் செய்ய செல்லும் வழக்கம் உள்ளது. ஆனால், அந்த தாய், 'நான் எப்படி இப்பிள்ளைகளை விட்டு காவலுக்குச் செல்வது?' என்று எம்மிடம் வினவினார். மேலும், யுத்த அதிர்ச்சியினால் அங்கு பல பெண்கள் உளவியல் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். எமது செயற்திட்டத்தில் இந்த எல்லைக் கிராமங்கள் பெரும் முக்கியத்துவத்தைப் பெறுகின்றது. கெப்பித்திகொல்லாவ, விலாச்சிய போன்ற பிரதேசங்களில் நாம் செயற்பட்டு வருகின்றோம். இவ் விடயத்தில் நாம் சிங்கள, தமிழ், முஸ்லிம் வேறுபாடு பார்ப்பதில்லை என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

***அங்கவீன மகளிர் சங்கத்துக்கு ஏ்னைய பெண்கள் அமைப்புகளிடமிருந்து எவ்வாறான உதவிகள் கிட்டுகின்றன?***

Ngo Forum என்ற அமைப்பு எமக்கு பல உதவிகள் செய்துள்ளன. இவர்களின் உதவியினாலேயே எம் அமைப்பை பீஜிங்கில் பிரதிநிதித்துவப்படுத்தும் வாய்ப்பு கிட்டியது. எல்லா பெண்கள் அமைப்புகளும் எமக்கு உதவி செய்ய விருப்புடன் உள்ளன.

***தமிழ் அங்கவீனப் பெண்களுக்கு நீங் கள் ஏதாவது கூற விரும்புகிறீர்களா?***

தமிழ் அங்கவீனப் பெண்களுடன் தொடர்பு கொள்ளவோ, அவர்களுடன் இணைந்து செயற்படவோ எமக்கு இதுவரை வாய்ப்பு கிட்டவில்லை. நான், சில முஸ்லிம் அங்கவீனப் பெண்களை சந்தித்துள்ளேன். அவர்கள் காது கேளாதவர்களாகவும், வாய் பேசாதவர்களாகவும் இருந்தனர். எமது அமைப்பில் ஒரு மாத பயிற்சி பெற்று விட்டுச் சென்றனர். அமைப்பு என்ற ரீதியில் நாம் தமிழ் அங்கவீனப் பெண்களுடன் இணைந்து செயலாற்ற பெரும் ஆவல் கொண்டுள்ளோம். அவர்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க, அவர்களுடன் இணைந்து செயற்பட விரும்புகிறோம். எங்களுடன் இணைந்து செயலாற்றும் ஆவல் உள்ளவர்கள் எம்முடன் இணைய நாம் அவர்களுக்கு மனப்பூர்வமாக அழைப்பு விடுக்கிறோம்.



படையில் இருப்பதையே காட்டுகிறது.

1994இல் பதவிக்கு வந்த பொ.ஐ.மு. அரசாங்கம் அதே ஆண்டு இறுதியிலிருந்து நடத்திய பேச்சு வார்த்தைகள் 1995 ஏப்ரலில் முறிவடைந்தது. 1995 ஒக்டோபரில் சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையின் மூலம் யாழ் குடா நாட்டைக் கைப்பற்றிய அரசாங்கம் அது தொடக்கம் யாழ் குடா நாட்டை ஒரு மூடுண்ட பிரதேசமாகவே ஆக்கி வந்தது. வெளியுலகத்துக்கு அங்கு இராணுவத்தைக் கொண்டு சிவில் நிர்வாகத்தை நடாத்தி வருவதாகவும் பிரச்சாரப்படுத்தியும் வந்தது.

போரினால் அரசு சந்தித்து வந்த தொடர் தோல்விகளினால் படையினரின் உளநிலை வீழ்ச்சி கண்டிருந்தது. இதேவேளை மூடுண்ட பிரதேசமாக இருந்த யாழ் குடா நாட்டில் பல நூற்றுக்கணக்கானோர் காணாமல் போனோர்கள். அடிக்கடி ஆங்காங்கு சடலங்கள் கிடைத்துக் கொண்டிருந்தன.

மனித உரிமைகள் அமைப்புகளுக்கு கிடைக்கப்பெற்ற தகவல்களைக் கொண்டு மாத்திரம் ஏறத்தாழ 600க்கும் மேற்பட்டோர் காணாமல் போயுள்ளதாக தெரிவித்த போது அதனை

வெளிக் கொ… அவ்வளவு இ… இருக்கவில்லை.

பொதுவாக… இந்த பாலியல்… சமூகத்தை அ… எதிரித் தரப்பு ந… ஹிட்லரின் நாசி… அண்மைய பெ… வரை காண… இனத்தின் து… வேண்டுமான… பெண்களின் மீ… கொண்டு இன… அது நடக்கு… கருதினார்கள்… பொஸ்னியப் … அவர்களுக்கெ… மைத்து அவ… சென்று மாறி ம… க்குள்ளாக்கி அ… செய்து பிள்… பின்னர் பிறந்… இனம் என்று… கணக்கான … ஏற்பட்டது. இ… அவ்வினத்தின்… விட்டதாகவு… விட்டதாகவும்…

# போரின்…
# பாலிய…

ஸ்ரீலங்கா அரசின் சிங்கள இராணுவத்தின் தொடர்ச்சியான ஆக்கிரமிப்புப் போரில் பொது மக்களை ஏமாற்றி மசிய வைக்க ஒரு தடவை பேச்சுவார்த்தை சமாதான நாடகமாடியது. உலக நாடுகளை தம்பக்கம் ஈர்ப்பதற்காக தீர்வுப் பொதி நாடகம் ஆடியது. இன்று சிங்கள பௌத்த பேரினவாத கட்டமைப்பின் தமிழ் மக்கள் குறித்தும் வரலாறு குறித்தும் கட்டமைக்கப்பட்டுள்ள கருத்தியல்களை மாற்றியமைக்காமல் எதையும் செய்ய முடியாது என்பது நிரூபிக்கப்பட்டுவிட்டது.

இந்தப் பேரினவாதக் கட்டமைப்பை வளர்த்தெடுக்க எந்த ஆதிக்க சக்திகள் காரணமாக இருந்தனவோ இன்று அதே சக்தியானது ஆதிக்க விரும்பினாலும் கூட தான் வளர்த்துவிட்டுள்ள கட்டமைப்பு அப்படிப்பட்ட ஒரு தீர்வுக்கு ஆதரவு தரப்போவதில்லை என்பதையும், அது ஆதிக்க சக்திகளின் இருப்புக்கே உலை வைத்துவிடும் என்பதும் அம்பலப்பட்டுள்ளது.

இந்த நிலையில் சமாதான முயற்சி, பேச்சுவார்த்தை, போர் நிறுத்தம், தீர்வு என்பவற்றை எதிர்க்க சிவில் சமூகமே தயாராகி வருவதை தென்னிலங்கையின் அண்மைய நிகழ்வுகள் நிரூபித்து வருகின்றன. இந்த நிலையில், அரசு விரும்பியோ விரும்பாமலோ தனது இருப்புக்காக போரை நடத்தியேயாக வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. அதற்காக எவ்வளவு பெரிய இழப்புகளுக்கும் முகம் கொடுக்க சிவில் சமூகம் பழக்கப்பட்டு-பழக்கப்படுத்தப்பட்டு வருகிறது. தென்னிலங்கையில் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம், பொருள் விலையுயர்வு, தீர்வைகளின் அதிகரிப்பு, வேலையில்லா திண்டாட்டம் என்பவற்றைக் கூட போரின் பேரால் நியாயப்படுத்துவதை எதிர்த்து பெரிய எதிர்ப்பு "நடவடிக்கைகள்" எதுவும் இல்லை.

அரசின் அரசியல் தந்திரோபாய நடவடிக்கைகளில் ஒன்றாகவே இன்று போர் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட் நிலையில் தான் போரின் எதிர் விளைவுகளை சந்திப்பதாயிருந்தால் படையினரை உற்சாகப்படுத்தியே ஆக வேண்டும். படையினரின் உயிரிழப்புகள், படையின் ஏனைய பொருளிழப்புகள், முகாம் இழப்புகள் எனபனவற்றால் படையிலிருந்து வெளியேறுவோரின் தொகை அதிகரித்து வருகின்ற அதே நேரம் புதிதாக சேருவோரின் தொகை குறைந்துக் கொண்டே வருகிறது. தென்னிலங்கையில் வீடுகளில் பெற்றோரை மிரட்டுகின்ற பேச்சாகவே "படையில் போய் சேர்ந்து விடுவேன்" என்பதைக் காண முடிகிறது.

இந்த நிலையில் உள்ள படையினரை தொடர்ந்து தக்க வைக்கவும், புதிதாக படைக்குச் சேருவதை ஊக்குவிக்கவும் பல வழிமுறைகளைக் கையாள்கிறது. படையில் இணைவோருக்கான சம்பள, சலுகைகள் அதிகரிப்பு அவற்றில் முக்கியமானவை. இது போன்ற வழிமுறைகளில் ஒன்றே படையினரின் போர்க்கால குற்றங்களை பொருட்படுத்தாமை என்பது.

அந்த போர்க்கால குற்றங்களில் பாரிய ஒன்றாக தமிழ்ப் பெண்களின் மீதான பாலியல் வல்லுறவு நிகழ்கிறது. இது வெளிப்படையாக பாலியல் இச்சை சார்ந்ததாக காட்டப்பட்டாலும் அதற்கும் அப்பாலான பொருண்மைகள் உள்ளன.

இதற்கான உள்ளார்ந்த அனுமதி படையில் இருப்பதை நிலைமைகள் வெளிக்காட்டியுள்ளன. இது பெரியளவில் பிரச்சாரப்படாமல் எதனையும் செய்யலாம் என்கின்ற நிலைப்பாடு முறையாக எதிர்கொள்ளவில்லை.

இப்படிப்பட்ட நிலையில் தான் பாலியல் வல்லுறவு சம்பவங்கள் குறித்த தகவல்கள் தொடர்ந்து வெளி வந்து கொண்டிருந்தன. வடக்கு கிழக்குப் பகுதிகளில் படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் படையினராலேயே மேற்கொள்ளப்பட்ட சம்பவங்கள் குறித்த உண்மைகளை

விட்டதாகவ… அறிவித்தார்…

இப்படி… தரப்பின் … விருந்தாக … கான பாலி… பாலுறவு இ… தும் அங்கு… உலக மக…

## "சர்வதேச குற்றவியல் நீதிமன்ற ஒப்பந்தத்தில் இலங்கை ஏன் கையெழுத்திடவில்லை?"

### -சுனிலா அபேசேகர-



இன்று பொதுவாகவே பாலியல் வல்லுறவு சம்பவங்களின் அதிகரிப்பு வேகமாகியிருந்தாலும் கூட யுத்த சூழ்நிலையைப் பொறுத்தளவில் படையினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றனவே?

பெண்களிடம் அதிகாரம் இல்லாமலிருக்கின்ற அதிகாரத்தைப் அடையாமலிருக்கின்ற பெண்களின் மீது மேற்கொள்ளப்படுகின்ற வன்முறைகளிலேயே உச்ச வடிவம் தான் பாலியல் வல்லுறவு. சமூகத்தில் நிலவுகின்ற பாலியல் வன்முறைகள் என்பது பல்வேறு வடிவங்களிலும் இருக்கின்றது. ஒரு ஆண் பிள்ளையைப் போலல்லாது பெண்ணாணவள் பிறந்தவுடனேயே அவளது நடத்தை, அவளது கல்வி, அவளது அறிவியல் எல்லாமே மட்டுப்படுத்தப்படுகிறது. தொடர்ச்சியாக கண்காணிப்புக்குள்ளாகிறாள். அவளது திருமணத்துக்கு முன் அவளது கன்னித் தன்மை பரிசோதிக்கப்படுகிறது.

இதற்கு சமூக பழக்கவழங்கங்கள், மரபுகள் துணை செய்கின்றன. எனவே வன்முறையென்பதை நாம் பரந்த அர்த்தத்தில் காண வேண்டும். அப்போது தான் அதன் ஊடுறுவலையும், வியாபகத்தையும் சரியாகப் புரிந்து கொள்ள முடியும்.

இப்படிப்பட்ட வன்முறைகளின் உச்ச வடிவம் தான் பாலியல் வல்லுறவு. ஆணுக்கும் பெண்ணுக்குமிடையிலான பாலுறவு என்பது ஒரு நெருங்கிய அன்புப் பரிமாறலுக்குரிய சந்தர்ப்பம். அந்த கிட்டிய சந்தர்ப்பத்தையல்லவா வன்முறைக்குள்ளாக்குகின்றனர். இந்த வகையான சம்பவங்கள் வாழ்நாள் முழுவதும் பெண்கள் ஆண்களுடன் பாலுறவு கொள்ளும் போதெல்லாம் அந்த நினைவுகள் வந்து அச்சங்கொள்ளச் செய்யும்.

சமூகத்தில் இந்த அதிகாரம் யாரிடம் இருக்கிறது. குடும்பத்தில் தகப்பனுக்கு, சகோதரனுக்கு, கணவனுக்கு, மற்றும் சமூகத்தில் மதத் தலைவர்களுக்கு, அரசியல் தலைவர்களுக்கு, பணம் படைத்த வர்க்கத்துக்கு அதிகாரம் இருக்கின்றது.

இது போலவே இலங்கையைப் போன்ற சமூகத்தில் துப்பாக்கியை ஏந்திய தரப்பு விசேட அதிகாரம் கொண்டிருக்கிறது. ஆணதிகார வன்முறையின் உயர்ந்தபட்ச வடிவம் தான் இராணுவமயம். பலாத்காரமாக சமூகத்தில் இருப்பு கொண்டிருக்கும் ஒரு வடிவம் தான் இராணுவமயம்.

இலங்கை போன்ற நாட்டில் வன்முறை உயர்ந்தபட்சம் வளர்ந்துவிட்டுள்ளது. மூத்தவர்கள் இளையவர்களை அடிக்கின்றனர். கணவன் மனைவியை அடிக்கிறான். ஆசிரியர் மாணவருக்கு அடிக்கிறார். பாதையில் போபவர்கள் இன்னொருவரை அடிக்கின்றார். இப்படி வன்முறையென்பது சகல தரப்பிலும் வியாபித்துள்ளது.

இவ்வகையான வன்முறைகளை துப்பாக்கி முனையில் பயமுறுத்தி விரும்பியதை அடையமுடியுமென்ற நம்பிக்கை வளர்ந்து விட்டுள்ளது. சாதாரண சமூகத்தைச் சேர்ந்த ஒருவரால் இப்படியானவை மேற்கொள்ளப்பட்டால் அது நிருபிக்கப்படும் பட்சத்தில் அவனை தண்டிக்க சிவில் சட்டங்கள் இருக்கின்றன. ஆனால் சீருடையினர் இதை செய்தால் அதனை நிருபிப்பதற்கும் வாய்ப்புகள் கிடைக்காது. அவ்வாறு நிரூபிக்கப்பட்டாலும் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கான வாய்ப்புகளும் கிடையாது. அவர்களின் தொழிலின்படி, அவர்களின் சீருடையின்படி அவர்கள் குற்றம் புரிவதற்கான அங்கீகாரம் கிடைத்து விடுகிறது. இதை தமது கடமையின் ஒரு பகுதியாக கொள்கின்றனர்.

கடந்த 1987-89 காலப்பகுதிகளில் மனித உரிமைகளை மீறுவதற்கும், உரிமைகளை நாசம் செய்வதற்கும் மக்களின் மீதான வன்முறைகளை மேற்கொள்வதற்கும் புதுமையான விதத்தில் படையினருக்கு லைசன்ஸ் வழங்கப்பட்டிருந்தது. இந்தக் காலப்பகுதிகளில் பல ஆயிரக்கணக்கான இளைஞர்கள் காணாமல் போவதற்கு காரணமாக இருந்தவர்களின் பெயர்கள் அவற்றை விசாரித்த ஆணைக்குழுக்களில் பேசப்பட்டதல்லவா? ஆனால் அந்த பொலிஸ், படை போன்றவற்றைச் சேர்ந்த அந்த அதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு சட்டமா அதிபர் திணைக்களம் எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லையே.

நாங்கள் அது குறித்து விசாரித்த போது "யுத்தமொன்று நிலவுகின்ற போது இது குறித்த நடவடிக்கை எடுப்பதாயிருந்தால் இராணுவத்தினரின் உள நிலையைப் (Moral) பாதி[illegible]மென்றனர். இந்தக் காரணம் குறித்[illegible] கவனமாக இருக்க வேண்டும். இன்று மக்கள் மத்தியில் இந்தளவு வன்முறைகள் வளர்வதற்கு நாடு இராணுவ மயமாகியிருப்பது ஒரு முக்கிய காரணம். இவ்வாறு ஆயுதங்களைப் பாவித்து மக்களை அடக்கலாம், மக்களின் குரலை அடக்கலாம் என்கின்ற நம்பிக்கை பொதுவாகவே நிலவுகிறது.

சமூகத்தில் அதிகாரம் அற்ற குழுவினர் தான் அதிக பாதிப்புக்குள்ளாகின்றனர். சிறுபான்மை இனக்குழுமங்கள், ஒடுக்கப்பட்ட சாதியினர், பெண்கள், சிறுவர்கள், ஏழைகள், அங்கவீனர்கள் என அப்பாவிகள் இதற்கு பலியாகின்றனர். அதிகாரம் உள்ளவர்கள் அல்லது பலம் படைத்தவர்கள் இவர்களை இலகுவாக ஒடுக்கி தமது அதிகாரத்தை-நலன்களை நிலைநாட்டிவிட முடிகிறது.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் இலங்கையைப் பொறுத்தளவில் யுத்தம் நிலவுகிறது. இந்த யுத்தத்தில் பலமுடையவர்களாக ஆயுதம் தாங்கியவர்கள் உள்ளார்கள். அவர்கள் புரிகின்ற குற்றங்களைத் தடுக்கக் கூடியளவு… இல்லை. … முன்னால் ச… ஆயுதம் ஏ… ளாக ஆண்க… தரப்பினராக… அதிகாரம் … முறையில… துப்பாக்கி… இலகுவாக…

கடந்… வன்முறைக… செய்தவர்க… குற்றங்களு… கொண்டு வ… வேண்டும். … தேச ரீதியி… மன்றம்" எ… கப்பட்டது. … நாடுகள் … பெற்றுக்கெ… இலங்கை … த்திடவுமி… இடம்பெறு… ரீதியில் அ… ப்பு, எடுக்கப… என்பவற்… கிறது. "இ… திட்டால் … போர்க்கு…

வருக்கும்
காரியமாக

லங்களில்
கூடாக ஒரு
குள்ளாக்க
க்கம். இது
தொடக்கம்
பிய போர்
பாஸ்னிய
கெடுக்க
வினத்தின்
வல்லுறவு
விட்டால்
பியர்கள்
பிளைவாக
றைப்படுத்தி
ன முகாம-
ர்பியர்கள்
வல்லுறவு-
பம் தரிக்கச்
வத்தனர்.
ளை என்ன
னர். நூற்றுக்
இந்த கதி.
ப்புக்கூடாக
க் கெடுத்து
ப் படுத்தி
டச் செய்து

ஜப்பானியப் படைகள் கிழக்காசிய நாடுகளில் புரிந்த கொடுமையும் இவை தான். அவை நீண்ட காலமாக வெளித் தெரியாமல் இருந்து மிக அண்மையில் தான் பெண்களை பாலியல் அடிமைகளாக முகாம்களில் வைத்திருந்த விடயங்கள் வெளிச்சத்துக்கு வந்தன. இந்தோனேசிய, பிலிப்பைன்ஸ், மற்றும் கொரியா உள்ளிட்ட நாடுகள் பலவற்றில் பெண்கள் பலர் தடுத்து வைக்கப்பட்டு படையினரின் பாலியல் தேவைகளுக்கு பயன்படுத்தி வந்த சம்பவங்கள் உலகையே உலுக்கியது.

எதிரி நாட்டுப் படையினர் மீது நடத்தப்பட்டு வந்த இத்தகைய மனிதநேயமற்ற சம்பவங்களே இலங்கையிலும் நடந்து வருகின்றன.

அண்மையில் கூட இந்தோனேசியாவில் சுகர்னோ அரசாங்கத்துக்கு எதிரான கிளர்ச்சியின் போது சீன நாட்டைச் சேர்ந்த பெண்கள் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்ட செய்தி இன்று உலகப்புகழ் பெற்றவை.

இன்று நடக்கும் யுத்தம் எதிரி நாட்டுடனான யுத்தமென்பதையும் தமிழ்ப் பெண்கள் தங்கள் நாட்டுப் பெண்களில்லை வேற்று நாட்டுப் பெண்களே என்பதையும் தெளிவுறுத்தியது இதே அரச படை தான்.

மக்கள் உள்ளாகினர்.

ஸ்ரீ லங்கா படையை அப்படி சிங்களப் படை, எதிரிப் படையென்று சொல்வதற்கு முழுத் தகுதியையும் அடைந்திருக்கிறது.

(சிங்களப் படையென்ற சொல் இனவாதத்தை வெளிப்படுத்துவதாக சொல்கிறார்கள் ஆனால் சிங்களவர்களை மட்டுமே கொண்ட படையாகவும் எதிரிநாட்டின் மீது யுத்தம் செய்வது போல யுத்தக் குற்றங்களில் ஈடுபடுவதாலும் இப்பதம் பொறுத்தமானதே)

எனவே இப்படிப்பட்ட சிங்களப் படையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பாலியல் வல்லுறவுகள் தமிழ் மக்களின் இனத்துவத்தை அவமானப்படுத்த பயன்படுத்துகின்ற ஒன்றாகவே கொள்ள முடிகிறது.

ஆனால் தற்செயலாக கிருஷாந்தி குமாரசுவாமி பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டதும், கிருஷாந்தியைத் தேடிச் சென்ற அவரது தாயார், சகோதரன், அயலவர் ஆகியோரையும் கொன்று புதைத்த சம்பவம் தற்செயலாக அம்பலத்துக்கு வந்ததும் (கிருஷாந்தி குடும்பத்தின் வர்க்கப்பின்னணி காரணமாக அதற்கு தொடர்புசாதனங்கள், பெண்கள் அமைப்புகள், சட்ட உதவிகள் வாய்ப்-

# க்ருவியாக

# வல்லுறவு!

பர்களுக்கு

ரில் எதிரித்
யினருக்கு
ம் பலருக்-
பாருளாக,
க்கப்படுவ-
இரண்டாம்
ர் போது

இராணுவத்தின் ஆட்சேர்ப்பு தமிழ் மக்கள் மட்டும் தேடி வேட்டையாடப்படல் என்பவற்றின் வெளிப்பாடுகள் அத்தனையும் இது சிங்களப் படை தான் என்பதை நிரூபித்தது. எனவே ஸ்ரீ லங்கா அரச படையும் வேற்று நாட்டுப் படையெனும் உணர்வும், ஆக்கிரமிப்பு இராணுவம், எதிரிப் படை என்கின்ற மனப்பதிவுக்கும் தமிழ்

**-ஜென்னி**

பாக அமைந்ததால்) அது உலக அளவில் அரசை அம்பலத்துக்கு கொண்டு வந்தது.

தவிர்க்க இயலாமல் இதனைப் பயன்படுத்தி அரசு போர்க் குற்றங்களுக்கு எதிராக எப்போதும் இருப்பதாக

→20

ழும்

லமானதாக
பாக்கிக்கு
விடுகிறது.
ஞயாளர்க-
காரம் அற்ற
னர். எனவே
னர் ஒடுக்கு
தங்களிடம்
காரணமாக
ர்கள்.
ப்படிப்பட்ட
ஆர்ப்பாட்டம்
போர்க்கால
ட விதிகள்
ராடியிருக்க
த்தில் சர்வ-
ரவியல் நீதி
ல் அமைக்-
ங்களில் பல
ட்டுப்புரிமை
ல் அதற்கு
, கையெழு-
போராட்டம்
சு என்கின்ற
டிய பொறு-
டிக்கைகள்
தம் குறிக்-
கையெழுத்-
அரசாங்கம்
இருக்கும்

முக்கிய அதிகாரிகளை நீதிமன்றத்தில் நிறுத்த மு ரவேண்டும்.

இன்று குறிப்பிட்ட ஒரு இனத்தை கீழ்த்தரமாக அவமானப்படுத்த வேண்டுமெனில் அவ்வினத்தைச் சேர்ந்த பெண்ணை பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கினால் அது சாத்தியமாகும் எனும் நம்பிக்கை நில்வுகிறது. ஒரு ஆணின் மீது காறி உமிழ்வதற்கு சமமான ஒரு அவமானத்தை ஏற்படுத்த வேண்டுமெனில் அவனது சகோதரியையோ, தாயையோ, மனைவியையோ மகளையோ வல்லுறவு புரிந்தால் போதுமானது.

இன்றும் ஆண்கள் மத்தியில் நடக்கின்ற சண்டைகளின் போது பார்க்கிறோம் அல்லவா, உனது தங்கையைத் தூக்குவேன், அக்காவைத் தூக்குவேன் என்று கூறப்படுகிறது அல்லவா? ஒரு ஆணின் ஆண்மைக்கு சவாலிட வேண்டுமாக இருந்தால் அவனுக்கு நெருங்கிய பெண்ணை வல்லுறவுக்கு உள்ளாக்கினால் முடியும் என்ற நம்பிக்கை இருக்கின்றது.

இன்று இலங்கையிலுள்ள நீதிமன்றங்களிலும் பாலியல் இம்சைகள் அனைத்தையும் குற்றமாக கணிக்கிற வழக்கம் வந்து கொண்டிருக்கிறது. இது ஜெனிவா பிரகடனத்தின் பின் படிப்படியாக அடையப்பெற்ற பெண்களின் வெற்றி.

வரலாற்றில் நாடுகளுக்கிடையிலான சண்டைகளின் போது பெண்கள் மீது வன்முறையை கட்டவிழ்ப்பது என்பது இன்று போரின் ஒரு பகுதியாகவே இடம் பெற்று வருகிறது.

பாலியல் வல்லுறவுக்கு உள்ளான ஒரு பெண் தனக்கு ஏற்பட்ட நிலைமையை கூறிவிட்டு இதே சமூகத்தில் சுதந்திரமாக வாழ இடமிருக்கிறதா என்கின்ற கேள்வியை எழுப்பிப் பார்க்க வேண்டும்? சமூகத்திலுள்ள ஐதீகங்களுக்கு இப் பெண்களால் முகங்கொடுக்க இயலுமா? சமூகத்தில் அவளுக்கு எந்த ஆதரவும் அனுதாபமும் கிடைப்பதில்லை. மாறாக அவளை அவமானப்படுத்தவும் தண்டிக்கவும் அவளை தள்ளி வைக்கவுமே செய்கிறது.

இன்று கமல் அத்தர ஆராச்சி வழக்கை எடுத்துக்கொள்வோம். இன்று பாதிக்கப்பட்ட சிறுமி வயதில் குறைந்தவர் பாதுகாக்க வேண்டுமெனக் கூறி கங்கொடவிலவில் உள்ள பாதுகாப்பு முகாமொன்றில் அடைத்து வைக்கப்பட்டுள்ளாள். அது ஒரு சிறை. ஆனால் தவறிழைத்தவர் இன்று பிணையில் விடுதலையாகியிருக்கிறார். இது தான் சட்டம் பெண்களுக்கு தரும் பாதுகாப்பு.

ஆண்கள் இந்த பிரச்சினையை சரியாக விளங்கிக்கொள்ள வேண்டும். ஆணாதிக்கம் இதில் ஆற்றுக்கின்ற பாத்திரத்தை ஆண்கள் உணர வேண்டும். பெண்களுக்கு எதிரான வன்முறைகள் நிலவுவதானது சகல ஆண்களுக்குமான பெரும் அவமானமாக கருத வேண்டும். பெண்களைக் கண்டால் வல்லுறவுகொள்ளத் தோன்றும் மனநிலையானது மிருகத்தனமானது. இப்படிப்பட்ட மிருகத்தனமிக்கவர்கள் என ஆண்களை கூறினால் அது எத்தனைப் பொருத்தமுடையதாக இருக்கும். எனவே இந்த அவமானம் ஆண்களுக்கே.

# சூரியக்கதிரின் பின்:

## "பாதுகாப்பு" படையினர் புரிந்த பாலியல் வல்லுறவு சம்பவங்கள்

| திகதி | பெயர் | இடம் | பொறுப்பானவர்கள் | சம்பவமும் நிலைமையும் |
|---|---|---|---|---|
| 10 செப் 96 | 55 வயது பெண் | திருநெல்வேலி | படையினர் | படையினர் பலரால் வல்லுறவு |
| 08 செப் 96 | வாசுகி | யாழ்ப்பாணம் | 6 படையினர் | வீடு புகுந்து வல்லுறவுக்குள்ளாக்க முயற்சித்து அயலவர்களினால் காப்பாற்றப்பட்டார். |
| 07 மார்ச் 96 | 45 வயது பெண் | தியாவெட்டுவா | படையினர் | கனவனை துப்பாக்கியால் தாக்கிவிட்டு மனைவியை வல்லுறவுக்குள்ளாக்கியுள்ளனர். |
| 11 பெப் 96 | தனலெட்சுமி (17) | குமாரபுரம் | படையினர் | 24 பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தன்று இப்பெண்ணை வல்லுறவுக்குள்ளாக்கிய பின்னர் கொன்றுள்ளனர். |
| ஓக 96 | லக்ஷமிபிள்ளை | திருகோணமலை | படையினர் | 93இல் பிளான்டன்பொயின்ட் படைமுகாமில் வைத்து வல்லுறவு புரியப்பட்டது பற்றி பகிரங்கமாக கூறியதற்கு பழிவாங்கும் பொருட்டு இரு மகன்மார் முன்னிலையில் வல்லுறவு |
| 11 மே 96 | | கொடிகாமம் | படையினர் | வல்லுறவுக்குள்ளாக்கப்பட்ட பின் பெண்ணையும் அவரது கனவனையும் கொலை செய்துள்ளனர். 9 நாட்களுக்குப் பின் சடலம் கண்டெடுப்பு. |
| 19 மே 96 | ஸ்ரீரஞ்சனி (18), புவனேஸ்வரி (36), ராஜேஸ்வரி (38) | சரசாலை | படையினர் | வல்லுறவினை எதிர்த்து போராடிய போது காயத்துக்குள்ளாகி பின்னர் ஆஸ்பத்திரியில் மரணமாயினர். |
| 19 மே 96 | | கொழும்புத்துறை | படையினர் | தேவாலயத்திலிருந்து திரும்பிய வேளை கடத்திச் சென்று பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கி வல்லுறவு. |
| 12 மே 96 | 6 பெண்கள் | மட்டக்களப்பு | படையினர் | மாறி மாறி வல்லுறவு புரியப்பட்டுள்ளனர். |
| 7 செப் 96 | கிருஷாந்தி குமாரசுவாமி (18) | கைதடி | இராணுவம் | வல்லுறவுக்குப் பின் கொலை. தேடிச் சென்ற தாயார், சகோதரன், அயலவர் ஆகியோரும் கொலைக்குள்ளானார்கள். 6 பேருக்கு தூக்குத் மரண தண்டனை வழங்கப்பட்டது. |
| 30 செப் 96 | ராஜனி வேலாயுதப்பிள்ளை (22) | உரும்பிராய் வடக்கு | இராணுவத்தினர் | கனடா செல்வது குறித்து நன்பிக்கு கூறச் சென்றிருந்த வேளை கோண்டாவில் காவலரணில் படையினரால் தடுத்து வல்லுறவு புரிந்து பின் கொலை. நிர்வாணமாக சடலம் தோட்டத்தில் கண்டெடுப்பு. |
| 12 யூலை 97 | சந்திரகலா கிருஷ்ணபிள்ளை (20) | அள்வை | இராணுவத்தினர் | ஆசிரியையான இவர் வீடு திரும்பிக்கொண்டிருக்கையில் தாக்கப்பட்டு இராணுவத்தினரால் கூட்டு வல்லுறவுக்குள்ளாக்கியுள்ளனர். |
| 19 ஓக 97 | எஸ்.ராஜினி (19) | வாழைச்சேனை | துறைமுகப் படையினர் | வல்லுறவின் பின்னர் உடல் உள பாதிப்புக்குள்ளாகியுள்ளார். |
| 05 ஓக 97 | சின்னப்பு பாக்கியம் (37) | மாவடி வேம்பு | படையினர் | |
| ஜீலை 97 | விஜயராணி (17) | அராலி | இராணுவத்தினர் | பாடசாலை விட்டு வரும் வழியில் படையினரால் கூட்டு வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டு மனநோய் பாதிப்படைந்துள்ளார். |
| 19 மே 97 | கிருபாதேவி (37) | மட்டுவில் வடக்கு | இராணுவத்தினர் | தந்தையையும், இரு பிள்ளைகளையும் வெளியே விரட்டிவிட்டு விதவையான இவரை வல்லுறவு புரிந்தனர். |
| 05 செப் 97 | பாலந்தி (6) | அச்சுவேலி | இராணுவத்தினர் | கூட்டு வல்லுறவுக்குள்ளாக்கியதில் ஆபத்தான நிலையில் சிகிச்சையளிக்கப்பட்டு, யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றார். |
| 6 நவ 97 | ஷியாமளா (17) | பளை | சிப்பாய் | |
| 22 யூன் 98 | காளிக்குட்டி ராகினி (23) | பனிச்சங்கேணி | படையினர் | தற்போது சொந்த இடத்தைவிட்டு இடம்பெயர்ந்த நிலையிலுள்ளார்.. |
| 1 யூலை 98 | நாகலிங்கம் பவானி (48) | திருநெல்வேலி | இராணுவத்தினர் | காவலரணுக்கருகில் இருந்த இவர் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டதன் பின் கொல்லப்பட்டுள்ளார். |
| 29 ஏப் 96 | | கச்சாய் வீதி நாவற்குழி | இராணுவத்தினர் | குடிசைக்குள் நுழைந்து கனவனை வெளியிழுத்துவந்து கொலைபுரிந்துவிட்டு மனைவியை வல்லுறவுக்குள்ளாக்கினர். |
| 17 யூன் 96 | புவனேஸ்வரியும்(36) அவரது சகோதரியும் | மந்துவில் | இராணுவத்தினர் | சிவகுரு, நாகலிங்கம், ரவீந்திரன் ஆகிய மூவரைக் கொலை செய்து விட்டு பெண்கள் இருவரை வல்லுறவுக்குள்ளாக்கினர். |
| 01 மே 96 | புஸ்பலர் (22) | கச்சாய் | படையினர் | கனவனுக்கு தேநீர் கொண்டு வயலுக்கு சென்ற மனைவியின் சடலும் கனவனின் சடலமும் பின்னர் கிடைத்தன. |
| ஜுலை 96 | | மந்துவில் | படையினர் | சிவில் உடையில் வீடொன்றுக்குள் நுழைந்த படையினர் வீட்டுக்குள் நுழைந்து பெண்ணை வெளியிலிழுத்து வல்லுறவுக்குள்ளாக்கினர். |
| 9 ஓக 96 | பாலேஸ்வரி கார்த்திகேசன் (22) | கெருடாவில் | படையினர் | பாலேஸ்வரியை வல்லுறவுக்குள்ளாக்கிய பின் தந்தையும் வாளால் வெட்டிக் கொலை. |
| 16 யூலை 98 | நாகலிங்கம் பவானி (46) (இன்னுமொருவர்) | யாழ்ப்பாணம் | படையினர் | இனந்தெரியாத இரண்டு பெண்களின் சடலங்கள் நிர்வாணமான நிலையில் திருநெல்வேலியில் கண்டெடுப்பு. மற்ற சடலம் காக்கை தீவில் கண்டெடுப்பு. |
| 7 மே 98 | 36 வயது மனநோயாளர் | நொச்சிக்குளம் மன்னார் | படையினர் | காவலரணிலிருந்த படையினரால் மனநோயாளர் என்று தெரிந்திருந்தும் வல்லுறவு. |
| 15 ஏப் 98 | பாலகுமார் அஜந்தனா (17) | அரியாலை | பொலிஸ் | வல்லுறவு கொண்டதில் இரத்தம் கசிந்த நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதி.. |
| 16 மார்ச் 98 | எஸ்.செல்வராணி (28) | மீசாலை | இராணவத்தினர் | நன்பியைச் சந்திக்கச் சென்ற வேளை படையினர் சிலரால் பாலியல் வல்லுறவு |
| 15 மார்ச் 98 | | திருநெல்வேலி | பொலிஸ் கான்ஸ்டபிள் | மூன்று மாத கர்ப்பிணி மீது வல்லுறவு |
| 27 ஓக 97 | சவரி மெற்றலின் (31) | சொறிக் கல்முனை | எஸ்.டி.எப். | பாலியல் வல்லுறவின் பின்னர் கொல்லப்பட்டார். |
| 25 டிச 97 | கந்தையா அமுதா | விடத்தல்தீவு மன்னார் | பொலிஸ் | |
| 23 நவ 97 | | நாயன்மார்கட்டு | இராணுவத்தினர் | கைகால்கள் கட்டப்பட்டு சுயநினைவின்றி கண்டெடுப்பு. சிகிச்சையின் பின் மண்ணெண்ணெண் குடித்து தற்கொலை முயற்சி |
| 28 ஒக் 97 | 40 வயது பெண் | மந்திகை | இராணுவத்தினர் | வல்லுறவு புரிந்து வதைக்குள்ளாக்கியுள்ளனர். |
| 16 ஒக் 97 | தங்கநாயகி (49) | அம்பாறை | பொலிஸாரும் ஊர்காவற்படையின | வல்லுறவுக்குள்ளாக்கி பெண்குறியை வெட்டி சிதைத்து கொன்றுள்ளதாக அவரது மகன் தெரிவிப்பு. |
| 17 மே 97 | முருகேசுப்பிள்ளை கோணேஸ்வரி | அம்பாறை | பொலிஸார் | வல்லுறவுக்குள்ளாக்கிய பின் பெண்குறியினுள் கிரனைட் வெடிக்க வைத்து கொன்றனர் |
| 17 யூலை 97 | 17 வயது மாணவி | அராலி தெற்கு | படையினர் | மோசமாகத் தாக்கி வல்லுறவு |
| 17 மார்ச் 97 | வேலன் ராசம்மா (39), வேலன் வசந்தா (28) | மயிலம்பாவெளி மட்டக்களப்பு | படையினர் | மயிலம்பாவெளி முகாமைச் சேர்ந்த நான்கு படையினர் பலவந்தமாக புகுந்து மாறிமாறி வல்லுறவு கொண்டனர். |
| 09 யூன் 97 | சதாசிவம் தவமணி (தாய்), பொன்னம்பலம் ஜெயந்தி (மகள்), மற்றுமொரு பெண் | தியாவெட்டுவா மட்டக்களப்பு | படையினர் | வீட்டுக்குள் புகுந்து வல்லுறவு |
| 31 டிச 96 | 30 வயது பெண் | மண்டூர் | எஸ்.டி.எப் | காயங்களுக்குட்படுத்தப்பட்டுப் பாலியல் வல்லுறவு. |
| 12 நவ 96 | செல்வராஜா தேனுகா (10) | அச்சுவேலி | படையினர் | புத்தூர் காவலரணிலிருந்த படையினரால் வல்லுறவு |
| நவ 96 | யுவதி | வவுனியா | படையினர் | தடுத்து வைக்கப்பட்டிருந்த யுவதி 8 படையினரால் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டதன் பின் மரணம். |
| | | | | |

தொகுப்பு : என் சரவணன்




**பா**லியல் குறித்த விடயங்கள் புலமைத்துவ மட்டத்தில் பேசுபொருளாக ஆக்கப்பட்டு வருகிறது. இதே வேளை பெண்களின் மீதான பாலியல் வன்முறைகளின் சமீப கால அதிகரிப்பையும் அதன் கொடூரத்தையும் கூடவே அறிந்து அனுபவித்து வருகிறோம்.

ரீட்டா, பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டு தொலை செய்யப்பட்ட சம்பவம் குறித்த விசாரணைகள் வேறு பக்கம் திசை திருப்பப்பட்டு வருவதாக அறிகிறோம். பொலிஸார் காக்கைதீவு பகுதியில் நடத்தி வருகின்ற விசாரணைகளில் ரீட்டாவின் ஒழுக்கப்பண்புகள் குறித்தும் ஆராய்ந்து வருவதாக தகவல்கள் கிடைக்கின்றன.

இந்த நிலையில் தான் இத்தனை கோரத்தனத்தின் பின்னும் கூட அதிகாரத்துவம் படைத்த ஆணாதிக்கம் தனது "ஆண்மைத்துவ" செய்கையை மறைக்கவென, பலியாக்கப்பட்ட பெண்ணையே மீண்டும் மோசமாக சித்திரித்து அக்காடைத்தனத்தை நியாயப்படுத்தவோ அல்லது அதனை சமப்படுத்தவோ முனைவதைக் காண்கிறோம்.

இதுவரை காலமும் பாலியல் வல்லுறவுக்குள்ளான பெண்ணை ஆபாசமான உடையணிந்திருந்தாள், ஆபாசமாக காட்சி தந்தாள், மோசமான இடத்திலிருந்தாள், பிழையான பாதையில் வந்தாள், பிழையான நேரத்தில் வந்தாள் என் வல்லுறவுக்கு நியாயம் சொல்லும் வழக்கம் சாதாரண சமூக பேச்சாடலில் மாத்திரமல்ல, சட்டத்தின் முன் கூட காணப்படுகிறது. இது ஒரு சட்ட வலுவாகவும் எதிரிக்கு சாதகமாக அமைந்த எத்தனையோ வழக்குகளைக் காண முடிந்திருக்கிறது.

எனவே தான் இந்த கற்பொழுக்கம் குறித்தும் பாலுறவு குறித்தும் நிலவுகின்ற விடயங்களை ஆராய்வது அவசியமாகிறது.

பெண்ணின் உயிரியல் அம்சமான பாலுறுப்புகள் மீதான அதிகாரத்துவத்துக்கு ஆணாதிக்க மரபு வழிவந்த சமூக-பண்பாட்டுக் காரணிகள் முக்கியத்துவம் செலுத்துகின்றன.

ஆண்மை-பெண்மை குறித்த மரபுப் புனைவுகளின் வாயிலாகவும், ஐதீகங்களின் வாயிலாகவும் இது பலமாக வேரூன்றியுள்ளன. இவற்றை எமது கல்வி, தொடர்பூடக, மத விவகாரங்கள் பாதுகாத்து, வற்புறுத்தி வந்துள்ளன.

தனது கன்னித்தன்மையைப் பாதுகாக்க வேண்டியவளாக பெண் பழக்கப்படுத்தப்பட்டுள்ளாள். பாலியல் பற்றிய புரிதல் பெண்களுக்கு மறுக்கப்பட்டதாகவும், வரையறுக்கப்பட்டதாகவும் ஆக்கப்பட்டுள்ளன. பாலியலானது இரகசியத்துக்கும், அந்தரங்கத்துக்கும் உரிய ஒன்றாகவும் ஆக்கப்பட்டுள்ளது. அத்துடன் பாலியல் குறித்த வேட்கைகள், நாட்டங்கள் செயற்கைத்தனமானதாக கற்பிதம் செய்யப்பட்டுள்ளது. பேசாப்பொருளாக வைத்திருக்கப்பட்டாலும் கூட அது பெண்களுக்கு மட்டும்தான் என வரையறுக்கப்பட்டது. பெண்கள் மத்தியில் இவை பேசாப்பொருளாக இருக்கும் வரை அவர்களின் பாலியல் வேட்கைகள் **தணிக்கப்படுமென்ற நம்பிக்கை ஆணாதிக்கச்** சூழலில் நிலவுகின்றது.

ஒரு தாரமணம், குடும்பம், வம்சாவழி, ஒழுக்க மரபுகள் என்பன தனிச்சொத்துடமையின் வழிமுறைகள். இதில் ஒரு தார மணமானது தந்தை வழிச்சமூகத்தின் இருப்புக்கு (அதாவது தனது விந்தின் விளைவேயென்பதை நிறுவுவதற்கு முன்நிபந்தனையாக திகழ்கிறது.) அவசியமாக இருக்கிறது. குறிப்பிட்ட குழந்தை தனது ஆண்மைத்துவத்தின் விளைவு-வெளிப்பாடு எனக் கருதுகிறது.

எனவே தான் ஆணாதிக்கமானது "கற்பு" என்பதை பெண்ணின் மீதான விதியாக ஆக்கிய அதே நேரம் ஆணின் "கற்பு மீறலை" அது தனது ஆண்மையின் வெற்றியாகவும் நிறுவி விட்டிருக்கிறது.

இந்த கற்பொழுக்கமானது வரலாற்று பூர்வமாகவே பெருங்கதையாடலாக சித்திரித்து வரப்பட்டுள்ளது. அதன் விளைவாக இது இன்றும் பலமாக நிறுவப்பட்டுள்ளது. இந்தக் கதையாடலின் மத்தியல் விஞ்ஞானபூர்வமான உண்மைகள் வைதீக பிற்போக்கு சக்திகளால் **காலாகாலமாக காயடிக்கப்பட்டு வருகின்றன.**

பெண்ணின் இந்த கற்பொழுக்கத்துக்கு பெண்ணின் மீதான "யோனி மைய வாதம்" ஆற்றுகின்ற பாத்திரம் கரிசனைக்குரியது. இது தான் பெண்ணின் மீதான இயற்கையான உயிரியல் "கொடுமை". இனப்பெருக்க மையமாக அமைந்திரக்கிற உயிரியல் இயல்பை பெண்ணின் கர்ப்பம் குறித்த பயத்திற்கும் அடிப்படையாக இது ஆகியது. இந்த பயத்தின் அடிப்படையிலேயே ஆண்-பெண் உறவு கட்டமைக்கப்பட்டு குடும்ப அமைப்பு எனும் அதிகாரத்திற்கு ஒடுக்கியது. "ஒருத்திக்கொருவன்" எனும் சித்தாந்தத்தை பெண்ணுக்கு திணித்தது. இவை கெடாமலிருக்க ஒழுக்கநியதிகள், கண்காணிப்புகள், விட்டால் போதுமென்ற உடனடித் திரமணங்கள்.

ஆணின் "குஞ்சாமணி" லிங்கமாகவும் வழிபாட்டுக்குரிய ஒன்றாகவும் கருதப்படுகிறது. (இது எப்படி வழிபாட்டுக்கு வந்தது என்பதை பெட்டியில் உள்ள கதையைப் பார்க்க) அதற்கு கோவில் கட்டி கும்பிடுகின்ற அதே நேரம் பெண்ணின் யோனியானது தீட்டு, தூய்மை, துடக்கு, விலக்கு, அசிங்கம், அருவருப்பு, அவமானம் என்கின்ற புனைவுகளையும், அதன் மீதான வெறுப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

பாலுறவு தவிர்த்தால் யோனியை ஒரு வேண்டத்தகாத ஒன்றாகவே ஆணாதிக்க சூழல் கற்பிதம் கொண்டிருக்கிறது. இன்றுள்ள தூஷண வார்த்தைகளைப் பார்த்தால் இதன் விளைவினை விளங்கிக் கொள்ள முடியும். நிலவுகின்ற தூஷண வார்த்தைகள் அனைத்துமே பெண்களின் பாலுறுப்புகளைக் குறித்து கேலி செய்கின்றவையாகவே உள்ளன. இதன் மூலம் வேண்டாதவரை அவமானப்படுத்த முடியும் என்கின்ற ஐதீகம் நிலவுகிறது. ஒருவரைத் துன்புறுத்த முடிவு செய்தால் எதிரிக்கு நெருக்கமான பெண்ணின் (தாய், சகோதரி, மனைவி) பாலுறுப்புகள் மீது கேலி செய்தால், அவமானப்படுத்தினால் கோபம் கொள்ளச் செய்யலாம் என்கின்ற ஐதீகமும் நிலவுகிறது.

அதே வேளை இதே யோனி புனிதம் கெடாமல் இருக்க வேண்டுமென்ற எதிர்பார்ப்புகளும், அவற்றுக்கான விதிகளும் கட்டுப்பாடுகளும் சுமத்தப்பட்டுள்ளன. ஆண் பல பெண்களுடன் கொள்ளும் பாலுறவுத் தொடர்புகள், ஆண்மையின் சிறப்பாகவும் பெண் தனது கணவனைத் தவிர்ந்த எவருடனும் வைத்துக் கொள்கின்ற பாலுறவுத் தொடர்புகளினால் அவளது "கன்னித்தன்மை" புனிதம் கெட்டதாகவும், கற்பிழக்கப்பட்டதாகவும், நடத்தை கெட்டதாகவும், ஒழுக்க மீறலாகவும் புனையுமளவுக்கு கருத்தியல்கள் கட்டமைக்கப்பட்டுள்ளன.

இன்றும் பாலுறவானது விஞ்ஞான பூர்வமான பரஸ்பர புரிதலுடனான கூட்டுச் செயற்பாடாக இல்லை. பாலுறவின் போது பெண்ணானவள் வெறும் போகப் பொருள் மாத்திரமே ஆண் விரும்பிய போது "சகலவற்றையும்" சகித்துக் கொண்டு இசைந்து கொடுக்கும் இயந்திரம் மாத்திரமே.

எனவே இந்த யோனி மையவாதம் தான் யோனியை மையமாகக் கொண்ட பாலுறவுக்கு அப்பால் எல்லாமே வக்கிரம் என்ற புனைவையும் ஏற்படுத்தியது. எதிர்பாலுறவுக்கூடாகத்தான் (hetro sexual) பாலியல் இன்பம் கிட்டும் என்கின்ற புனைவுகளும் இதன் வெளிப்பாடே. எனவே தான் பின்னர் புட்ட உறவு, வாய் உறவு மற்றும் ஒரு பாலுறவு வரை எல்லாமே அபத்தமானதாகவும், வக்கிரம் கொண்டதாகவும், இயற்கைக்கு முரணானதாகவும், சட்ட விரோதமானதாகவும் பிரச்சாரம் செய்யப்பட்டன. இது ஆணின் பாலாதிக்கத்துக்கு அவசியமான ஒன்றாக இருக்கிறது.

மேலும் நிலவுகின்ற சமூக அமைப்பைப் பொறுத்தளவில் தனது சொந்த பாலுறுப்பு தவிர்த்து ஏனையோரின் பாலுறுப்புக்களை அருவருப்பாக பார்க்கின்ற உளவியல் ஆண்களிடம் இருப்பதாக சமூகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர். இதற்கு எதிர்மாறாக, பெண்கள் இருக்க கற்பிக்கப்பட்டுள்ளனர். கட்டாயப்படுத்தப்பட்டுள்ளனர்.

குறிப்பாக குழந்தைகளுக்கு குண்டி கழுவுவது முதல் கொண்டு ஏனையோரின் உள்ளாடைகளை கழுவுவது மற்றும் குழந்தைகள், பிள்ளைகளின்-ஏன் வீட்டிலுள்ள அனைவரதும் பாலுறுப்புகள் உள்ளிட்ட சுகாதார மருத்துவ விடயங்களில் அக்கறை கொள்வதும், ஏன், சொந்த பாலுறுப்பு மீதான சுகாதார மற்றும் மறு உற்பத்தி குறித்தும் சகல வழிகளிலும் பெண்ணே, பொதுவாக எந்தவித அருவருப்புக்குமுள்ளாகாமல் சகிப்புடன் பாலுறுப்பு நலன்களில் ஈடுபாடு கொள்ள கற்பிக்கப்பட்டுள்ளாள். இப்படியான பொறுப்புகளிலிருந்து விலகி வரும், ஆணாதிக்கத்திடம் இப்படிப்பட்ட அருவருப்புகள், வெறுப்புணர்வுகள் இருப்பது குறித்து பின்னென்ன ஆச்சரியப்பட இருக்கிறது.

எனவே தான் இந்த கற்பு, கன்னித்தன்மை, போன்ற மரபான ஐதீகங்கள் இன்று பாலியல் வல்லுறவை விளங்கிக் கொள்ள முடியாத அளவுக்கு கொண்டு சென்று விடுகிறது. சமூகத்தில் உள்ள பாலொடுக்குமுறைகளை இனங்காணாமல் செய்து விடுகிறது. குடும்பத்தில் கணவனால் பாலியல் வன்முறைகள் மேற்கொள்ளப்படுகின்ற வேளைகளில் அது அவனின் உரிமையாக கொள்ளப்படுகிறது. பெண்கள் அதனை சகிக்க வேண்டுமென் எதிர்பார்க்கப்படுகிறது. இருக்கின்ற ஆணாதிக்க கட்டமைப்புடன் சமரசம் செய்து கொள்ளச் செய்துள்ளது. இந்த கட்டமைப்பின் மீதான மீறல் மேற்கொள்ளப்படுமாயிருந்தால், மீறியவளை நடத்தை கெட்டவளாக ஆக்கிவிட்டுள்ளது.

பாலியல் குறித்த இந்தப் புனைவுகளைத் தகர்ப்பதே பெண் , விடுதலையை சாத்தியமாக்கும்.

இன்றைய பெண்கள் மீதான வன்முறைகளில் பாலியல் வன்முறையானது அதிகரித்து வருவதானது அதிகாரமற்ற பாலாரின் மீதான ஆண்களின் கையாலாகாத்தனத்தையே குறிக்கிறது. அதிகாரத்துவத்தின் ஒடுக்குமுறைக்குள்ளாவதால் அதிகாரம் முதலில் அவசியம். இன்று இந்த அதிகாரத்துக்கான ஒரு பயணத்தையே மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. ஒரு புரட்சிகர சமூக மாற்றத்துக்கான பயணத்தில் தங்களின் விடுதலைக்கான பாத்திரத்தை ஆற்றுவது, விடுதலையில் அக்கறையுள்ள அனைத்து பெண்களினதும் கடமை.

**-கோமதி**

## லிங்க வழிபாடு!

பிரம்மா நடத்தும் வேள்விச் சாலைக்கு சிவன் சென்றார். வேள்வி மண்டபத்தில் சிவபெருமான் நிர்வாணமாக, காம விகாரத்தோடு குடிபோதையுடன் வார்த்தையில் எழுத முடியாதபடி அவ்வளவு ஆபாசமாக நடந்து கொண்டார்.

சிவனின் காம நிலையைக் கண்டு ரிஷி பத்தினிகள் அதிர்ச்சியும், ஆச்சரியமும், அச்சமும் கொண்டனர். சிலர் வீடு நோக்கி ஓட்டம் பிடித்தனர். சிலர் காம மோகத்தில் நிர்வாணமாக இருந்த சிவனைத் தழுவி இன்பம் பருகினர்.

இதனைக் கண்ட ரிஷிகள் மனம் சகியாது மயங்கி வீழ்ந்தனர். உணர்வு வந்தபின் விழித்தெழுந்து சிவனை சபித்தனர். ரிஷிகளின் சாபத்தால் சிவனின் ஆண் அவயம் அறுந்து விழுந்தது. அதன் விளைவாக வானம், பூமி அதிர்ச்சி ஏற்பட்டது. உலகம் கிடுகிடுத்தது.

இதனால் ரிஷிகள் சிவனிடம் ஓடினர். திரும்ப சாந்தி நிலவ வேண்டினர். பின்னர் பார்வதி தேவியின் யோனியில் அமர்ந்து அமைதி பெற்றதாம் அந்த அவயம். அது சிவலிங்கமாக தோன்றி விட்டது.

ஆதீனங்களும் மடாதிபதிபதிகளும் நடத்தி வரும் சிவாலயங்களில் இது வரை தொழுது வழிபடும் சிவலிங்கம் தோன்றிய வரலாற்றுக் கதை இதுவே. இந்து கலாசாரம் ஆலயங்கள், விழாக்கள் மூலம் பரப்பிவரும் ஒன்றாகும். இதனை பதம் புராணம், ஸ்ரஸ்தி காண்டம் அத்தியாயம் 17 விவரிக்கிறது.

# பசறை வேலை நிறுத்தம்: முறியடிக்க சதி ?

பதுளை மாவட்டத்தின் பசறை தோட்டத்தைச் சேர்ந்த சகல பிரிவு தொழிலாளர்களும் கடந்த 46 நாட்களாக வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர் அப்புகஸ்தன பயிர்செய்கைக் கம்பனி நிர்வாகத்தின் கீழ் உள்ள இத் தோட்டத்தின் பிரதம முகாமையாளரான குணதிலக என்பவரை நீக்கக் கோரியும் தாம் அன்றாடம் எதிர்நோக்கும் நிர்வாக ரீதியான கெடுபிடிகளை தளர்த்தக் கோரியும் 17 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்துப் போராடி வந்த தோட்டத் தொழிலாளர்களின் கோரிக்கைகளை அரசாங்கமும் கம்பனி நிர்வாகமும் கடந்த 46 நாட்களாக மறுத்து வருகின்றன.

தொழில் ஆணையாளர் தொழில் அமைச்சர் ஆகியோர் தலைமையில் நடந்த பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படாத நிலையில் தொழிலாளரின் கோரிக்கைகளை ஏற்க நிர்வாகம் திட்டவட்டமாக மீண்டும் மீண்டும் மறுத்துவரும் நிலையில் கடந்தவாரம் பதுளை மாவட்டத்தின் 25,000 தொழிலாளர்கள் அடையாள வேலை நிறுத்தம் செய்து கம்பனி நிர்வாகத்தின் எதேச்சதிகாரப் போக்கைக் கண்டித்த போதும், அப்புகஸ்தன பயிர்செய்கை கம்பனியின் நிர்வாகத்தில் உள்ள தோட்டங்கள் அனைத்தும் - விசேடமாக இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள 12 தோட்டங்கள் உட்பட- வேலை நிறுத்தத்தில் குதித்தனர். ஆனால் தொழிலாளர்களைப் பட்டினி போட்டுப் பயமுறுத்தி அடிபணிய வைக்கவே முயற்சிக்கப்பட்டு வருகின்றது.

வேலை நிறுத்தம் ஆரம்பமாகிய சில நாட்களில் பசறை தோட்டத் துரை ஒருவர் இரத்தினபுரி வெவல் வத்தையில் நடந்தது போன்றே உங்களுக்கும் நடக்கும் என மிரட்டியுள்ளார். இம்மிரட்டல் குறித்து பசறை பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்ட போதும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என இ.தொ.கா. உப தலைவரும் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான வி. சென்னன் கூறுகிறார்.

இது இவ்வாறிருக்க 25.10.98 ஞாயிறு இரவு 10 மணிக்கு தோட்ட முகாமையாளரின் ஜீப்வண்டி,பசறை பொலிஸ் ஜீப் வண்டி என்பன தீயிட்டு எரிக்கப்பட்டு விட்டன. இச்சம்பவத்தில் 16 குண்டுகள் வெடிக்க வைக்கப்பட்டதாகவும், 6 பேர் கொண்டதொரு குழுவினரே இச்செயலைப் புரிந்ததாகவும் தொழிலாளர்கள் கூறுகின்றனர்.

ஞாயிறு இரவு 8மணிக்கு பதுளை பொலிசுக்கும், பொலிஸ் அத்தியட்சகருக்கும் தோட்ட பங்களா தாக்கப்பட்டு விட்டதாகத் தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இரவு 9மணிக்கு பொலிஸ் ஜீப் ஒன்று தோட்ட துரையின் பங்களாப் பக்கம் சென்றதாகவும், சீருடை அணிந்த இருவருடன் மேலும் மூவர் தோட்டத் தொழிலாளரை வேலைக்குச் செல்லுமாறு மிரட்டிய போது தொழிலாளர்கள் இவர்களைப் பிடித்து விசாரித்ததில் இருவர் பொலிசார் என்பது நிரூபணமானது. எஞ்சியோர் பெற்றோல் கலங்களுடன் தப்பியோடி விட்டனர்.

இரவு பத்து மணிக்கு துரையின் பங்களா எரிக்கப்பட்டதோடு ஜீப் வண்டியும் எரிக்கப்பட்டுள்ளது. பொலிஸ் வண்டியும் எரிக்கப்பட்டுள்ளது. தொழிலாளர்கள் தாம் பிடித்து வைத்திருந்த இரண்டு பொலிஸ்காரரையும் பொலிஸ் அத்தியட்சகரிடம் ஒப்படைத்துள்ளதாகவும், தோட்டத்தைச் சூழவுள்ள சிங்கள மக்களை பாதுகாத்ததோடு இப்போராட்டத்தை இனவாதப் போராட்டமாக மாற்ற எடுக்க முயற்சியும் தொழிலாளர்களால் முறியடிக்கப்பட்டிருக்கிறது.

ஆளும் பொ.ஐ.மு.அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் பியகம வர்த்தக வலைய தொழிலாளர் போராட்டத்தில் துப்பாக்கிச் சூடு நடத்தியதோடு, இரணவில வொய்ஸ் ஒவ் அமெரிக்காவுக்கு எதிராக திரண்ட மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது, மின்சார சபை ஊழியர்களை இரவோடு இரவாக கைது செய்தது, போக்குவரத்துச் சபை ஊழியர்களை வேலைநீக்கம் செய்தது.

இதன் தொடர்ச்சியாக தோட்டத் தொழிலாளர்கள் நடத்தும் வேலை நிறுத்தப் போராட்டங்களை குழப்பவும் அவற்றை வன்முறை வடிவத்திற்கு மாற்றவும் பொலிசாரும்,



தோட்டநிருவாகங்களும் நீண்ட நாட்களாகவே முயன்று வந்துள்ளன. பூண்டுலோயா மாவணவர் போராட்டம் மீது பொலிஸ் தடியடி பிரயோகித்தது, வெஞ்சர் தென்மதுரை தோட்டத் தொழிலாளர்கள் சத்தியாக்கிரகம் செய்த போது தடியடி நடத்தியது, சம்பள உயர்வுக்காக இவ்வாண்டு பெப்ரவரி மாதம் நடைபெற்ற மாபெரும் வேலைநிறுத்தப் போராட்டத்தில் பல இடங்களில் ஊர்வலங்கள் தடுக்கப்பட்டன. ஹட்டனில் ஆறுமுகம் தொண்டமான் தலைமையிலான ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் பொலிசார் கண்ணீர்ப்புகை பிரயோகித்ததோடு தடியடிப்பிரயோகமும் செய்யதனர்.

மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் கரங்களில் இருக்கும் ஒரே ஒரு சக்தி மிக்க ஆயுதமான வேலை நிறுத்தப் போராட்டங்களை அலட்சியப்படுத்தியும் தொழிற்சங்க இயக்கங்களை நிர்மூலமாக்கியும் தொழிலாளர்களை சரணடையச் செய்யும் அரச பயங்கரவாதமாகவே இவற்றைக் காணக் கூடியதாகவுள்ளது.

கம்பனி நிருவாகங்கள் தாம் பொறுப்பேற்ற தோட்டங்களில் மிகக் கொடுமையான வேலைச் சூழலை உருவாக்கியுள்ளன. மஸ்கெலிய, மடகும்புற, லெட்சுமித் தோட்டம், வெஞ்சர் தொன்மதுரை, பசறை கலன் தோட்டங்களில் நடந்த தொழிலாளர் போராட்டங்கள் கம்பனி நிருவாகங்களால் அலட்சியப்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன.

கடிவாளத்தைக் கம்பனிகளிடம் கையளித்து விட்டு தோட்டத்துறை தொழிற் சங்கங்கள் யாவும் கையைப் பிசைந்து கொண்டு நிற்கின்றன.

பசறைக் குறூப் தோட்டத்துரை குணதிலகா எந்த விடயத்திலும் தொழிலாளர்களுக்கு எதிராக உடனே பொலிசில் முறைப்பாடு செய்வதோடு, நீதிபதியான அவரது மனைவியின் அதிகாரத்தை துஸ்பிரயோகம் செய்துள்ளதாகவும் தொழிலாளரால் குற்றம் சாட்டப்படுகிறது.

ஒன்றரை மாதமாக நடைபெற்று வரும் தோட்டத் தொழிலாளர்களின் போராட்டத்தில் தொழிற்சங்கங்கள் தீர்க்கமான பங்கை வகிக்கவில்லை எனத் தெரிகிறது. அவர்கள் தாம் சார்ந்துள்ள தொழிலாளர்களுக்காகவன்றி தோட்ட நிர்வாகங்களிடம் மண்டியிட்டு மன்றாடிக் கொண்டிருக்கின்றன.

அரசாங்கத்தை ஆதரித்தும், அதன் பயங்கரவாதத் தடைச்சட்டம், அவசரகாலச் சட்டம் என்பவற்றை ஆதரித்தும் வரும் மலைய மக்கள் முன்னணி, இ.தொ.கா. என்பன தம் மக்களுக்கு எதிரான கம்பனி நிர்வாகங்களின் அட்டூழியங்களையும், பொலிசாரின் அத்துமீறல்களையும் கட்டுப்படுத்த முடியாதவர்களாக இருக்கின்றனர்.

அப்புகஸ்தன பயிர்ச்செய்கை கம்பனி நிர்வாகம் தொழிலாளர்களுக்கு இலாபப் பங்கு வழங்கவில்லை. மிக மோசமாக தொழிலாளர்களை கசக்கிப்பிழிந்து வருகின்றதென மீண்டும் மீண்டும் தொழிலாளர்கள் குற்றம் சாட்டி வந்த போதும் தொழிற்சங்கங்கள் உருப்படியாக ஏதும் செய்யவில்லை.

இப்போது நடைபெற்றுள்ள பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டினால், இ.தொ.கா. தோட்டக்கமிட்டித் தலைவர் அந்தோனிசாமி(45) என்பவர் படுகாயமடைந்துள்ளார்.

கடந்த செப்டம்பர் மாதம் 9ம் திகதி இரத்தினபுரி மாவட்டத்தில் வேவல்வத்தையில் கிரனைட் குண்டுடன் தொழிலாளர்களால், பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்ட பெரும்பான்மை இனத்தவர் சாதாரண பிணையில் விடப்பட்டுள்ளார். இச்சம்பவத்தின் சூத்திரதாரி ஆளும் கட்சி அரசியல்வாதி ஒருவர் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ள போதும் அதுபற்றி எவ்வித விசாரணையும் நடைபெறவில்லை. வேவல்வத்தைச் சம்பவம் தொடர்பான 425 முறைப்பாடுகள் உள்ளன. ஆனால் ஒரு குண்டர் கூட கைதாகவில்லை. இப்போது பசறையில் தொழிலாளர்களால் பிடிக்கப்பட்ட பொலிசார் மீதும் அவர்களையும் குண்டர்களையும் தூண்டிவிட்ட அப்புகஸ்தன கம்பனி நிர்வாகத்தின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட போகிறது?

வன்முறைத் தாக்குதல் நடத்தப் போவதாக பயமுறுத்திய தோட்ட அதிகாரிக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது?

தோட்ட துரையின் பங்களாவும் வாகனமும் எரிக்கப்பட்ட இடத்திற்குச் சென்ற மக்கள் பிரதிநிதிகளும், ஆளும் கட்சியை ஆதரித்து வரும் மலைய பிரதிநிதியுமான, சென்னன் , சிவம் லோகநாதன், ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணி அமைப்பாளர் ஜயசுந்தர ஆகியோரை தோட்டத்தில் பிரவேசிக்கவிடாமல் பொலிசார் தடுத்தனர். குதம்பிட்டிய நகரத்தோடு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். இச் செயல் மூலம் வன்முறைக்குக் காரணமான சான்றாதாரங்களை அழிக்க அல்லது தொழிலாளர்கள் மீது பழிபோடும் விதமாக சான்றுகளை உருவாக்க பொலிசார் முயல்வதாக சந்தேகிக்கப்படுவதாக சிவம் லோகநாதன் தெரிவித்தார்.

இந்தப் பாரதுரமான சம்பவத்தின் பின்னராவது அரசாங்கமும், தோட்டத் தொழிற்சங்கங்களும் கம்பனி நிர்வாகத்தின் கொட்டத்தை அடக்க முன்வருவார்களா அல்லது மீண்டும் மீண்டும் இவ்விதமான வன்முறை தாக்குதல்களுக்கு தொழிலாளரைப் பகடைக்காய்களாய் கையாளப் போகிறார்களா என்பதை தீர்மானிக்க வேண்டிய தருணம் இது.

இவ்வளவும் நடைபெற்ற பின்னர் தோட்ட முகாமையாளரை வைத்திருக்க அனுமதிக்க முடியாது என கூறும் வி.சென்னனிடம் இந்த அத்துமீறல்காரரை தடுத்து நிறுத்த தொழிற்சங்கங்கள் என்ன செய்யப் போகின்றன என வினவிய போது பொலிசார் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள் என எதிர்பார்ப்பதாகவும் தொழிற்சங்கங்கள் எவ்வித நடவடிக்கையும் எடுப்பது பற்றி சிந்திக்கவில்லை எனவும் குறிப்பிட்டார்.

இச்சம்பவங்களின் பின்னணியில் ஐ.தே.க.வினர் தொழிற்படுவதாக அரசாங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது. இதனை ஐ.தே.க. தலைமை மறுத்துள்ளது.

இதற்கிடையில் பசறை விவகாரம் தொடர்பாக . 21 ஆண்-பெண் தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தை திட்டமிட்டு உருவாக்கிய அப்புகஸ்தனை பயிர் செய்கை கம்பனியுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தப் போவதாக தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன.

எட்டி உதைப்பவர்களின் கால்களை நக்கிக் கொண்டிருப்பதை விட உருப்படியாக, திட்டவட்டமான எதிர் நடவடிக்கையில் ஈடுபடவேண்டிய நேரம் இது. மலையக தொழிலாளர்கள் தயாராக இருக்கிறார்கள். தலைவர்கள் என்ன செய்யப் போகிறார்கள்?

**— கௌசீகன்**

---

## கா.கு.நீரசீ...


உணர்த்துகின்றது. இவ் இரு சம்பவங்களில் முகத்துவார சம்பவத்தில் ஈடுபட்ட நால்வரில் ஆகக் கூடிய வயது 24 ஆகும். தோமஸ் கல்லூரி வளவில் இடம்பெற்ற படுகொலையில் ஈடுபட்டவர்கள் 20 வயதிற்கும் குறைந்தவர்களே. இதேபோல் அண்மையில் அனுராதபுர பாட-சாலை ஒன்றில் ஒரு மாணவன் தீயிடப்பட்டது. எம்பிலிப்-பிட்டியவில் மோசமான பகிடி-வதையில் ஈடுபட்டது என்பனவும் எமக்கு இதனையே உணர்த்து-கின்றன.

வன்முறைச் சூழலிற்கு பழக்க-மாதல் பெரும் குற்றங்களைச் செய்யத் தூண்டும் விளைவையே ஏற்படுத்தும். இத்தகைய வெறியூட்டப்பட்ட சமூகமானது ஒருவகை மனநிலை பாதிக்கப்-பட்ட சமூகத்தை ஒத்தே காணப்படும். இதனை யுத்தம் செய்பவர்களும், யுத்தத்தைத் தொடர்ந்து நடாத்த வேண்டும் என ஊக்குவிக்கும் யுத்தவாத பிக்குகளும் ஒரு போதுமே கருத்தில் எடுப்பதில்லை. அதேபோல் இங்குள்ள பொது ஸ்தாபனங்களும், நீதித்-துறைகளும், அது சம்பந்த-மானவர்களும் கூட கருத்தில் கொள்வது இல்லை. அதை-விடுத்து தூக்குத் தண்டனையை அமுல்படுத்துமாறு கூறுவதோ, அல்லது தண்டனைகளைத் தீவிரமாக்குவதாகக் கூறுவதோ பிரச்சினைகளைத் தீர்க்கப் போவது இல்லை. பாலியல் வல்லுறவும், படுகொலைகளும் ஒரு பிரச்சி-னையின் விளைவுகளாகவே காணப்படுகின்றன. அவை இடம் பெறுவதற்கான புறச்சூழலை இல்லாதொழிப்பதே உண்மை-யான தீர்வாக அமையும். அச்-சூழலை உருவாக்க வேண்டு-மெனில், முதலில் இவற்றிற்கு மூலகாரணமான - வன்முறை வெறியைத் தூண்டும் - யுத்தத்தை நிறுத்துவதே இலங்கையைப் பொறுத்த வரை சரியான வழியாக இருக்கும். ஆனால், அவ்-வழியைப் பற்றி கதைப்பதற்குத் தான் இங்கு எவரும் இல்லை.

---

**எழுச்சிப் பேரணி.**

அகதியாக்கப்பட்டு
8 ஆண்டுகள்
நினைவு நாளையொட்டி
சமாதானத்திற்கு
அறைகூவல் விடுக்கும் மாபெரும்
எழுச்சிப் பேரணி
31-10-98 அன்று
புத்தளம் ஆலங்குடாவில்
பிற்பகல் 1 மணிக்கு தொடர்ந்து
கலை கலாசார நிகழ்வும்
பொதுக்கூட்டமும்
நுரைச்சோலை
முஸ்லிம் மகா வித்தியால
மைதானத்தில் மாலை 5 மணிக்கு
இடம்பெறும்.
அனைவரையும் அன்புடன்
அழைக்கிறோம்




கிருஷாந்தீ...!

அவனுக்கு அவள் மகள். மனசுக்கு உவப்பான உயிர்த் தோழி.

அவள் சிவபுரியில். இவன் மஸ்ஜிதுல் கைர் வீதியில்... எழுத்துவடம் இவனையும் அவளையும் பிணைத்து.. இறுக்கிப் போட்டது. இன்று மிதிவெடியில் கால்கள் பிய்த்து காணாமல் போன கன்றுக்குட்டிபோல இரத்தம் சொட்டச் சொட்ட..

அழைத்துப் போக வந்தவனுடன் காதும் காதும் வைத்தது போல, இரு நொடியில் போய்விட்டாள்!

யுகயுகமாய் அவனது நெஞ்சக் கூட்டிற்குள் வாழ்ந்துவந்தவளுக்கு இன்று வந்த அவசரம். 'அவளில்லாத சிவபுரி?' அவனால் நினைத்துப் பார்க்கவே பயமாகவிருந்தது.

'நீங்களும் உங்கள் புத்தகங்களும் அடுக்கி வைத்து அழகு பாருங்கள்!''

காணும் தோறும் கதைத்துக் கொட்டும் தோறும் அவள் முகத்திலடித்தாற் போல சொல்லும் அழகு...

இன்று கொள்ளை கொண்டு போனதோ?

பொறியொன்று அவன் புடரியில் மின் வெட்டுகிறது. கண்களில் அவள் மிதந்து வருகிறாள்.

நீல நிற லேடிஸ் பைக். வெள்ளைக் கவுண். கவுணோடு தொட்டுக் கொஞ்சும் காலுறை. தலையிலும் ஒரு வெள்ளைப் புறா சிறகசைக்கும். கண்களில் கனவுகள் ஆயிரம் கூடுகள் கட்டி... எல்லாம் ஒரு தருணத்தில் துவம்சம்.

இத்தனை உறவுகளையும் உதறிவிட்டு - ஒரு கண நேர உறவில் கைகோர்த்து விட்டாள்.

பெண்ணென்றாலே இப்படித் தானோ?

'சோலைக் கிளியின்' 'எட்டாவது நரகம்' எத்தனை தடவைகள் தான் பதறிப்பதறிக் கேட்டிருப்பாள்.

அதையும் மறந்து போனாளே? அவனால் நம்பவே முடியவில்லை.

''வாப்பாவிடம் இப்பெ சொல்லியிருக்கப்படாது'' மனைவி தான் இளையவளிடம் மெதுவாகச் சொல்கிறாள். அவளும் ஏதோ 'முணுமுணுப்பு'.

''இங்கெ உனக்கு விசனம் யார் சொன்னது?''

''நம்மெடெ நல்ல தம்பிதான்!''

''வேறென்ன சொன்ன?''

''என்னமெல்லாம் சொன்னான். எனக்கி காலும் ஓடல்ல. கையும் ஓடல்ல... அவனும் 'ரிஷீவர் வெச்சிட்டான்.''

''இந்த வயசில அவள் இப்படிப் போனாளே. நமக்கே இப்பிடிண்டா பெத்த மனம் என்ன பாடுபடும்?'' மனைவி கலுங்குகிறாள்.

சாய்வு நாற்காலிக்குள் அவன். திடீரெனக் 'கரண்ட்' கட்டாகிறது. நகரம் மூச்சிரைக்க... மூச்சிரைக்க... கைப்பற்றப்பட்ட முகாம் போல. சிம்னி விளக்கு இருளோடு போராடுகிறது.... இவன் துயரத்தைப்போல.... நேரம் பத்து மணியையும் தாண்டிவிட்டது.

''இங்கெ உங்களைத் தான் ஏதாவது சாப்பிடுங்க. வெறும் வயிற்றில குளிசையைப் போடாதீங்க.'' மனைவி கெஞ்சுகிறாள்.

''நீ! நேரத்தோட தூங்கு. நான் பிறகு சாப்பிடுகிறேன்'' வார்த்தைகள் பிடிப்பில்லாமல்...

எல்லோரும் தூங்கிப்போனார்கள். இவன் ஆற்றங்கரைப் பக்கமாகப் போகிறான்.

'ஹலோ! ஹலோ!!'

அவளின் குரல்தான். நாலு எட்டில் அவன் கால்கள் புதையப் புதைய்ய... ஆற்றங்கரையில். மறுகரையில் இறால் பண்ணைகளிலிருந்து வானொலியில்...

ஒற்றை வயலினில் ஊற்றெடுக்கும் முகாரி... இவன் கண்களில் பாற்கடல் அசைகிறது.

குளிரில் நடுங்கி ஆற்றுக்குள் கிடந்து 'துடிதுடி'த்தது நிலவு.

இந்தச் சாமத்தில் அவளின் 'ஹலோ'வும் இந்த இசையும் இணைந்து.. அவன் ஈரல் குலையை கசக்கிப் பிழிந்து..

இவன் 'பொத்திப் பொத்தி'ப் பிடித்துப் பிடித்து நினைவுக் கூட்டிற்குள் அடைகாத்த 'ஹலோ' நேற்றுக் கொத்திக் கொண்டு கூட்டையும் உடைத்து...

இதற்குள் என்ன அவசரம்? ஏனிந்தச் சிறகசைப்பு.

மடிப்பு கலையும் ஒரு நினைவு.

திரிகோணமலை பஸ் வந்து நிற்கிறது. இவன் துள்ளிப் பாய்கிறான்.

'அடெ பாவி! நேற்றிரவு சொன்னாளே! 'நாளை ஊருக்குப் போகிறேன். வரும் போது உங்களின் ஜே... ஜே.. சில குறிப்புகளையும் 'ஆனந்தாயி'யையும் கொண்டு வருகிறேன். ஹலோ! உங்களைத் தான் கடையிலிருப்பீங்களா?'

நினைவுச் சரம் முறுக்கேறி - இதழ்கள் அறுத்து இரத்தம் சொட்டுகிறது.

ஜே. ஜே. யார் சேர்? ஜெயகாந்தனா? சு.ரா. தானா? நம்மெடெ எழுத்தாளர்களுக்கு இப்படிக் கதை சொல்லத் தெரியாதா?''

''அடிபைத்தியம் மெல்லப் பேசு. இப்பவெல்லாம் வீட்டிற்கொரு கவிஞனும் வீதிக்கொரு பத்திரிகையும்... உன்னைக் கடத்திக் கொண்டு போய்விடுவான்கள்.''

''கல... கல...'' அவள் குலுங்குகிறாள். தொலைபேசிக்குள் கொலுசு கொட்டுகிறது.

''மெய்தான்! சிவகாமியின் 'ஆனந்தாயி' அதில வருகிற பெரியண்ணன். நீங்களெல்லாம் அவனைப் போலான்.'' அவள்.

''யாரடி அம்மா இல்லையென்றது. இந்த ஊரில் ஒரு மகாராணி இருந்தாள். அவள் ஓர் சீமாட்டி. நம்மட சிவராமிட்ட கேட்டுப்பார். அழகாச் சொல்லுவான். முதல் மனிதன் ஆதமு (அலை)ம் அவரின் துணை ஹவ்வாவும் அன்று செய்த பாவம். காலாதிகாலமாக நமக்கும் பங்கிடப்படுகிறது. அவ்வளவு தான்'' இவன்.

''என்னரிந்தாலும் சிவகாமி அலட்டாமல் வாசிக்கிறா. ஒரு பிசிறில்லாத ஓட்டம்.''

''அடிரா சக்கண்டானாம். இஞ்செ மெல்லப் பேசு. பத்மா காதில் விழப் போகிறது. ஏன்டி? உங்களுக்கெல்லாம் இந்தப் பொல்லாப்பு?''

''நீங்கெ நக்கல் பண்றீங்கெ?'' அவள்.

''இஞ்செ, சத்தியமாச் சொல்றன். இன்றைய நாட்களில் ஸ்ரீலங்கா தேசத்தின் சிறப்புப் பெண் எழுத்தாளர் அவதான்!''

இவன் அடித்துச் சொல்கிறான்.

கொலுசு விழுந்து பூச்சிதறல்.

இன்னும் ஒரு தருணம். கோதை உடைத்துக் கொண்டு விஸ்வரூபம்!

''உங்கெட லா.ச.ரா.. எனக்கு ஒண்ணுமே பிடிபடல்ல.. ஏதோ வித்தைபோல...'' அவள்.

''வித்தை என்று விளங்கிக் கொண்டால் போதும் கலை மிகப் பெரிய போட்டி சிருஷ்டி. வித்தையும், விவேகமும் புணரும் போதுதான் உன்னத இலக்கியம் உருவாகும். தெரியுமா?''

''போதும் உங்கெட லெக்சர் நிப்பாட்டுங்கெ!'' அவள்.

''போனவாரம் மஞ்சரியில உங்கெட லா.ச.ரா. பற்றி யோகம் வெளுத்து வாங்கியிருந்தார்.''

அவளின் புருவங்கள் நெளிந்து நெற்றியில் கோலம் போடுகிறது.

''ஓகோ..! அவரா? வாகரையில.. அட்டாளைச்சேனையில.. பூநகரியில... காடுகள் கொள்ளைபோன சங்கதி தெரியுமா? எம்மட்டு முற்போக்கு அவரிடம் குடிகொண்டிருந்தது தெரியுமா?'' அவள் விழுந்து விழுந்து சிரித்தாள்.

''என்னெ சொல்றீங்க'' கிருஷாந்தீ.

''அவரத்தான் சொல்றன்!'' அவன்.

''நீங்க கொஞ்சப் பேருதான். தமிழ்வாசகர்களோ லட்சக்கணக்கில்.. ஆனைப்பசிக்கு சோளப் பொரிபோல உங்கெட எழுத்துக்கள்..... அவள் சொல்லிக்கொண்டு போகும் போது, தாளலயம் தப்பாத சோடனையில் இவன் -

''ஓம்! ஓம்!! பட்டுக்கோட்டைப் பிரபாகர், ராஜேஸ்குமார்... எண்ட மூரி... சாண்டில்யன் பேரர்கள், பட்டாளத்திற்குப் பிட்டு அவிக்கிறார்கள். மூச்சுமுட்டப் பிடியுங்கள்.''

இன்னுமொரு பொறி.

தொலைபேசி அழைக்கிறது.

''ஹலோ! ஆ... பேசு...!''

'பாற்கடல்' படித்தேன். அவள்.

''எப்படி? ஐம்பது வருஷங்களுக்கு முதல் மனிசன் எழுதிப்போட்டாரு பார்த்தியா?''

''நல்லாயிருந்தது.... மூணுதரம் படிச்சன்''

''அதிலே 'மண்' என்றொரு கதை. படிச்சுப்பாரு. லா.ச.ரா. இப்படிச் சொல்கிறார். பாரு-

என்ன இருந்தாலும் ஒரு விசயம் ஒப்புக்கணுங்க. படிச்சவன் படிக்காதவன் எல்லோரும் புளைச்சாவணும். பசி எல்லோருக்கும் ஒண்ணுதான். இந்த உயிர் இருக்கிற வரைக்கும் இந்த ஒரு சாண் வவுத்த வளர்த்து எப்படி யாவது புளைக்கணும் தானெ. மனிதன் நாலுபேரோட கூடறான், பிரியிறான், சண்டை போடுறான், சமாதானமாவறன்! இடையிடையே வாந்திபேதி ஒண்ணுமில்லாட்டி வயசு அவன வாரியடிச்சிட்டுப் போவுது. அப்பவும் இந்தெ உசிரிலெ இருக்கிற ஆசையை என்னாண்று சொல்றது. எல்லாமே அதிலதான் அடங்கியிருக்குதிங்கெ. என்னத்த சொல்ல வந்தேன்னா இந்த நம்பிக்கைன்னு ஒண்ணு யிருக்குதே அதில அவ்வளவு இருக்குது. உடம்பிலே இருக்குதே அது உசிரில்லே, நம்பிக்கை தான் உசிர்' என்கிறார்.

கிருஷாந்தீ! இவரைப் போய் நம்மட முற்போக்காளர்கள் கோயில் மாடு என்றும் பெண்கள்ற கொண்டையப் பத்தி எழுதுகிற வரிங்கிறாங்கெ. அவரே எனக்கிட்டெ 'மனிதாபிமானம்னா ஏதோ வானத்திலேயிரிந்து குதிச்சிவந்து ஒப்பாரி வைச்சாத்தான்னா'ண்ணார். எவ்வளவு பெரிய உண்மை. எப்படிச் சொல்லிவிட்டார் பார்த்தியா?'

தொலைபேசி அறுந்து -ங்ய்... ஊதுகிறது. எவ்வளவு முயன்றும் பலனில்லை. இவன் ரிஷீவரைத் தூக்கிச் சாத்துகிறான். மனசு மட்டும் அவளைத் தொட்டு நினைக்க நினைக்க அலுக்கவில்லை - திரௌபதியின் துகில் போல கிருஷாந்தீ...!

'இலக்கியமும் ஒரு பாற்கடல் தான். அதிலிருந்து தான் புதுமைப்பித்தனும், ஜானகிராமனும், சு.ரா.வும் வெளிவந்தார்கள். அதிலிருந்துதான் கல்கியும் - சாண்டில்யனும்.. ஏன் அவனுடைய கிருஷாந்தியும் கூட- ஆலஹால விசமும் உடனே அதற்கு மாற்றான அம்ருதமும்...'

லா.ச.ரா. என்னைப் பார்த்து நகைப்பீர்களா?

அவள் உறவில் இன்னுமொரு பூ.. இதழொன்று கழன்று விழுகிறது.

''நான் இங்கெ மலையில்தான்!''

''அப்பெ. உன்ட பொடியன் பிள்ளையாருக்கு நூற்றியெட்டுத் தேங்காய்கள் உடைத்தானாக்கும்''

அவள் தொலைபேசிக்குள் குலுங்குகிறாள். அந்தச் சிரிப்...பூ...

காம்பிலிருந்து பூவை தளுக்காக மெல்லக் கழற்றி கையிலெடுத்துச் செல்லலாம் போல....

→



## அவனும் ஒரு பாரதி

இன்று மிதிவெடியில் 'கண்ணு'க்குட்டியைக் காவுகொடுத்த பசுபோல - நினைவு இதழ்கள் இரத்தம் சொட்டச் சொட்ட.. உள் மனம் கதறிப் புலம்பியது.

நேற்றுத்தானே தொலை பேசிக்குள் சிரித்துக் குலுங்கினாள்.

அறுபது நாள்கள் ஓடிவிட்டதே. அதற்குள் என்னவெல்லாம் இங்கே அரங்கேறியிருக்கிறது.

சதாம் ஊரில் அமெரிக்க ஏவுகணை!

ஹிந்துஸ்தான் அணுகுண்டு பரிசோதனை. வீரகேசரிக்கு இனி இல்லையென்ற சந்தோசம்.

பாகிஸ்தானின் பதில் அதிரடி.

பிறின்சஸ் காஷ் கப்பல் முல்லைத்தீவில் முற்றுகை. அவர்கள் பாடு கொண்டாட்டம்!

முத்தையா முரளீதரன் பதினாறு விக்கற்றுகளைக் கவ்விக் கொண்டான்.

ஜனாதிபதி க்ளின்டனின் காதல் லீலைகள்! அம்பலமே பினா... பினா...

அவனுடைய அரசியல் அன்பன் சூஅபூபக்கரின் நான்காவது திருமணம்.இதற்குள் இவளும்... சொல்லாமல் கொள்ளாமல்..

இன்னுமொரு தருணம்... கறுப்பூ மலர்கிறது.

''தேவகாந்தன்! கிருஷாந்தி ஆஸ்பத்திரியில் ஐந்து நாட்களாகக் கிடந்தாளாமே. ஏன் டாப்பா சொல்லல்ல...?'' இவன் குமுறுகிறான்.

''அண்ணன்! அவள் சாகப்போகிறவள் போலவா இருந்தாள். ஏதோ வலைப்பந்தாட்டப் போட்டிக்கு வந்தவள் போல. ஆஸ்பத்திரிக் கட்டிலில் அப்படிக் குதூகலித்திருந்தாள்.''

அவன் கண்களுக்குள் பாற்கடல் அசைகிறது. இவனுக்கு 'ஏன் கேட்டோம்' என்றாகிவிட்டது. மனசு புழுப்போல 'துடி'த்தது.

ஏதோ ஒன்று - அவன் நெஞ்சக் கூட்டிற்குள்ளிருந்து அறுந்து புரிப் புரியாகி...

ஒரு புரி சிவபுரியில் கூடு கட்டியது. விட்டு விலகி நிற்பாய் - அந்தச் சிட்டுக்குருவி போல...

பாரதியின் பாடல் வரிகள் வில்வரத்தினத்தின் தொண்டைக் குழியிலிருந்து உருகி வழிகிறது.

அவனின் அந்தராத்மா எங்கோ கண்காணாத திசையில் மோனத்தவம் கிடந்தது.


*1998 09 15*



## துயர முட்டை

அவளை வரவேற்க
வாசலில் பூச்செடி நட்டியிருந்தேன்
அவள் வராத மனம் எப்படியிருக்கும் என்று பார்த்தேன்.
முட்டை வடிவில் முகம்
கோணி
மனம் உடைந்து போயிற்று
நீண்ட பரப்பைப் பிடித்து
துயரம் வளர்ந்து கொண்டே போனது.
என் கம்பு மனதை
வெட்டித் தறித்து கொட்டானாக்க
மனம் அவாவியபோதும்
காலம் கைகொடுக்கவில்லை
பாதை நெடுகிலும் முட்செடி பூத்துச் சிரித்தது
நம்பிக்கை தோற்று
உம்மா மௌத்தான கவலையோடு வீடு திரும்பினேன்.
போனமுறையும் இப்படித்தான்
அவளை வரவேற்க
வாசலில் நான் மணப் பூச் செடி நட்டிருந்ததும்
அவள் வராமல் என்னை ஏமாற்றியதும்.'

லைலா



அத்திவாரங்கூட புரட்டி எறியப் பட்டாகிற்று
நெடிய வாழ்வின் வெளியில்
இடிபாடுகளுக்குள்
அவளும், நானும்
காதலும், தவிப்பும் கொண்டு
கட்டிப் பேணின வீடது.

இனியும்,
கட்டியெழுப்பும் நம்பிக்கை எனக்கில்லை.

என்மனம் தினமும் அழுதது.
அழுகையொலி கல்நெஞ்சங்'களில்
பட்டுத்தெறித்தது.
பட்டுத் தறிக்க, பட்டுத் தெறிக்க
இனிய சங்கீதம் மலர்ந்தது.
சங்கீதத்தில் நான் உருக
என்னை அது சமாதானப் படுத்திற்று.
அச் சங்கீதத்தில் மனமுருகுதலே
போதுமென்றாயிற்று.

சிவ-வரதராஜன்



## சமாதானத்திற்கான போர்


இங்கே-
குருதி சொரிந்து : உடல் குப்புற விழுந்து
மண்ணுள்
குமைந்து போனவர்கள் ஏராளம்.

வாழ்ந்த நிலம் பிரிந்து
உயிர் வாழ வழி தேடி...
நீண்ட தூரப் பயணத்தின் பின்பு
இங்கே-
தங்கள் முகவரியை
நிரந்தரமாக்க முயன்றவர்களும்
'சமாதானத்திற்கான யுத்தத்தினால் '
குருதி சொரிந்து: உடல் குப்புற விழுந்து
மண்ணுள் குமைந்து போனார்கள்.

எஞ்சியிருப்போர்
உருக்குலைந்த வாழ்க்கையாய்
அழிவுகளிலும்...
அவலங்களிலும்...
துவண்டு கிடக்க,
மெல்ல உருண்டு செல்கிறது
'ஜனநாயக் உலகம்'

அலெக்ஸ் பரந்தாமன்

(உடையார் கட்டு - சுதந்திரபுரம் பகுதியில் இடம்பெற்ற விமானத் தாக்குதல் மற்றும் எறிகணை வீச்சில் இறந்து போன ஏதிலிகளின் நினைவாக...)





## என் கவிதைக்கு எதிர்த்தல் என்று தலைப்பு வை

என் ஈர்ப்பு அறுகிறது
இப் பேய் உலகை விட்டும்
அதன் ஆதிக்கங்களை விட்டும்
பரந்து கிடந்தன என் உணர்ச்சிகள்
அவற்றையெல்லாம் முடக்கி வை என்றனர்

நான் அவாவியிருந்த வாழ்வையும்
என் சுதந்திரம் நுரைத்த கனவுகளையும்
ஒரு பெரும் கனவுலகைக் கட்டி
நான் பதினேழு வருடங்கள் ஆண்டேன்
எங்கிருந்தோ வீசிய புயலில்
எல்லாமே சிதறின
நொருங்கிச் சிதைந்த கனவுகளோடும்
கண்ணீரோடும்
நான் துயிலறுத்திருக்கிறேன்

என் ஈர்ப்பு அறுகிறது
இப் பேய் உலகை விட்டும்
அதன் ஆதிக்கங்களை விட்டும்

நிரந்தரித்திருக்க நினைத்திருந்தேன்
என் யுகத்தில்
உய்த்துணர்கிறேன் இப்போ
சகலவிதமான யதார்த்தங்களையும்
மனித நேயங்களையும்
உண்டு,கழித்து,ஏப்பம் விட்டு
வீணுக்குச் சிரித்து
வாழ்வதே வாழ்வென ஆயிற்று.. ஆயிற்று

மனிதத்துவத்தைத் தொலைத்த
தகப்பன்களின் மகன்களினிடையே
எனக்கான
ஒரெயொரு காதலனையும் காண முடியவில்லை
எனவேயும்
என் ஈர்ப்பு அறுகிறது
இப் பேய் உலகை விட்டும்
அதன் ஆதிக்கங்களை விட்டும்

என் பயணம் ஆரம்பித்தாயிற்று
முடிவுகளற்ற இலக்கை நோக்கி
தனித்தாயினும் பயணிப்பதே இயன்றவரை
என் சிறகுகளின் மீது நீளும்
எல்லாக் கைகளுக்கெதிராகவும்
என் கனவுகளின் மீது
கொலீரங்களை வரைய நீளும்
எல்லாத் தூரிகைகளுக்கெதிராகவும்

பெண்ணியா

*240898 இரவு 8மணி*

# சோழ வெண்கலச் சிற்பங்களும் ஹென்றி மூரும்

வெங்கட் சாமிநாதன்

சோழ சாம்ராஜ்யத்தின் காலம் குறிப்பாக, ராஜராஜனின் ஆட்சிக்காலம் (985 - 1016), முதலாம் ராஜேந்திரனின் காலம் (1012 - 1044) தமிழ் சரித்திரத்தின் மிகச்சிறப்பு வாய்ந்த சிகர உன்னதம் பெற்ற காலம் ஆகும். அக்கால கட்டத்தில் சோழர்களின் சாம்ராஜ்யம் இந்திய துணைக் கண்டத்தின் தென்பகுதியைத் தாண்டி, இலங்கை, மலேய தீபகற்பம் என விரிந்திருந்தது. சோழப்பேரரசு பிரம்மாண்ட அளவிலான கோயில் நிர்மாணங்களுக்குப் பெயர் பெற்றது. தென்னிந்திய சரித்திரத்தின் பண்பாட்டின் பின்னணியில் கோயில் நிர்மாணம் என்பது எல்லாத் துறைகளிலுமான தமிழர்களின் செயல் பாட்டில் ஒரு மறுமலர்ச்சி என்றும் பொருள் பெறும். ஏனெனில், மதம், கல்வி, பொருளாதாரம், ஆடற்கலைகள், சிற்பம், ஓவியம் என வாழ்க்கையின் பல்வேறு நிலைகளுக்கும் பரிமாண விஸ்தாரங்களுக்கும் கோயில் ஆதார கேந்திரமாகவிருந்தது. இலக்கியம் பொறுத்த வரை, சிதறிக் கிடப்பனவற்றை ஒன்று சேர்த்து, நிலைநிறுத்தும் காலமாக வலுப்படுத்தும் காலமாக விருந்தது. இதன் நீட்சியாகத் தான் கம்பன் என்ற ஒரு சிகரம் பின்னர் தோன்றவிருந்தது.

இதர துறைகளிலும் கூட, இக்காலகட்ட சாதனைகள் தமிழ் சரித்திரத்திலேயே பின்னர் கூட எட்ட முடியாத சிகர சாதனைகளாகவிருந்தன. இக்கட்ட வெண்கல சிற்பங்கள் உலக சிற்ப சாதனைகளி லேயே ஒரு சிகர சாதனையாகியுள்ளன. இது பற்றி சற்றுப் பின்னர் விவரமாகப் பேச வேண்டும்.

கோயில், கலைகளுக்கும் கல்விக்கும் ஓர் ஊற்றுச் சுனையாக மையகேந்திரமாக, உற்பத்தி ஸ்தான மாக மாத்திரம் இருக்கவில்லை. இதற்கும் மேற்சென்று எல்லா பொருள் வளத்திற்கும், கலை வளத்திற்கும், பண்பாட்டுக்கும் கருவூலமாகவும் இருந்தது. இவ்விஷயத்தில் அது அரச குடும்பத் திற்கு இணையான ஒரு சக்தியாகவும் இருந்தது. இதன் விளைவாக, படையெடுத்து வந்து ஆக்கிரமித்துக் கொள்ளும் எந்த எதிரிப்படைக்கும் கொள்ளைக் கூட்டத்துக்கும், முதல் இரையாவது கோவிலாகவே இருந்து வந்திருக்கிறது. ஒரே கொள்ளையில் நிறைந்த பொருளை அபகரித்துச் செல்லக் கூடிய இலக்காகக் கோயில் வாய்த்து விடுகிறது. இம்மாதிரியான கொள்ளைகள் அடிக்கடி நிகழவே கோயில் பூசாரிகளும், நிர்வாக அதிகாரிகளும் எதிரி நாட்டுப் படைகளோ கொள்ளைக் கூட்டங்களோ வரும் அபாயத்திற் கான முன்னறிவிப்புக் கிடைக்குமாயின் கோயிலி லிருந்து அகற்றக் கூடிய சொத்துக்களை நகைகள், வெண்கல உற்சவ விக்கிரங்கள், வாகனங்கள் போன்றவற்றை, பாதுகாப்பான வேறிடங்களுக்கு எடுத்துச் செல்லவோ அல்லது பூமியில் புதைத்து வைத்தோ, பின் அபாயம் நீங்கிய பிறகு அவற்றை திரும்பப்பெறும் முறைகளைக் கற்றுக் கொண்டார் கள் என்பது போன்ற செய்திகள் கோயில் கல்வெட்டுக்களிலிருந்து நமக்கு கிடைக்கின்றன. இம்மாதிரியான அபாயகரமான நேரங்களில் பெருமளவில் மனித வதையும் நடந்ததுண்டு என்றும், ஒரு சமயம் 12,000 பேர்வரை கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்றும் தெரிய வருகிறது. கோயில் சொத்துக்கள் எங்கோ மறைவிடத்திலோ, அல்லது புதைக்கப்பட்டோ பாதுகாக்கப்பட்டுள்ளன என்பது தெரிந்து கொள்ளைப் படை அவ்விவரம் தரமறுக்கும் பூசாரிகள், நிர்வாகிகளைக் கொன்று குவித்ததால், நிகழும் வதைகள் இவை. இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் இரகசியமாக புதைத்தவர்கள் கொலைக்கு இரையாக மற்றவர் யாருக்கும் தெரியாது புதையுண்டவை, நூற்றாண்டு நூற்றாண்டுகளாக புதையுண்டே கிடக்க இப்போது தற்செயலாக வீட்டுக்கு அஸ்திவாரம் தோண்டு பவர்களாலோ, அல்லது புதைபொருள் இலாக்கா நிபுணர்களின் அகழ்வாராய்வுகளாலோ மீட்கப் பட்டு வருகின்றன.

இம்மாதிரியான மீட்கப்பட்ட வெண்கல சிற்பங்கள் தாம் தமிழ் நாட்டின் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த கிராமமான திருவெண்காட்டில் ஸ்வேத ஆரண்யேஸ்வரர் கோயிலைச் சுற்றியுள்ள நிலங்களிலிருந்து கண்டெடுக்கப்பட்டவை. திருவெண்காடு சிற்பங்கள் என்று புகழ் பெற்றவை.

நாப் தாமஸ் என்பவர் அமெரிக்காவின் வடக்கு காரொலைனாவில் இருக்கும் டேவிட்ஸன் கல்லூரியைச் சேர்ந்த தெற்காசிய திட்டத்தின் நிறுவனர். அவர் திருவெண்காடு சிற்பங்களைப் பற்றி ஒரு புத்தகம் வெளியிட்டுள்ளார். ''இப் புத்தகம் திருவெண்காடு வெண்கல சிற்பங்களின் கலாரூபங்களைப் பற்றி மட்டுமே ஆராய்கிறது. ஏனெனில் இச்சிற்பங்களைப் பற்றிய வர்ணனை விபரங்களும் திருவெண்காடு பற்றிய பண்பாட்டு வரலாறும் வேறு சிலர் எழுதியுள்ள புத்தகங்களில் ஏற்கெனவே சொல்லப்பட்டு விட்டன'' என்கிறார் ஆசிரியர். ஆனால், நாம் இப்புத்தகத்தில் நமக்குக் கிடைப்பவை; திருவெண்காடு கிராமத்தைப் பற்றியும் கோவிலைப் பற்றியும் கோயிலில் குடிகொண்டுள்ள தெய்வத்தைப் பற்றியுமான ஸ்தல புராணங்களும் கதைகளும் தான். மேலும், மெழுகைக் கொண்டு பிரதிமை செய்து பின் அதை உருக வைத்து வெண்கலக்குழம்பு வார்த்துச் செய்யும் பாரம்பரிய வார்ப்பு உத்திகள் பற்றிய விபரம், வார்க்கப்படும் ஒவ்வொரு தெய்வப் படிமம் பற்றிய புராணக் கதைகள். அவற்றின் வார்ப்புப் பற்றிய ஆகம விதிகள், கல்வெட்டுச் சான்றுகள், இவைத்தவிர சிற்பங்கள் எந்தெந்த தெய்வத்தின் பிரதிமைகள் என்று ஆசிரியர் இனங் காண்பதற்கு உதவியாகப் பயன்படுத்திய ஆகம சிற்ப விதிகள். பிரிந்து கிடந்த தனிச்சிற்பங்களை, இவை எந்தெந்தக் குழுவைச் சார்ந்தவை என்று கண்டுபிடித்து அவற்றை வகைப்படுத்தி குழுவாக அமைப்பதற்கு ஆசிரியர் கையாண்ட முறை பற்றி ''பாணியின் பகுப்பாய்வு'' என ஒரு அத்தியாயமும் சேர்த்துள்ளார். (Stylistic Analysis)

இந்த விவரங்கள் அனைத்தும் மிக



விளக்கமானவை, பயனுள்ளவை என்பதிலும் இச்சிற்பங்களைப் பற்றி நாம் அறிந்து கொள்ள இவை மிக அத்தியாவசியமான செய்திகள் என்பதில் ஏதும் சந்தேகமில்லை. ஆனால், ஆசிரியர் நமக்கு உறுதி அளித்த ''கலாரூப ஆராய்வு'' பற்றி ஏதும் இருப்பதாக சாட்சியங்கள் புத்தகத்தில் இல்லை. ஆசிரியரின் ''கலாரூப பார்வை'' செலுத்தியதன் ஒரு மாதிரியைக் காண வேண்டுமாயின், இதோ ''சிவனின் கேசம் நீண்ட ஜடா பாணியில் தடித்துச் சடையாக தலையைச் சுற்றி அடையடையாய்க் கட்டியிருக்க நகைகளை முகத்தில் அவிழ்ந்து விழாதவாறு கற்கள் பதித்த பட்டியொன்று நெற்றிக்கு சற்றுமேலாக ஜடைச் சுற்றுக்கு மேலாகக் கட்டப்பட்டிருக்கிறது. முற்றும் மலர்ந்து விரிந்த புஷ்பம் ஒன்று தலைமுடியில் சொருகப் பட்டிருக்கிறது. படமெடுத்தாடும் நாகபாம்பொன்றையும் பாக்கலாம். அதன் மிகுந்த உடலும் வாலும் சிவனின் சடைமுடிச் சுற்றுக்களில் மறைந்துள்ளது. காதுக்குச் சற்று மேலாக ஒரு சடை இழை பிறைச்சந்திரனை வெளித் தெரியக் காட்ட, தலைச்சுற்றுக்குள் வாரிமுடிக்காது போன குட்டை யான சடைகள் தோள்பட்டைகளில் விரிந்து பரவியிருக்கும் தோற்றம், சிவனின் தலையையும் உடலையும் இணைக்கும் விதமே அழகு. சிவனின் அலைபாயும் ஜடைப் பின்னலைகள் நெற்றிக்குச் சற்று மேலாக ஒன்றையொன்று பிணைகின்றன. இப்பிணைப்பு, சிவனின் முகத்தின் காணும் மிருதுவான ஆனால், வலிமைத் தோற்றம் சீர்மையைக் கவனத்திற்கிழுக்கும்.

இக்குழுச்சிற்பம் சோழபாணியின் செவ்விய லுக்கான சிறந்த உதாரணம் என்று சொல்ல வேண்டும். இச்சிக்கலற்ற எளிய வடிவமும் அதன் தோரணையும் சட்டென எவ்வித தடங்கலுமின்றி நம்மைக் கவர்ந்து விடுகின்றன.''

உண்மையைச் சொல்வதென்றால், எனக்குத் தோன்றுகிறது. இன்றும் நாம் காணும் ஸ்வாமிமலை ஸ்தபதிகள் இதே பாரம்பரிய வெண்கல சிற்ப வார்ப்பு முறைகளைத் தான் கடைப்பிடித்தி ருக்கிறார்கள். அதே ஆகம விதிகளின்படி தான் தம் சிற்பங்களை இன்றும் வார்க்கிறார்கள். நூற்றாண்டு நூற்றாண்டுகளாக கடைப்பிடிக்கப் பட்டு வரும் பாணி இது. மரபு இது. அவர்களது இன்றைய வெண்கல சிற்ப வார்ப்புகளுக்கும் மேற்கண்ட வர்ணனையே பொருந்துவதைக் காணலாம். வர்ணனையை மேற்கண்டதாக தக்க வைத்துக் கொண்டு, விளக்கப் படங்களைத் தான் இன்றைய சிற்பப்படங்களாக மாற்ற வேண்டியிருக்கும். வர்ணனையும் சிற்பப் புகைப்படங்களும் நன்றாகவே பொருந்தி வரும்.

இது மிக பரிதாபகரமான காட்சி. திரு வெண்காடு சிற்பங்களில் நாம் நேருக்கு நேர்காண்பது பதினோராம் நூற்றாண்டுச் சோழர்களின் பொற்காலம் படைத்த வெண் சிற்பங்களின் உதாரண மாதிரிகளை. இந்தச் சிற்ப வகைகளின் சிகர சாதனைகளுக்கு முன் நிற்கிறோம்.

இந்தியக் கலை வரலாற்றில் நாம் காணும் எந்த சிற்பியையும் போல, சோழர் காலத்திய சிற்பியும் கூட, ஆகம சாஸ்திரங்களும், புராணங்களும் விதித்துள்ள சட்டங்களின் வரம்பிற்குள் தான் தன் கலையைப் பேண வேண்டியிருந்திருக்கிறது. சிற்பத்தின் உயரம் (விரித்த கையின் அல்லது தலையின் அளவிற்கு ஒன்பது மடங்கு - நவதளம்), முத்திரைகள், நகை ஆபரணங்கள், சிற்பத்தின் தோற்றம், அதன் தோரணை என்ற இவ்வாறான பல அம்சங்கள் பற்றிய ஆகம விதிகளும் இவையெல்லாம் போக ஒவ்வொரு சிற்பமும் இவ்வம்சங்களின் முழுமையில் எந்தெந்த பயனுக்காக என என்று வேறு விதிகள் இருக்க, அவற்றின் எல்லைக்குள்ளும் செயலாற்ற வேண்டியேயுள்ளது. ஆனால், அதிர்ஷ்டவசமாக இப்படிப்பட்ட விதிகளின் சிறைகளுள் தன் கலையைப் பேணும் தொழில்வினைஞர்கள், கலைஞர்களுக்கு மத்தியில் ஒரு சிற்பியுடன் தற்செயலாக மோதிக் கொண்டு விடுகிறோம். அந்த சிற்பி, தன்தனித்தன்மையை மற்றவர்களிடமிருந்து தன்னைப் பிரித்துக்காட்டி, தன் படைப்பில் தன் தனி முத்திரையையும் நாம் காண வைத்து விடுகிறான்.

கட்டாயம் அவனுக்கு ஆகம விதிகள் கட்டளை யிட்டிருக்கின்றன! ''சிற்பத்தின் தொடை தேக்கு மரம் போன்றிருக்க வேண்டும். பெண்ணின் தொடை இளம் பச்சை நிற வாழைத் தண்டினைப் போலிருக்க வேண்டும்'' என்பது வாஸ்தவம் தான். ஆனால், இந்த ஆகம விதிமுறைகள் சட்டங்கள் எதுவும் ஒரு பெரிய கலைஞனான சிற்பி ஒரு தேக்கங் கட்டைக்கு உயிர் தந்து சிலிர்க்க வைத்து விடுவதினின்று தடுத்து விட முடியாது. தண்ண மும், திரட்சியும் கொண்ட தொடைச் சதைகள் அவை உருவான உலோகத்தின் கடினத்தையும் மீறி ஒரு மிருதுத் தன்மையை வெளிக்காட்டுவதினின்று தடுத்து விட முடியாது. சிவனின் நிற்கும் பாவனையை ''திரிபங்கம்'' (மூன்று கோணங்கள் கொண்டது) என்று சொல்கிறது. சொல்லட்டும். ஆனால், இந்த சிற்பியின் கலையில் ஒரு மாயம், சொல்லி விளக்க முடியாத ஒரு புதிரான மாயம். அந்த மாயம், திரிபங்கம் என்று விதிக்கப்பட்ட விருஷப வாகன தேவரின் நிற்கும் தோரணையில் வடிவில் ஒரு வசீகர அழகைக் கொணர்ந்து விடுகிறான். வெகுசாதாரணமாக, இயல்பாக, எவ்வித சிரம பாவமும் இன்றி நிற்கும் பாவனை யில் முகத்தில் ஓர் கருணை வடிவம் பார்வை யையும், புன்சிரிப்பை உதிர்க்க விருக்கும் உதடுகளையும் பார்க்கும் யாருக்கும், எனக்கும் ஐரோப்பிய மறுமலர்ச்சி கால மைக்கேல் ஏஞ்சலோவின் உன்னத படைப்புகளில் ஒன்றான தாவீத் சிற்பம் நினைவுக்கு வரும். ரிஷிபக வாகன தேவரின் ரிஷபம் இப்போது இங்கு இல்லை. அது இருந்த போது, ஆதாரத்துடன் அதன் முதுகின்மீது நீண்டு அமர்ந்த கை, இன்றும் அதே சாவகா சத்துடன் நீண்டு இளைப்பாறிக் கொண்டு தான் இருக்கிறது. இருப்பினும், அதன் உயிர்த் துடிப்பைப் பார்க்கும் போது, அது எந்தச் சமயத்தி லும் ரிஷபத்தின் முதுகிலிருந்து நகர்ந்து விடக் கூடும். உடலைத் தாங்கி நிற்கும் இடதுகாலை குறுக்கிட்டு தன் பழைய நிலைக்குத் திரும்பி அடிமுன்வைத்து சயனிக்கக் கூடும் என்று தோன்றுகிறது. சற்று சுற்றி வந்து பின்தோற்றத்தைப் பார்த்தோமானால், கால் சதைகளும், துடையும் அது புட்டத்தைச் சேரும் மடிப்புகளும் வெறும் சிறப்பு பிரதிபலிப்பாக இல்லாமல், உயிர்த் துடிப்புடன் இருப்பதைக் காணலாம்.

சிற்பத்தை ஒரு முறை சுற்றியே வரலாம். சிற்பத்தின் முழுப் பரிமாணத்தையும் காணும் போது, மனித உடலின் அழகும் அதன் வடிவமும் இசைவும் கடாக்கர்கள் சிறப்பித்துள்ளது போல போற்றப் பட்டுள்ளதன் சாட்சியங்களைக் காணலாம். ஆனால், அதில் ஒரு தெய்வீகமும் இந்திய அருள் அமைதியும் மலர்வதையும் காணலாம்.



இதை அந்தச் சிற்பி எப்படிச் சாதிக்க முடிந்தது? அதுவும் காலம் காலமாக தொடர்ந்து வரும் பழம் உத்தியான மெழுகு உருகச் செய்து வார்க்கும் முறையில் இது வெறும் வெண்கல வார்ப்புத் தானா? பழைய சித்தர் பாடல் ஒன்று உண்டு. மரத்தைப் பார்த்தால் மாமதயானை மறைந்து விடும். யானையைப்பார்த்தால் மரம் மறைந்து விடும். இது வெண்கலமுமல்ல, வார்த்தை சிற்பமுமல்ல. நம்முன் கடாட்சித்து நிற்பது ரிஷபவார்த்த சிற்பமுமல்ல. நம்முன் கடாசித்து நிற்பது ரிஷப வாகன தேவரே தான். ரிஷபதேவரின் நிற்கும் தோரணையின் வெற்றிக் களிப்பு, சிற்பக்கலைஞரின் வெற்றிக்களிப்புமாகும்.

இச்சிற்பம் செய்துள்ள மாயம், ஊர்பேர் தெரியாத, தன்னை அநாமதேயனாக மறைத்து மறைந்து போன சிற்பி செய்துள்ள மாயம் வார்த்தைகளால் சொல்லப்படக் கூடும் என்றால், அதற்கு நடராஜ சிற்பத்தைக் கண்ட ப்ரெஞ்சுசிற்பி ஃப்ரான்ஸ்வா ரோடானின் மொழி ஆளுமையும் கலைப்பரவச மும் தேவையாக இருக்கும். அவரது பரவச மொழி பரவச வார்த்தையே திரும்பச் சொல்ல வேண்டும். அவரே சொல்லியிருப்பார் என்பதில் சந்தேகம் இல்லை. அவருக்கு மாத்திரம் ரிஷபவாகன தேரர் பார்க்கக் கிடைத்திருப்பாரேயானால்.

(அடுத்த இதழில் முடியும்)

# கூட்டணி புலி பிடிக்கிறது?

மட்டக்களப்பு ஆரையம்பதியைச் சேர்ந்த இராமச்சந்திரன் இரகுபதி ஒக்.15ம் திகதி தமிழர் விடுதலைக் கூட்டணி யாழ். மாநகரசபை உறுப்பினர் சிவானந்தன் கணேந்திரனாலும் இவரது சகபாடிகளாலும் புலி என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு பம்பலப்பிட்டி பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். இரகுபதி மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் 1998 ஜூலையில் N.t.d. பட்டப்படிப்பை முடித்துக் கொண்டு கொத்மலை Benture International Garmants Factoryயில் தரக் கட்டுப்பாட்டு உத்தியோகத்தராக 98, செப். 7இல் இருந்து கடமையாற்றி வருகிறார். இவர் 45/25 அப்பர் பஸார் றோட் பூண்டுலோயா என்ற விலாசத்திலுள்ள திருமதி வீரையாவின் வீட்டிலிருந்தே கடமைக்குச் சென்று வந்திருக்கிறார். திடீரென ஒரு நாள் இவ் வீட்டுக்குச் விஜயம் செய்த கணேந்திரனும் இரு சகபாடிகளும் (ஒருவர் நரேந்திரன், மற்றவர் ஒரு சிங்களவர்) அங்கு இரகுபதியைக் கண்டவுடன் விசாரித்திருக்கிறார்கள். இரகுபதி ஆரையம்பதி என்றவுடன் அங்கு தானே புலிகள் இருக்கிறார்கள். இங்கு நீ பொலிசில் பதிந்திருக்கிறாயா? எனக்கும் அங்குள்ளவர்களைத் தெரியும். உன்னைப் பற்றி அங்கு விசாரிப்பேன் எனக் கணேந்திரன் கூறியிருக்கிறார்.

கணேந்திரன் விசாரித்து விட்டுச் சென்றபின் 02.10.1998 இரவு பூண்டுலோயா பொலிசார் வந்து இரகுபதியை விசாரித்து விட்டு சென்றிருக்கிறார்கள். இதனால் திருமதி வீரையாவும் உடனடியாக வீட்டை வீட்டு எழும்பும்படி கூறியுள்ளார்.

அதன் பிரகாரம் 12.10.98 அன்று தான் ஏற்கெனவே பல்கலைக்கழகத்தில் தங்கியிருந்த 265 கம்பல் றோட், கட்டுபெத்தை, மொரட்டுவ என்ற விலாசத்திற்கு கொழும்புக்கு வந்திருக்கிறார். பின்னர் 15ம்திகதி பிற்பகல் அங்கிருந்து புறப்பட்டு வரும் வேளையில் வெள்ளவத்தையில் தான் வழமையாக உணவருந்தும் வாசீகன் ஹோட்டலுக்கு இரவு ஏழு மணியளவில் வந்திருக்கிறார். கணேந்திரனும் இரகுபதியைப் பின் தொடர்ந்தால் போல் ஹோட்டலுக்குள் வந்து இவர் பக்கத்தில் அமர்ந்து கொண்டு நீர் ஏன் இங்கு வந்தீர்? இப்போ ஏங்கே போகிறீர்? மட்டக்களப்புக்கு போக எத்தனை மணிக்கு பஸ்? எந்த பஸ்ஸில் போகிறீர்? என்ற விபரமெல்லாம் கேட்டெடுத்து விட்டு இரகுபதி சாப்பிட்ட சாப்பாட்டிற்கும் பணத்தைச் செலுத்தி விட்டு சென்றிருக்கிறார். இரகுபதி இரவு 10 மணியளவில் மட்டக்களப்பு வருவதற்காக ஜேசு பஸ் தரிப்பு நிலையத்தில் காத்து நின்ற வேளையில் 2 ஓட்டோக்களில் கணேந்திரனும், அவரது நண்பர் நரேந்திரனும் பம்பலப்பிட்டி பொலிசைச் சேர்ந்த சப் இன்பெக்டர் ஒருவரும் சார்ஜன்ட் தர்மபாலவும் பொலிஸ் கான்ஸ்டபிள் இருவருமாக வந்திறங்கினர். கணேந்திரன் இரகுபதியின் சேர்ட் கொலரைப் பிடித்து கன்னத்தில் அறைய முற்பட்ட வேளையில் சப் இன்பெக்டர் தடுத்து நிறுத்தி கணேந்திரனின் பஸ் டிக்கெட்டை வாங்கி எடுத்து விட்டு ஓட்டோவில் ஏற்றிக் கொண்டு பம்பலப்பிட்டி பொலிசிற்கு கொண்டு போய் புலி என்று சொல்லி ஒப்படைத்திருக்கிறார்கள். இரகுபதி பிடிபட்ட விடயம் 16ம்திகதி இரவே தகப்பன் இராமச்சந்திரனுக்கு தெரிய வந்திருக்கிறது. அதன்பின் இவர் இரகுபதியைப் பிடித்தவர் கணேந்திரன் என்று கேள்விபட்டதும் தமிழர் விடுதலைக் கூட்டணி உபதலைவர் ஆனந்தசங்கரியிடம் சென்று உங்களுடன் இருக்கும் கணேந்திரன் தான் என்று மகனைப் பிடித்து பொலிஸில் ஒப்படைத்திருக்கிறார். மகனை விடுதலை செய்ய ஏதாவது உதவி செய்யுங்கள் என்று கேட்ட போது ''எங்களைத் தொல்லைப்படுத்தினால் ஒன்றும் செய்ய முடியாது'' என்று சொல்லியிருக்கிறார் அவர். அதன் பிறகு இராமச்சந்திரன் பம்பலப்பிட்டி பொலிசிற்குச் சென்ற போது கணேந்திரன் வந்து இரகுபதி புலி இல்லையென்று உறுதிப்படுத்தினால் மட்டுமே நாம் விடுதலை செய்வோம் என்று பொலிஸ் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதன்பின் கணேந்திரன் 20ம்திகதி பம்பலப்பிட்டி பொலிசிற்குச் சென்று தான் இரகுபதி தொடர்பாக பல இடங்களிலும் விசாரித்ததாகவும், அவருக்கும் புலிகளுக்கும் எந்தத் தொடர்பும் இல்லையென்று உறுதியளித்திருக்கிறார். பின் 21ம் திகதி நீதிமன்றினூடாக இரகுபதி விடுதலை செய்யப்பட்டார்.

அன்றிரவு மட்டக்களப்புக்குச் செல்வதற்காக பஸ்ஸுக்கு நின்ற வேளையில் கணேந்திரன் அங்கு வந்து ரூ.500 காசும் கொடுத்து, நான் உங்களுடைய பஸ் டிக்கட்டைப் பறித்து விட்டேன். இதை உங்களுடைய பஸ் செலவுக்கு வைத்திருங்கள் என்று சொல்லிக் கொடுத்து விட்டுச் சென்றிருக்கிறார்.

இரகுபதி நடந்த எவற்றையும் புரிந்து கொள்ள முடியாமல் முழித்துக் கொண்டு நிற்கிறார்.

நாங்களும் தான்.

உங்களுக்காவது ஏதாவது புரிகிறதா?

---

—20

## வர்த்தக...

விதத்தில் கீழ்வரும் விடயங்கள் தொடர்பாக கொண்டுவர உடன்படல்.

i. விவசாயம் ii.தொழிற்துறை iii. வர்த்தகம் iv. தொழிற் சட்டங்களில் சீர்திருத்தங்களை சமகால வணிக தேவைகட்கேற்றமுறையில் பொருந்தும் விதத்தில் கொண்டுவருதல், உடனடிக் கவனத்துக்குரியவை:

i. தொழிற் சந்தையின் நெகிழ்வுத்தன்மை ii. விடுமுறை நாட்களை குறைத்தல் iii. தொழில் வழங்குவோர், கொள்வோர் உரிமைகளில் சமத்துவமும், கடப்பாடும். iv. உற்பத்தித் திறனுடன் சம்பளத்தை இணைத்தல்

9. தேவையான கல்விச் சீர்திருத்தத்தை கொண்டு வருவதும் நடைமுறைப்படுத்துவதும்.

10. தேசிய பொருளாதாரத் திட்டங்களை தேசிய வர்த்தக கைத்தொழில் சம்மேளனத்துடனும், தொழில் கொள்வோர் சங்கங்கள் மற்றும் தொழிற் சங்கங்களுடன் கலந்தாலோசித்து செய்தல்.

இந்தத் திட்டத்திற்கு அரசாங்கத்தின் ஆதரவு கிட்டியுள்ள போதும், ஏனைய அரசியல் கட்சிகள், தொழிற் சங்கங்கள் , அரச சார்பற்ற நிறுவனங்களின் ஆதரவு இருக்கும் என்பது இதுவரை தெளிவாக தெரியவில்லை.

மோர்ஜ் இயக்கம் இது தொடர்பாக வெளியிட்ட பத்திரிகை செய்தியொன்றில், பத்தம்சத் திட்டவரைமானங்கள் கூறும் அனைத்துக் கட்சி கூட்டு முயற்சி தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண அவசியமான ஒன்று என்னும் அவர்களது முயற்சிக்கு தமது முழுமையான ஆதரவு உண்டென்றும் அறிவித்துள்ளது.

---

7—

## பொலிஸ்...

ஆயுதப்படையினராலும் மீறப்படுவது ஏன் என்று கூற முடியுமா? இப்படிச் செய்பவர்களுக்கு எதிராக ஏதாவது நடவடிக்கை எடுக்க முடியும் என்று பிரேரிக்கிறீர்களா?

இங்கே இரண்டு விடயங்கள் உள்ளன. ஒன்று ஒருவர் சட்ட ரீதியாக அடையாள அட்டையை எடுத்துச் செல்ல வேண்டும் என்பது. நான் கூட அதனைக் கொண்டு செல்கிறேன். மற்றையது அவசரகாலச் சட்ட விதி. இதில் நீங்கள் சொல்வது சரி. அது வீட்டிலேயே இருக்க வேண்டிய ஒரு பத்திரம். அதை கொண்டு செல்ல வேண்டுமானால், நீங்கள் ஒரு போட்டோ பிரதியை எடுக்க வேண்டும். என்ன நடக்கிறது என்றால் சோதனைச்சாவடிகளில் நிற்பவர்கள் தொடர்ந்து அங்கே நிற்பவர்கள் அல்ல. அவர்கள் யுத்த முனையில் இரண்டு, மூன்று மாதம் இருக்கிறார்கள். பின் திடீரென்று இங்கு வருகிறார்கள். உண்மையில் அவர்களுக்கு பொலிஸ் மா அதிபர் யார், சட்ட மா அதிபர் யார் என்றே தெரியாது. அவர்கள் சண்டையிட்டுக் கொண்டிருந்தவர்கள். அவர்களுக்கு யாராவது இதை கேட்குமாறு சொல்லிக் கொடுத்திருப்பார்கள். இதனால் அவர்கள் கேட்டிருக்கக் கூடும். இன்று சோதனை நிலையங்களில் உள்ள ஒவ்வொருவரையும் கல்வியூட்டிக் கொண்டிருக்க முடியாது. நான் நிறுத்தப்பட்டாலும் என்னிடமும் அவர்கள் கேட்கிறார்கள். அவர்கள் சோதிக்க விரும்பினால் நான் சோதிக்க அனுமதிக்கிறேன். என்னைச் சட்டமா அதிபரென்று நான் சொல்வதில்லை. இது தான் நிலைமை. இத்தகைய சோதனைச் சாவடிகளைக் கண்காணிக்க எங்களிடம் நிலையான நபர்கள் இல்லை. இது ஒரு முக்கியமான பிரச்சினை. சோதனை நிலையங்களில் உள்ளவர்கள் சண்டையின் பின் சில நாட்கள் ஓய்வுக்காக வந்தவர்கள். அந்த வேளையில் இலேசான வேலைகளில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். இது தான் இங்கு நடைபெறுகிறது. அவர்கள் எல்லோரையும் கல்வியூட்ட முடியாது. நாம் மேல்மட்ட அதிகாரிகளுக்குச் சொல்லியிருக்கிறோம். எங்கெல்லாம் முடியுமோ அங்கெல்லாம் அந்த அறிவுறுத்தல் போயிருக்கிறது.

பாதுகாப்பு நிலை காரணமாக எம்மால் எல்லோர் மீதும் பூரண கட்டுப்பாட்டைக் கொண்டிருக்க முடியாதுள்ளது. அவர்கள் செய்யக்கூடாத பல வேலைகளைச் செய்கிறார்கள். ஆனால் நிலைமை என்னவென்றால் எமக்கு இவற்றின் மீது பூரண கட்டுப்பாடு இல்லை. சட்டமா அதிபரும், நீதிமன்றமும் பூரண கட்டுப்பாடுகளை வைத்திருந்த சூழ்நிலை அல்ல இன்றுள்ள நிலை. இன்றுள்ள கட்டுப்பாடு போதுமானது அல்ல அதை நிவர்த்திக்க நாம் முயல்கிறோம். முடிந்த இடங்களில் எல்லாம் நாம் அறிவுறுத்தல்கள் வழங்கியுள்ளோம். உண்மையில் சரியான நிலை என்னவென்றால் சோதனைச்சாவடிகளே இருக்கக் கூடாது. அது தான் சரியான நிலை. தனிப்பட்ட முறையில் நான் நினைக்கிறேன், நகரத்துக்குள் நுழையும் இடங்களில் மட்டும் சோதனை நிலையங்கள் இருந்தாலே போதும். உள்ளே அவை அதிகமாக இருக்கக் கூடாது. ஏனென்றால் புலிகளுக்கு அவை எங்கே இருக்கிறது என்று தெரியும். எனக்கே அவற்றைத் தவிர்த்துப் போக முடியும் என்றால் அவர்களுக்கும் அது முடியும். ஆனால் இது பாதுகாப்பு பற்றிய விடயம். இதைத் தீர்மானிப்பவர்கள் வேறு நபர்கள்.

பொலிஸ் பதிவுப் பத்திரத்தைக் கொண்டு செல்லத் தேவையில்லை. எனினும் அதைக் கொண்டு செல்வது நல்லது. அதைக் கொண்டு செல்வது அவசியம் இல்லை என்ற உத்தரவை அறியாத ஒருவர் உங்களைத் துன்புறுத்தக் கூடும். நீங்கள் அவர்களுடன் விவாதத்தில் இறங்கலாம். ஆனால் அவர்கள் விவாதத்திற்கு பழக்கப்பட்டவர்கள் அல்ல. அவர்கள் உங்களுடன் முரண்படக்கூடும். இதனால் தான் நான் சொல்கிறேன் எனது பாதுகாப்பு ஊழியர்களுடன் செல்லும் போதுகூட நிறுத்தப்பட்டிருக்கிறேன். நான் யார் என்று சொல்வது கூட சில வேளைகளில் பயன்படுவதில்லை. எனது பிரதான நோக்கம் தேவையற்ற கைதுகளைத் தவிர்ப்பது தான். அதில் தான் நாம் கவனமாக இருக்கிறோம்.

பொலிஸ் பத்திரத்தை எடுத்துச் செல்வது உங்களுக்கு நல்லது. ஏனென்றால் இது ஒருவர் தேவையில்லாமல் கைது செய்யப்படும் நிலமையைத் தவிர்க்கும்.

வவுனியாவில் பல்லாயிரம் தமிழர்கள் கொழும்புக்கோ, தெற்கில் உள்ள வேறு இடங்களுக்கோ பாஸ் இன்றி போக அனுமதிக்கப்படாமல் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். சாதாரணமாக பாஸ்கள் வழங்கப்படுவதில்லை. பொதுமக்களது நடமாடத்தைக் கட்டுப்படுத்துவது சட்டத்தால் அனுமதிக்கப்படுகிறதா? அப்படியல்லவென்றால் இது சுதந்திர நடமாட்டத்திற்கும் இலங்கையில் உள்ள எப்பாகத்துக்கும் சென்று வாழ்வதற்குமான அடிப்படை உரிமையை வழங்கும் அரசியல் அமைப்புச் சட்ட சரத்து 14 (1) ஐ மீறுவது ஆகாதா?

வன்னி அரசாங்கக் கட்டுப்பாடில்லாத பிரதேசம் யாழ்ப்பாண மக்கள் வவுனியா வருவதில்லை. அரசகட்டுப்பாடு அற்ற பகுதியில் இருந்து வருபவர்கள் அங்கு இருக்க வேண்டி உள்ளது. இது அவர்களுக்கு உதவவே செய்யப்பட்டுள்ளது. அவர்கள் கொழும்புக்கு போகும் வழியில் கைது செய்யப்படலாம். அதற்கு நிறைய வாய்ப்புக்கள் உண்டு. அவர்களை, அவர்களது அனுமதியுடனே அங்கு வைத்திருக்கிறோம். அவர்கள் போக விரும்பினால் போகலாம். யாரும் அவர்களைத் தடுப்புக் காவலில் போட்டிருக்கவில்லை. இங்கு வரவிரும்பினால் மட்டும் அவர்கள் தமது அடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அப்படி இல்லை என்றால் அவர்கள் இங்கு வந்ததும் கைது செய்யப்படுவார்கள். உங்களது கிராமம் இராணுவ கட்டுப்பாட்டுக்கு வெளியில் இருப்பதாக நீங்கள் சொன்னதும் அவர்கள் உங்களைக் கைது செய்வார்கள். எனவே இது முழுக்க முழுக்க அவர்களுக்கு உதவவே செய்யப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சுக்கு நவ சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த திருநாவுக்கரசு அவர்கள் அனுப்பிய கடிதம் ஒன்று பத்திரிகையில் பிரசுரமாகியிருந்தது. பிரச்சினை இது தான், பெற்றோர்கள் வவுனியா ஊடாக கொழும்பு வர அனுமதிக்கப்பட்டார்கள். ஆனால் அவர்களது மகன் அனுமதிக்கப்படவில்லை. பாதுகாப்பு அமைச்சின் கடிதம் 'யாழ்ப்பாணத்தில் கல்வியை தொடர்வதற்கேற்ற விதத்தில் நிலைமை சுமுகமாக உள்ளது. எனவே அவர்களை கொழும்புக்கு வருவதற்குப் பதில் யாழ்ப்பாணத்துக்குச் செலலும்படி ஆலோசனை கூறவும்' என்று கூறுகிறது.' இலங்கையில் எங்கு வாழ்வது என்பதை தீர்மானிக்கும் உரிமை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதா? கொழும்புக்கோ வேறு இடத்துக்கோ ஒரு குடும்பம் வந்து குடியேறுவது முடியாதா என்று கேட்டுள்ளது அப்பத்திரிகை?

அந்தப் பிரதேசத்தில் இருந்து வருபவர்கள் பற்றி அரசாங்கம் அக்கறையாக உள்ளது. இது பாதுகாப்புப் பிரச்சினை அல்ல, மனிதாபிமானப் பிரச்சினை. வசதிகளும், வழங்களும் கொழும்பில் மட்டுப்பட்டே உள்ளன. நகரம் இவ்வளவு பேரைத் தான் கொள்ள முடியும். இதற்கு மேல் முடியாது. அத்துடன் யாழ்ப்பாணத்தில் மக்கள் போய் குடியேற வேண்டும் என்ற விருப்பம் அரசாங்கத்திற்கு உள்ளது. ஏனென்றால், அப்படி அவர்கள் அங்கு போய் கல்வி, விவசாயம் தொழில் என்பவற்றில் ஈடுபடாவிட்டால் அதிகாரப் பகிர்வு நடவடிக்கைக்கான முழு முயற்சியும் பயனற்றுப்போய்விடும்.


சிங்களவர்களோ, தமிழர்களோ, முஸ்லிம்களோ யாராயிருப்பினும் எமது நோக்கம் என்னவென்றால் நகரத்தை நெருக்கமானதாக்காமல் எங்கெங்கே இடம் இருக்கின்றதோ அங்கு போய் வேலை செய்து வாழ வேண்டும் என்பதே. எனவே எல்லாவித்திலும் மககளை அவர்களது கிராமங்களிலேயே இருக்க வைக்கும் முயற்சி ஒன்று நடக்கிறது. உதாரணமாக, சேரிப்புறங்களைச் சுத்திகரிக்கும் நடவடிக்கைகள் நடக்கிறது. அவர்கள் வேறு இடங்களில் குடியமர்த்தப்படுகிறார்கள். இது தொடர்ச்சியாக நடக்கிறது. எனவே அந்தப் பாதுகாப்பு அமைச்சின் கடிதத்தைத் தவறாகப் புரிந்து கொள்ளக் கூடாது. நீங்கள் படிப்பதற்காக கொழும்புக்கு வந்திருந்தால், அந்தப் படிப்பிற்கான வசதிகள் வெளியிடங்களில் சிறப்பாக வந்து கொண்டிருக்கின்றன. அங்கு போய்ப் படியுங்கள். நகரத்தை நெருக்கடிக்குள்ளாக்கி மேலும் சமூகப் பிரச்சினைகளை உருவாக்காதீர்கள் என்று சொல்கிறோம். ஆகவே இது அரசியல் அமைப்புச் சட்டத்தை மீறும் செயல் அல்ல. யாழ்ப்பாணத்திலோ அநுராதபுரத்திலோ உங்கள் கல்வியைப் பெறமுடியுமானால் அந்த மாவட்டங்களில் அவற்றைப் பெறுங்கள். சட்டக்கல்லூரிக்குப் போக வேண்டுமானால் நீங்கள் இங்கு வரவேண்டும். இங்கு கட்டாயம் வரவேண்டியவர்களுக்கு வசதியாக நீங்கள் உதவி செய்ய வேண்டும். எல்லோரும் இங்கு வர நாம் ஊக்குவிக்க முடியாது. இந்த சமூக தத்துவத்திற்கு நான் மிகவும் பங்களிப்புச் செய்து வருகிறேன். அடிப்படைக்கல்விக்காக எல்லோரும் இங்கு வருவதற்கு நாம் உற்சாகம் தரக்கூடாது. ஒரு வேலை தேடி நீங்கள் இங்கு வருவதானால் எனது ஆலோசனை இங்கு வரவேண்டாம் என்பதே. அரசாங்கமும் அவர்களுக்கு உதவவேண்டும். அதையே எல்லா அரசியல்வாதிகளும் பாதுகாப்பு அமைச்சினரும் சொல்கிறார்கள். எல்லாப் பொறுப்பான அரசியல்வாதிகளும். அதைச் செய்கிறார்கள். தொண்டமான் தனது மலை நாட்டு மக்கள் இங்கு வருவதை விரும்பவில்லை வசதி தேவைப்படுபவர்களுக்காக அந்த வசதியை வைத்திருக்க வேண்டும்.

ஆனால் இந்த விடயத்தில் குடும்பத்தின் ஏனைய அங்கத்தவர்கள் கொழும்பு வர அனுமதிக்கப்பட்டார்கள். மகன் மட்டும் அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இதனால் தான் நாம் அறிய விரும்புகிறோம்: ஒரு மகன் தனது குடும்பத்துடன் இணைய விரும்புவதைத் தடுப்பது நியாயமானதா?

இந்தக் கடிதத்தில் அவர்கள் எழுதியிருப்பது தவறு. அது முழுக்க முழுக்கத் தவறானது. அதிகார வர்க்க மனோபாவத்தின் ஒரு வகை மாதிரி வடிவம் இது. முதலில் மகனை இங்கு வர அனுமதிக்க வேண்டும், பிறகு அந்தக் குடும்பத்தை யாழ் செல்லுமாறு கேட்க வேண்டும். இங்கே தான் பிழை நடந்திருக்கிறது. அரசாங்க அதிகாரிகள் இப்படிச் சிந்திப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

அவர்களுக்கு ஒரு வழிகாட்டலை வழங்கினால் அவர்கள் அதை எல்லா இடத்திலும் பாவிப்பார்கள். அவர்கள் குடும்பத்தின் ஒரு பகுதியை இங்கேயும், ஒரு பகுதியை அங்கேயும் இன்னும் சிலரை சிறையிலும் வைத்திருப்பார்கள். இவ்வாறான முடிவுக்கு வரக்கூடிய சகல தகுதிகளும் பெற்றவர்கள் தான் அவர்கள். இது ஒரு மனிதாபிமானப் பிரச்சினை என்ற கல்வியூட்டலை அவர்களுக்கு வழங்க வேண்டும். குடும்பம் முதல் ஒன்று சேர அனுமதிக்கப்பட்ட பின்னர் அங்கு போகுமாறு கேட்கப்படலே சரியானதாக இருக்க முடியும்.

தமிழில் — குஞ்சன்



# எல்லோருடைய கண்களையும் திறக்கச் செய்யும் Third Eye

மு.பொ.

*Third Eye*

ஆங்கில கலை இலக்கிய இதழ்

திரு எஸ். ஜெயசங்கர்
செல்வி: என். வி. ராஜாபிள்ளை
தொடர்பு: எஸ்.ஜெயசங்கர்,
நுண்கலைப்பீடம்,
கிழக்கு பல்கலைக்கழகம்
செங்கலடி,
சிறிலங்கா.

'தேர்ட் ஐ' - ஈழத்தில் இருந்து வெளிவரும் ஆங்கில கலை இலக்கிய இதழாகும். ஓகஸ்ரஸ் ஜோன் என்பவரால் கீறப்பட்ட கவிஞர் தம்பிமுத்துவின் (Poet Thambimuttu) படத்தை முகப்பில் தாங்கி இதன் ஐந்தாவது இதழ் வெளிவந்துள்ளது. 'தம்பி' என ஆங்கிலேயரால் செல்லமாக அழைக்கப்பட்ட, 40களில் ஆங்கில கவிதை இதழ் வெளியீட்டில் சாதனை ஏற்படுத்திய கவிஞர் தம்பி முத்துவின் படம் 'மூன்றாவது கண்'ணிற்கு மெருகூட்டுவதாகவே உள்ளது.

'மூன்றாவது கண்' என்பதற்குரிய விளக்கம் இதில் தரப்பட்டுள்ளது. இதைப்படிக்கும் எவரும் இவ்விதழை வெளிக்கொணர்வோரின் ஆழத்தைக் கண்டு கொள்ளலாம். 'மனிதனிடத்தே பரிணமிக்கும் தெய்வீகமே மூன்றாவது கண் எனப்படும். அல்லது இதை தபஸின் கண் எனலாம்.' என்று ஆரம்பித்து, மூன்றாவது கண்ணின் சிந்தனைத் தளத்தில் அறுவடையாகும் கலைப் படைப்புகள் காலங் காலமாகவே ஜீவித்திருக்கக் கூடியவை என்று விளக்கப்படுவதைப் பார்க்கும்போது, இன்று சஞ்சிகை வெளியிடுவோரெல்லாம் 'நவீனத்துவம், பின் நவீனத்துவம்' என்று மேற்குலகக் கோட்பாடுகளைத் தஞ்சமடைந்து நிற்கும்போது, அதற்கு நேர்மாறாக நமது பண்பாட்டு விழுமியங்களே மேற்குலகச் சிந்தனைகளுக்கும் ஊற்றுக் கண் என்று சொல்லாமல் சொல்வதுபோல் மூன்றாவது கண் பற்றி விளக்கி வெளிவந்துள்ள 'தேர்ட் ஐ' வித்தியாசமான நோக்குடையது என்பதைக் கண்டு கொள்ளலாம்.

இத்தகைய கலை நாட்டம் கொண்ட தேர்ட் ஐ, பல தமிழில் வெளிவந்துள்ள படைப்புக்களின் மொழிபெயர்ப்பையும், ஆங்கிலத்திலேயே எழுதப்பட்ட படைப்புக்களையும் தாங்கி வெளிவந்துள்ளது. எல்.ஏ. லியோன், ஜெயசங்கர், வாசுதேவன், சாந்தன், சட்டநாதன், சசிகிருஷ்ணமூர்த்தி, கௌரிபாலன், ஏ.ஜே. கனகரத்தினா, ஏ.எஸ்.பய்வா ஆகியோரின் எழுத்துக்களோடு Kenyan Review ல் இருந்து மறுபிரசுரம் செய்யப்பட்ட கொக்கட்டிச்சோலை பற்றிய கவிதை, லங்கா காடியனில் இருந்து மறுபிரசுரம் செய்யப்பட்ட தம்பிமுத்து பற்றிய (Bridge Between Tow Worlds) இரண்டு உலகங்களுக்கான பாலம் என்னும் நூல் விமர்சனம், தம்பிமுத்துவால் வெளியிடப்பட்ட Poetry London இதழ்கள் பற்றி ஒக்ஸ்போர்ட் யூனிவேசிற்றி பிறஸ்ஸால் வெளியிடப்பட்ட நூலிலிருந்து பிரசுரிக்கப்பட்ட கட்டுரை, இன்னும் எல்.ஏ. லியோனால் எழுதப்பட்ட 'மட்டக்களப்பில் ஆங்கில அரங்கு - அதன் அண்மைக்கால வளர்ச்சி' ஆகியவை இவ்விதழுக்கு கனதியையும் இன்று நம் இளந் தலைமுறையினர் அறிந்து வைத்திருக்க வேண்டிய பல விஷயங்களையும் தருவனவாய் உள்ளன.

எல்.ஏ. லியோனால் எழுதப்பட்ட (True Peace Lovers) 'உண்மை சமாதான விரும்பிகள்' என்ற கவிதை, இவ்விதழின் ஆசிரிய தலையங்கமாக, 'சமாதானத்துக்கான யுத்தம்', 'விடுதலைக்கான போராட்டம்' என்னும் இருவகைத் தீவிரப் போக்குகளின் மத்தியில் வீடிழந்து பனியிலும் வெய்யிலிலும் நாடிழந்து அலையும் மக்களின் துன்பங்களைக் கருணையோடும் அரசியல்வாதிகளின் பொய்மையை ஈவிரக்கமற்ற அங்கதத்தோடும் கூறிச் செல்கிறது.

வாக்காளர் இல்லாமலே வாக்குகள் தேடப்படுகின்றன. பொம்மைகளை வைத்து வெற்றி உறுதி செய்யப்படுகிறது. ஏன் என்று கேட்க எவருக்கும் தைரியம் இல்லை. தலையாட்டிய படி சந்நியாசிகள் பக்கத்தில்!

என்று எல்.ஏ. லியோன் கூறும்போது தலையாட்டும் பௌத்த பிக்குமாரையும் எம்மால் நினைத்துப் பார்க்காமல் இருக்க முடியாது.

இன்றைய போர்க்காலச் சூழலில் அனேகமான படைப்புகள் அதைச் சுட்டுவனவாக, அதன் விபரீதங்களைக் காட்டுவனவாகவே உள்ளன. பிறெக்ரின் (Brecht) உருவகக் கதையொன்றை ஒரு வித நாடக வடிவத்தில் அமைத்த ஏ.ஜே.கனகரத்னாவின் The Man Who Said "No" என்ற ஆக்கம் இன்றைய இராணுவ முனைப்புகளுக்கு நேரும் அவலத்தைச் சுட்டுவதாய் உள்ளது.

ஜெயசங்கரின் Bearing Coals of Fire, Fire Wak ஆகிய இரண்டு கவிதைகளும் தீ மிதித்தலை அடிப்படையாகக் கொண்டு வெவ்வேறுவிதமான கருப்பொருட்களை கவித்துவம் மிளிரக் கூறுச் செல்கிறது. 'நெஞ்சில் நெருப்பேற்றியும் முகத்தில் உறையும் துயரோடும்' திரியும் மக்களை முன்னதும், தீ மிதித்தலுக்காக, நிமிர்ந்து நின்ற வேம்புகள் வெட்டி வீழ்த்தப்பட்டு எரிந்து கரியாக தீ மித்தலுக்காக உணவொறுத்து விரதமிருந்தவர்களின் சங்கல்ப்பங்பகளுக்கும் நேர்த்திகளுக்கும் என்ன நடக்கிறது? இவையும் எரிந்த வேம்புகளின் கரியாகி புதையுண்டனவா? என்ற கேள்விகளை எழுப்பி பின்னது முடிவடைகிறது. லியோனால் மொழிபெயர்க்கப்பட்ட ஏ.எஸ்.பாய்வாவின் 'Will Await You" என்ற கவிதை நன்றாக இல்லை. தமிழில் இருந்து ஆங்கிலத்திற்கு சில கவிதைகளை மொழிபெயர்ப்பதில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு இக்கவிதை உதாரணம். ஏராளமான தமிழ்ச் சொற்களுக்கு விளக்கக் குறிப்பு கொடுக்கப்பட வேண்டிய நிர்ப்பந்தம் வேறு. இத்தகைய கவிதைகளை இவ்வாறு மொழிபெயர்ப்பதால் அவற்றின் உயிர்ப்பை பேணிவிடமுடியுமா என்பதே கேள்வி. இத்தகைய கவிதைகளை ஒருவித தழுவலாகத் தருவதன் மூலம் இவை சிறக்கலாம் என்றே எண்ணத்தோன்றுகிறது. லியோனால் மொழிபெயர்க்கப்பட்ட My Wishes என்ற வாசுதேவனின் கவிதை, கருணாகரனின; The Vision என்ற கவிதையும், நன்றாகவே வந்துள்ளன. அவ்வாறே ரி. கிருபாகரனால் மொழிபெயர்க்கப்பட்ட ஜெயசங்கரனின் கவிதையும்.

கதைகளைப் பொறுத்தவரை சாந்தனின் இரண்டு குறுங்கதைகள், ஏ.ஜே.கனகரத்னவால் மொழிபெயர்க்கப்பட்ட சட்டநாதனின் Equipoke கதை, அண்மையில் காலமான சசி கிருஷ்ணமூர்த்தியின் Void என்ற கதை, கௌரிபாலனின் ஐ Thought, you Called என்ற கதை ஆகியவை இடம் பெற்றுள்ளன. எல்லாமே போர்க்காலச் சூழலை ஏதோஒரு விதத்தில் தொட்டுக் கொண்டவையாகவே உள்ளன. சாந்தனின் The Cuckoos House என்ற கதையும் சசி கிருஷ்ணமூர்த்தியின் Void என்ற கதையும் மரம் ஒன்றைப் பற்றிக் கூறும் கதைகளாகும். ஒரே வகையான உணர்வுகள் தமக்கே உரிய குறியீட்டு முகங்களில் முன்னீழ்கின்றன.

இவ்விதழில் கவிஞன் தம்பிமுத்து பற்றி எழுதப்பட்ட கட்டுரைகள் இன்றைய இளந் தலைமுறையினர் அவரை அறிவதற்கு வாய்ப்பேற்படுத்தும். ஒரு காலத்தில் மரபுவாதிகளாலும், பண்டிதர்களாலும் 'இழிசனர்' வழக்கென ஒதுக்கப்பட்டவை எப்படி முற்போக்குக் குணம் கொண்ட எழுத்தாளர்களால் நவீன தமிழ் இலக்கியத்துள் புகுத்தப்பட்டதோ அவ்வாறே தம்பிமுத்துவும் 40களில் ஆங்கில கவிதை இலக்கியத்தில் 'எல்லாரிடமும் தத்தமக்குள் கவிதை உண்டு' என்று பிரகடனப் படுத்தினார் என்பதை 'தேர்ட் ஐ' யைப்படிப்பவர், அறிந்து கொள்வர். கூடவே, Among My Souvenirs என்ற றெஜி சிறிவர்த்தனாவின் நாவல் பற்றிய ஏ.ஜே. கனகரத்னவின் விமர்சனமும் இதில் இடம்பெறுகிறது.

இன்னொரு முக்கியமான அம்சம் இங்கு குறிப்பிடப்பட வேண்டும். ஓவியர் நிலாந்தனின் ஏழு பிள்ளையார் ஓவியங்கள் இதில் இடம் பெற்றுள்ளன. சேர்றியலியசக் (Surrealistic) கலை வகைக்கு பிள்ளையார் உருவமே முன்னோடியாகத் திகழக் கூடியது எனக்கூறும் நிலாந்தன் பல்வகையான பிள்ளையார் ஓவியங்களை தந்துள்ளார். அவற்றுள் அவர் கீறிய ஜயசிக்குறு பிள்ளையார் ஓவியங்கள் தனியானவை. அவை சில அதில் இடம் பெற்றுள்ளன.

மொத்தத்தில் 'தேர்ட் ஐ' எல்லாருடைய கண்களையு எதிர்காலத்தில் திறக்கச் செய்யக் கூடிதாக மாறலாம். தமிழ், சிங்களம், இன்னும் பல்வேறு மொழிகளிலும் இடம் பெறும் இலக்கிய முயற்சிகளையும், அது அவ்வப்போது தரமுயற்சித்தால் இதன் சாதனை பெரிதாகலாம். தற்போது Photo Stat செய்யப்பட்ட பிரதிகளாகவே உலவுகின்ற இதன் நிர்ப்பந்தம் நீங்க வேண்டும். இதற்கு எம்மவரின் ஆதரவே கை கொடுப்பதாகவே அமையும். கூடவே அச்சுப் பிழைகள் அதிகமாக இருப்பது தவிர்க்கப்பட்ட வேண்டும். சசி கிருஷ்ண மூர்த்தியின் 'வேம்பு' மொழிபெயர்ப்புச் செய்தவர் ஏ.ஜே.க என அறிகிறேன். அவர் பெயர் அதில் இடம் பெறாதது ஏனோ?

# நீயிருந்த கருமணியும் இறுதியாய் இட்டு விடைபெற்ற முத்தமும்..

அ.(2)

ஒரு எலியைப் போல-
ஆம்,
பொறியின் வாயில்
துருவில் கூர் மழுங்கிய பற்களோடு
உயிரின் கடைசிச் சொட்டையும்-
வாழ்தலுக்காய்ப் போர் நிகழ்த்திச் சிந்துமே - எலி,
அதே போலத்தான்,

ஆ

அருவருத்து,
பழங்கடதாசித் துண்டொன்றால்
கிள்ளி-
வால் நுனியில் பிடித்துத்
தூக்கித் தூரமாய்க் கடாசினாய்.
உவந்து,
ஊத்தைகளைத் தின்னக் காத்திருந்த
ஊர்க் காகங்களின் மத்தியில்.

விட்டேனா பாரென்று :
கண்களைச் சிலவும்,
நீயிருந்த கருமணியைச் சிலவும்
மூஞ்சியைச் சிலவும்,
நெஞ்சம் - அதைப் பிளந்து
ஈரலின் குலையெடுத்துக் -காலில் இடுக்கி
காற்றில் எழும்பி அந்தரத்தே
அங்கிருந்து வீசி விடச் சிலவும்,
நீ விழக் காத்துக் கிடந்தபடி இன்னும் சிலதையும்
கண்டேன்.
மலம் தேடி -
வயிற்றில் துளைபோட்டுக் குடைந்து
குடல்களின்
சிக்கைப் பிரித்தபடி பொழுதை மறந்தன சில,
விரைகளை முழுசாய் விழுங்கியதால் -
விக்க-
அமுதென்ன, இதுவே சுவையென்று இரத்தத்தைப்
புரையேறக் குடித்துப் புரண்டன வேறு சில.

அனைத்தின் முன்னமும்
நடை தளரத் தலை கவிழ்ந்தேன்.

ஈற்றில்,
இறுதியாயுனக்கு
இட்டு விடைபெற்ற முத்தத்தை,
அரிந்து-
சாவென்று போட்டாலும் செத்துமண்ணாமே தவிர
மறந்து ஒரு கணமும் இயங்கச் சம்மதியா மூளையினை
ஒன்று:
அதுவும் உன் இஷ்டக் காக்கையொன்று
கொத்திக், குதறி-
பரஸ்பரம் பரிமாறிக் கிறங்கிய
உமிழ் நீரின் அளவு பற்றியெல்லாம்
கரைந்து பறக்கையில் நான்
அழுதே விட்டேன்.

இ.

பக்கத்து ஊர் தாண்டி,
அடுத்த அதற்கடுத்த ஊர் வரைக்கும்
பொக்கை வாய்க்குள்ளும்
மெல்லென்று அவல் கொடுத்தாய் நீ.

காக்கைகளாலான வானத்தை
முதலுங் கடைசியுமாய்
அன்றே கண்டதாக அதிசயித்துப் பேசிக் கொண்டனர்.

அ.(1)


இரத்த வாடை போக-
பொறியைத் தீகாட்டி வாட்டி,
மணம் வரச்
சுட்ட கருவாட்டை
பொறியின் தட்டிற் செருகி நீ வைத்தாய்.

(ஈ)

வாழ்தலுக்காய் போர் நிகழ்த்தித்
தன் இறுதிச் சொட்டு இரத்தத்தையும் சிந்திற்று காதல்.

உனக்குத் தெரியாததா என்ன?

19980824 காலை 9.00மணி



அரசுக்கு ஆதரவாகவே செயற்பட்டன. அது மாத்திரமல்ல பிரேமதாச அவர்களை ஜனாதிபதிப் பதவியில் இருந்து அகற்ற நாம் முனைந்த போது, அவரைக் காப்பற்ற ஈரோஸ் உறுப்பினர்களை பாராளுமன்றம் அனுப்ப விடுதலைப் புலிகளும் தயாராக இருந்தது. அதற்கான பேச்சுவாத்தைகளும் கொழும்பில் நடைபெற்றன. ஒவ்வொரு மாதமும் அவசரகாலச் சட்டத்தை எதிர்த்த ஒரே கட்சி ஈ.பி.ஆர்.எல்.எப். மாத்திரமே. அதே போன்று யுத்தத்திற்கான வரவு செலவுத் திட்டங்களையும் நாம் எதிர்த்து இரட்சகனாகவோ பெயர் பெற்றிருக்கிறது. எனவே, அப்பெயரை இழக்க அது விரும்பாது. இச்சூழ்நிலையில் தமிழ், முஸ்லிம் பா.உ.க்களின் பகிஷ்கிப்பு பாராளுமன்றத்தில் அவர்களின் நடவடிக்-கைகட்கும் இடையூறாக அமையும். சர்வதேச அரங்கிலும் அரசின் பெயர் கெட்டுப் போகும் நிலைமை ஏற்படும். எனவே, இன்று பாராளுமன்றப் பகிஸ்கரிப்பு அரசுக்கு கண்டிப்பாக அழுத்தத்தை ஏற்படுத்தும் என்ற தெளிவான சிந்தனையின் அடிப்படை- ஏனையவர்கள் இணங்காவிடின் தானே போராட்டங்களை முன்னெடுக்குமா? என்ற கேள்வியையும், மக்கள் தயாராகவே இருக்கிறார்கள் ஈ.பி.ஆர்.எல்.எப். தயாரா என்ற ஓர் செய்தியையும் தந்தீர்கள். ஈ.பி.ஆர்.எல்.எப்பின் வரலாற்றின் பெரும் பகுதி (ஆயுதப் போராட்ட காலம் உட்பட) மக்களை அணிதிரட்டிய பல்வேறு வகையான ஜனநாயகப் போராட்டங்களைக் கொண்டது தான்.

மக்கள் தயாராக இருப்பதாகக் கூறினீர்கள்

# தமிழ் மக்களின் இரட்சகனாக வேடம் போடும் இன்றைய அரசுக்கெதிராக போராட்டம் நடாத்துவது அவசியமானது!

சரிநிகர் 154வது இதழில் நாசமறுப்பான் அவர்கள் எழுதிய "தலைவர்கட்கு நிந்தனை மக்கள் முதுகில் குத்து" என்ற கட்டுரையின் இறுதிப் பகுதியில் என்னிடமும் சில கேள்விகளை எழுப்பி-யிருந்தார். அதற்கான பதிலைக் கூறுவது எனது கடமை என நம்புகிறேன்.

நான் தமிழ் முஸ்லிம் கட்சிகளுக்கெழுதிய கடிதம் தொடர்பாகவும், அதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் உபதலைவர் ஆனந்தசங்கரி அவர்கள் அளித்த பதில் தொடர்பாகவும் தான் நாசமறுப்பானின் கட்டுரை அமைந்திருந்தது.

முதலாவதாக நான் தமிழ், முஸ்லிம்-கட்சிகளுக்கெழுதிய கடிதத்தில் தமிழ் மக்கள் அன்றாடம் படும் துன்பங்களைக் குறிப்பிட்டு, அதிலும் மிக அண்மையில் உருவான மூன்று பிரச்சினைகளைக் குறிப்பிட்டு, (பாதிக்கப்பட்ட சகலருக்கும் உலர் உணவுப் பொருட்கள் வழங்கல், வவுனியா எரிபொருட்களுக்கான கட்டுப்பாட்டை நீக்குதல், பிறின்சஸ் கேஷ் கப்பலில் பொருட்களை இழந்தவர்களுக்கு நஷ்டஈடு வழங்குதல்) இவற்றுக்கு அரசு ஓர் திட்டவட்டமான பதிலைச் சொல்ல வைப்பதற்கு அரசுக்கு ஓர் அழுத்தம் கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையில் தான் பாராளுமன்றத்தைப் பகிஷ்கரிக்கும்படி தமிழ், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களைக் கேட்டிருந்தேன். அதற்கு ஆனந்த சங்கரி மாத்திரம் தான் சண்டே டைம்ஸ் பத்திரிகையின் மூலம், "தாம் எந்தக் காலத்திலும் பாராளுமன்றத்தைப் பகிஷ்கரிக்கத் தயாரில்லை" என்ற பதிலைக் கூறியிருந்தார். மற்றவர்களிடம் இருந்து எந்தப் பதிலும் கிடைக்கவில்லை.

நான் மேற்குறிப்பிட்ட மூன்று விடயங்-கள் தொடர்பாக ஈ.பி.ஆர்.எல்.எப்பும் புளொட்டும் இணைந்து வவுனியாவில் தொடர்ந்து ஹர்த்தால் நடாத்தினோம், யாழ்ப்பாணத்தில் வியாபாரிகள், கடையடைப்பு, உண்ணாவிரதம் என போராட்டம் நடாத்தினார்கள். உலர் உணவுப் பொருட்கள் கொடுக்க வேண்டும் எனக்கோரி ஈ.பி.ஆர்.எல்.எப்., புளொட், ரெலோ இணைந்து யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடாத்தி மகஜர்கள் கொடுத்தார்கள். வன்னியில் தொடர்ந்து அரச அலுவலகங்கள் நடைபெறமுடியாத அளவில் அங்கு ஆர்ப்பாட்டங்கள் நடந்து வருகின்றன. இவ்வளவு நடந்தும் கூட அரசைப் பொறுத்தவரையில் இது செவிடன் காதில் ஊதிய சங்காகவே உள்ளது. தொடர் கடையடைப்புக்களும், நிர்வாக நடவடிக்கைகளை நிறுத்துவதும், தொடரும் பட்சத்தில் அதுவும் கூட மக்களுக்குத் துன்பங்களை விளைவிக்கும். இந்நிலையில் தான் இப்பிரச்சினைகள் தீர்க்கப்படுவதன் அவசியத்தை அரசுக்-குணர்த்துவதற்கும், அரசின் மக்கள் விரோத செயல்களை முழு உலகும் அறியும்படி அம்பலபப்படுத்துவதற்கும், இதன் மூலம் அரசின் மீது ஒரு அழுத்தத்தையும், சர்வதேச நெருக்குதலை உருவாக்க ஓர் முன்முயற்சியாகவுமே பாராளுமன்றத்தைத் பகிஷ்கரிக்கும்படி நான் கோரியிருந்தேன். இது உப தலைவர் ஆனந்த சங்கரிக்கு புரியாததால் தான் ஏதேதோ கூறியுள்ளார். எனவே, நாம் நடத்தி வந்த போராட்டங்களின் தொடர்ச்சியாகவே இக்கோரிக்கையை விடுத்திருந்தேன்.

ஆனால், அவற்றை கணக்கிலெடுக்காத நாசமறுப்பான் "தனக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்த போதெல்லாம் இப்படியானதோர் கண்டனத்தை அல்லது அழுத்தத்தை பிரயோகித்துப் பார்க்க விரும்பாத ஈ.பி.ஆர்.எல்.எப். இப்போது மட்டும் அதுவும் தனக்கு ஆசனம் இல்லாத நேரத்தில் போராட்டம் நடாத்தும்படி மற்றவர்களைக் கேட்கிறதே என்று தோன்றுவதைத் தவிர்க்க முடிய-வில்லை" என்று கூறியுள்ளார்.

நாசமறுப்பான் அறியாத அல்லது சுலபமாக மறந்துபோன சில விடயங்களை அவருக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். கடந்த பாராளுமன்றத்தில் ஐ.தே.க. அரசுக்கு எதிராகக் கொண்டு வந்த சகல நம்பிக்கையில்லாத தீர்மானங்களையும் ஈ.பி.ஆர்.எல்.எப்பும், எதிர்கட்சிகளுடன் இணைந்தே கொண்டு வந்தது. இவற்றுக்கு மேலாக பிரேமதாச மேல் கொண்டு வந்த Impeachment motion ஐயும் ஈ.பி.ஆர்.எல்.எப்பும் எதிர்க்-கட்சிகளுடன் இணைந்து கொண்டு வந்தது. ஆனால், அச்சமயம் பாராளு-மன்றத்தில் இருந்த ரெலோ, தமிழர் விடுதலைக் கூட்டணி, எஸ்.எல்.எம்.சி., ஈ.என்.டி.எல்.எப். போன்ற கட்சிகள் வந்தோம். எனவே ஈ.பி.ஆர்.எல்.எப்பை பொறுத்தவரை மக்கள் விரோதப் பிரேமதாசா அரசாங்கத்தை பகிஷ்கரிக்க வேண்டும் என்பதற்கு மேலாக அவ்வரசாங்கத்தையே இல்லாமல் செய்ய நாம் முழுமையாக முயன்றோம் என்பது தான் உண்மை.

இது மாத்திரமல்ல வட - கிழக்கு இனப்பிரச்சினைத் தீர்விற்காக உருவாக்கப்பட்ட மங்கள முனசிங்க தெரிவுக்குழுவில் கூட ஈ.பி.ஆர்.எல்.எப். காத்திரமான ஓர் பாத்திரத்தை வகித்தது. ஒவ்வோர் தெரிவுக்குழு அமர்விற்கு முன்னமே, பாராளுமன்றத்தில் இருந்த ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எப்., த.வி.கூ., ரெலோ, ஈ,என்.டி.எல்.எப். போன்ற கட்சிகளையும் பாராளுமன்றத்தில் இல்லாத தமிழ்க் காங்கிரஸ், புளொட் போன்ற இயக்கங்களையும் உள்ளடக்கி, நாம் என்ன பேச வேண்டும் என்பதை முடிவு செய்து அதன்படி செயற்பட்டு வந்தோம். ஆனால், இறுதியில் ஈ.என்.டி.எல்.எப். சிறீநிவாசன், ஓரிரு தமிழ்க் கட்சிப் பிரதிநிதிகள் எமது அடிப்படை உரிமைகளையே விற்க முற்பட்ட போதும் ஈ.பி.ஆர்.எல்.எப். அதனைத் திட்டவட்டமாக எதிர்த்ததால் தெரிவுக் குழுவாலும் தனது இறுதி அறிக்கையைக் கொடுக்க முடியவில்லை. ஈ.பி.ஆர்.எல்.எப். அதில் எப்படி செயற்பட்டதென்பதை தெரிவுக்குழு அறிக்கைகளைப் பார்த்து புரிந்து கொள்ளலாம். இதனால் ஈ.பி.ஆர்.எல்.எப். ஏதோ மலையையே பிளந்து விட்டதென்ற அர்த்தமல்ல. ஆனால், பாராளுமன்றத்தை இயன்றவரை எமது மக்களின் உரிமைக்காகப் பயன்-படுத்தினோம் என்பதை யாராலும் மறுக்க முடியாது. நாம் இவற்றைச் செய்யும் பொழுது ஆளும் கட்சிக்கு பாராளுமன்றத்தில் அறுதிப்-பெறும்பான்மை இருந்தது. சிறுபான்மைக் கட்சிகளின் தயவு அரசுக்குத் தேவையாக இருக்கவில்லை. அன்று நாம் பகிஷ்கரிப்பதால் அரசுக்கு அழுத்தத்தை ஏற்படுத்த முடியுமாயிருந்தால் கண்டிப்பாக அதனைச் செய்திருப்போம் என்பதை இப்போது ஏற்றுக்கொள்வீர்கள் என நம்புகின்றேன்.

இன்று நிலை வேறு. அரசு ஒரே ஒரு மேலதிக எம்.பியுடன் செயற்படுகிறது. மேலும் உலக அரங்கில் இன்றைய அரசு தமிழ் மக்களின் நண்பனாகவோ, அல்லது யிலேயே இவ்வாறு ஒன்றுபட்ட ஓர் செயற்பாட்டை நாம் செய்யும் இடத்து அரசு தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பாக தான் தோன்றித்தனமாக முடிவெடுக்காமல் கட்சிகளுடன் கலந்து பேச வேண்டும் என்ற எச்சரிக்கையை ஏற்படுத்தலாம் என்ற அடிப்படையிலுமே இக்கோரிக் கையை முன்வைத்தோம்.

இத்தகைய ஓர் வழிமுறையை ஈ.பி.ஆர்.எல்.எப். பின்பற்றுமா என்பதை நிரூபிக்க தனது உள்ளூராட்சி உறுப்பினர்களை இராஜினாமாச் செய்ய வைக்குமா என்ற கேள்வியையும் எழுப்பியுள்ளீர்கள். எமது அரசியற் கோரிக்கைகளுக்காக ஜனநாயக ரீதியாக ஈ.பி.ஆர்.எல்.எப். தன்னால் முடிந்த அழுத்தங்களைப் பிரயோகிக்கும் என்பதில் யாருக்கும் சந்தேகம் தேவையில்லை. பாராளுமன்றமாக இருந்தாலும் கூட இன்றைய நிலையில் இராஜினாமாச் செய்வதால் பெரிய அழுத்தம் ஏற்படாது. ஏனெனில், அந்த இடத்திற்குப் புதியவர்கள் நியமிக்கப்படுவர். எனவே, பகிஷ்கரிப்பதென்பது பகிஷ்கரிப்புக் காலகட்டத்தில் தமது கோரிக்கைகளை வெல்ல அதனைப் பிரச்சாரப்படுத்துவது, முடிந்தவரை மக்களை இணைத்த போராட்டங்களையும் முன் எடுப்பதினூடாக அழுத்தத்தைக் கொடுக்க முடியும். கண்டிப்பாக இவ்வழிமுறை அரசுக்கு பாராளுமன்றத்திலும், சர்வதேச அரங்கிலும் ஓர் தலையிடியாகும். ஈ.பி.ஆர்.எல்.எப்பிற்கு உள்ளூராட்சி சபை அதிகாரங்கள் இருந்து அதனை இராஜினாமாச் செய்தால் கூட அது ஓரிருநாள் செய்தியாகுமே தவிர அழுத்ததைக் கொடுக்காது. அப்படி-யிருக்க ஆட்சி அதிகாரமே இல்லாமல் சில உறுப்பினர்கள் இராஜினாமாச் செய்வதால் அந்த உள்ளூராட்சி சபைக்குக் கூட அழுத்தம் கொடுக்க முடியாது. உண்மையாகவே உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் பகிஷ்கரிப்பதாலோ இராஜினாமாச் செய்வதாலோ (கிட்டத்தட்ட இரண்டிலும் ஒரே தாக்கம் தான்) எமது கோரிக்கையை வெல்ல அழுத்தம் கொடுக்க முடியுமாயின் ஈ.பி.ஆர்.எல்.எப். அதற்குத் தயங்காது.

மூன்றாவது விடயம் பத்திரிகையில் செய்தி வருவதற்காக இப்படி ஓர் அறிக்கையை விட்டு விட்டு ஈ.பி.ஆர்.-எல்.எப். தூங்கி விடுமா அல்லது இது பத்திரிகை வாசிப்பவரின் ரசனைக்கு வேண்டுமானால் நல்லதாக இருக்கலாம். யதார்த்தம் அதுவல்ல. மக்களுக்கு பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்ற விருப்பம், அவா இருக்கலாம். ஆனால், ஆளைவிட்டால் போதும் என களைப்புற்றுவிட்ட நிலையே மிகப் பெரும்பாலரிடம் இன்று காணப்படுகிறது.

மக்கள் வரவே மாட்டார்கள் என்பதல்ல இதன் அர்த்தம். சிங்களக் கமிஷன் அறிக்கையை எதிர்த்தும், அரசின் தீர்வுத்திட்டத்தில் ஏற்படுத்த வேண்டிய திருத்தங்களை முன்னெடுத்தும் வவுனியாவில் கடந்த எட்டு ஆண்டு நடைபெற்றிராத வகையில் 5000க்கு மேற்பட்ட மக்களைத் திரட்டி ஓர் எதிர்ப்புப் பேரணியை நடாத்தினோம். யாழிலும் ரெலோ, புளொட், ஆகியவற்றுடன் இணைத்த சில ஜனநாயகப் போராட்டங்களை நடாத்தினோம். ஆனால், ஒருபுறம் ஏனைய கட்சி அலுவலகங்களுக்குப் போனாலே மரண தண்டனை என புலிகள் பகிரங்கமாகவே அறிவித்து மக்களை பயப்பிராந்தியில் வைத்திருக்கும் அதே வேளை அரசுக்கெதிரான போராட்டங்களில் முன்னின்றால் இராணுவம் கூட பழிவாங்குமோ என்ற அச்சம் மறுபுறமாக மக்கள் அச்சத்திற்குள் வாழும் நிலையில், ஜனநாயகப் போராட்டங்கட்கு மக்களை வெளிவரச் செய்வதென்பதே இன்றைய அவசியமானதும் முக்கியமானதும் தேவையாக இருக்கிறது.

ஈ.பி.ஆர்.எல்.எப். மட்டுமே அழைக்குமிடத்து அது மக்களுக்கு பெரிய நம்பிக்கையையோ மனவலுவையோ தராது. மாறாக அனைத்துக் கட்சிகளும் ஒன்றுபட்டு செயற்படுவோமாக இருந்தால் மக்களுக்கு ஓரளவு அவநம்பிக்கை நீங்கி நம்பிக்கையுடன் முன்னேவர ஏதுவாகும் என்பதே எனது அபிப்பிராயமாகும். ஈ.பி.ஆர்.எல்.எப்பும் போராட்டம் செய்தது என்ற செய்தி வருவதற்காக போராட்டம் நடத்துவதால் கோரிக்கைகளை வென்று விட முடியாது. ஈ.பி.ஆர்.எல்.எப். தனது சக்திக்கும் ஆற்றலுக்குமேற்ற வகையில் போராட்டங்களை முன்னெடுக்கும்.

*சு. பிரேமச்சந்திரன்*
*செயலாளர் நாயகம்*
*ஈ.பி.ஆர்.எல்.எப்.*

## வெண்பாவில் தவறு?

செப். 03.98 சரிநிகர் ஈழமோகம் வெண்பாவில் நான் கண்ட சிறு தவறுகளை சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

மக்கட்காய்ப் போராடி * மரணித்தாற் * தியாகியந்த
மக்களே மக்களுக்காய் * மரித்தாலோ - மக்கள்
*போராட்ட *மஃதென்பீர் என்னென்பீர் * புளொட்டுக்காய்
போராட்டம் * அவர் நடத்தப் * புகின்.

இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை இயைந்து வருதலே வெண்பா என விருக்க, * அடையாளமிட்ட இடங்களில் கலித்தளை வருதல் கவனிக்க.

**இதே வெண்பாவை**

மக்கட்காய்ப் போராடி மாண்டாற் தியாகியந்த
மக்களே மக்களுக்காய் மாண்டாலோ - மக்களது
போராட்ட மென்பீரென் சொல்வீர் புளொட்டுக்காய்
போராட்டம் மக்களியற் றின்.

எனவெழுதல் விதிகளுக்கமைவானதாகும் என வினயத்துடன் குறிப்பிடுகிறேன்.

புதைகுழிகள் தோண்டிரிவர் ஏறிவந்தார் ஆட்சி
புதைத்துவிட்டார் வாக்குறுதி மீண்டும் - புதைகுழிகள்
செம்மணியில் ஆக்கிவிட்டார் தோண்டுகின்ற சேதியென்ன?
அம்மணியார் காட்டவில்லை மூச்சு.

நான்போகும் பாதையெல்லாம் நீயாகத் தேடிவந்து
ஏன் நீயும் கொல்லுகின்றாய் என்னுயிரை - வேண்டாமே
நிம்மதியை நான்தொலைக்க நீவாழல் நீதியில்லை
இம்மளவில் யுத்தம் நீ சாவு.

வெண்ணையது கையிருக்க நெய்யதனைத் தேடுதல்போல்
அண்ணையவர் தேடுகின்றார் தீர்வொன்று - அண்ணர் காள்
நீராய் இணையும் ஒருமுகமாய், நற்தீர்வு
போராட வேண்டாம் வரும்.

புத்தம் தருமம் புனித சங்கம் என்று சொல்லி
யுத்தம் மிகுவித்த பிக்குகளே - புத்தரவன்
போரிற் பொறையிளந்தான் நாட்டைவிட்டே ஓடிவிட்டேன்
நீரும் நடத்துமினி நன்கு.

**மண்ணடியான்**

## சொல்லாட்சி சரியானதா?

உங்களுடைய சரிநிகர் 157வது இதழில் கோமதி அவர்களால் எழுதப்பட்ட கட்டுரையில் Homo-sexuality Lesbianism என்ற ஆங்கிலப் பதங்களுக்கு "ஒரு பாலுறவு" என்ற சொல்லாட்சி பயன் படுத்தப்பட்டி-ருந்தது. இது தவறான மொழி-பெயர்ப்பு. "ஒரு பாலுறவு" என்பதை "பாலுறவு ஒன்று" என்ற அர்த்தத்திலும் (ஒருமை) விளங்கிக் கொள்ளலாம். உண்மையில் ஏதோ ஒரு பாலுறவு அந்தரங்கத்திலிருந்து அரசியலுக்கு வந்து விட்டது போல இருக்கிறது என்றே அத்தலைப்பைப் பார்த்த பொழுது நான் எண்ணினேன். கட்டுரையில் "ஓரினச் சேர்க்கை" என்ற பதம் குறிக்கப்பட்டிருக்கிறது. இதுவே சரியான மொழி பெயர்ப்பாக இருக்கும். இனம் என்பது ஆண் இனம், பெண் இனம் என்ற பால் ரீதியான பகுப்புக்களையும் அடக்கு-வதாகவே இருக்கிறது.

*செல்வி திருச்சந்திரன்,*
*கொழும்பு*

# சரிநிகர்

இரு வாரங்களுக்கு ஒரு முறை

'சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே"

-பாரதி

இல.04, ஜயரத்ன வழி, திம்பிரிகஸ்யாய, கொழும்பு 05.

தொலைபேசி : 593615, 584380

தொலைமடல் : 594229


## வர்த்தக சம்மேளனமும் பத்து அம்சத் திட்டமும்

இலங்கை வர்த்தக சம்மேளனம், இலங்கை வர்த்தக கைத்தொழில் சம்மேளனம், இலங்கை தேசிய வர்த்தக சம்மேளனம், தேசிய கைத்தொழில் சம்மேளனம், இலங்கை ஏற்றுமதியாளர் சங்கம் ஆகிய தனியார் அமைப்புக்கள் கூட்டாக இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணப்பட வேண்டும் அதனைக் காணும் நோக்குடன் சமாதானத்திற்கான ஒரு தேசிய சபை கூட்டப்படவேண்டும் என்று கோரி இதற்கு அடிப்படையான பத்தம்சத் திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளது.

இதன் முதல் நடவடிக்கையாக கடந்த 22ஆம் திகதி பண்டாரநாயக்கா சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் அது சர்வகட்சி மாநாடொன்றை நடாத்தியது. இம் மாநாட்டிற்கு அது அனைத்துக் கட்சிக்கும் அழைப்பு விடுத்திருந்த போதும் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க. அதற்கு சமூகமளிக்கவில்லை. அரசாங்கம் தேசியப் பிரச்சினையில் தமது கட்சி தொடர்பாக கூறிவரும் அவதூறுகள் காரணமாகவே தாம் இதில் கலந்து கொள்ளவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்த போதும் தனிப்பட்ட முறையில் அவர் இந்த முயற்சியையிட்டு சாதகமான அபிப்பிராயமே கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது. கென்யிலேந்திரா, ஆனமன் வீரசிங்க, நிமால் சமரக்கொடி, பற்றிக் அமரசிங்க, நிகல் ஒஸ்ரின், லைன் பெர்னாண்டோ லலித் கொத்தலாவல ஆகியோரால் தயாரிக்கப்பட்ட இந்த பத்தம்சத் திட்டத்தின் அம்சங்கள் இவை.

1. வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு சரியான தீர்வை காணல்

2. எத்தகைய பாரபட்சமும் இல்லாமையை உறுதிப்படுத்தலும் இனம், பால், மதம், அரசியல் சார்பு என்ற வேறுபாடின்றி அனைத்து இலங்கை பிரஜைகளும் சமத்துவமானவர்கள் என்பதை உறுதி செய்தலும்.

3. எல்லா இலங்கையர்க்கும் தனிப்பட்ட பாதுகாப்பு மற்றும் சமாதானத்தை உறுதி செய்தல்.

4. ஆங்கிலத்தை ஒரு இணைப்பு மொழியாக அறிமுகம் செய்தலும் அதை ஒரு உத்தியோகபூர்வ மொழியாக சட்டபூர்வமாகக் கொண்டு வருதலும்.

பொது சேவைகள் ஆணைக்குழு, நீதித்துறை, பொலிஸ் சேவை என்பவற்றின் அதிகாரத்தையும் சுதந்திரத்தையும் உறுதிப்படுத்தல்.

6. எல்லா தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களிலும் அவை சட்டமாக்கப்பட முன்னர் வெள்ளை-பச்சை அறிக்கையாக வெளியிடப்பட்டு பொது மக்கள் முன் விவாதத்தக்கு விடப்படலை உறுதி செய்தல்.

7. அரசாங்கத்தாலும் எதிர்க்கட்சியாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டால் அன்றி ஆகக் குறைந்தது 15 ஆண்டுகட்கு மாறாதிருக்கும் விதத்திலான ஒரு கொள்கையை - தொடர்ச்சியைப் பேணும்

— 19

## வவுனியா : சிவில் நிர்வாகத்தில் ராணுவம் தலையிடுகிறது. கண்டிக்கிறார் புளொட்டின் உப தலைவர் மாணிக்கதாசன்

வவுனியா மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்குவரத்துச் சபையின் முகாமைத்துவப் பணிப்பாளரை நியமிப்பதில் புளொட்டுக்கும் இராணுவத்தினருக்குமிடையே முறுகல் நிலையொன்று உருவானதாயும்,

அதன் விளைவாக வவுனியா மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்குவரத்துச் சபைக் காரியாலயத்தில் கூட்டத்தை நடாத்திக் கொண்டிருந்த பணிப்பாளர்களை படையினர் காலையிலிருந்து மாலை ஐந்து மணி வரை தடுத்து வைத்திருந்ததாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, வவுனியா போக்குவரத்துச் சபையின் முகாமைததுவப் பணிப்பாளராக ஏற்கெனவே மார்க்கண்டு தேவதாசன்(மாறன்) கடமையாற்றி வந்தார். இவர் அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். புளொட்டில் உமாமகேஸ்வரனுக்கு அடுத்ததாக இருந்த மூத்த உறுப்பினர்களில் மிக முக்கியமானவர். 1984 இலிருந்து 1987 வரை சிறையிலிருந்தவர்.

இவர் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் வவுனியா மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்குவரத்துச் சபையின் முகாமைத்துவப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டிருந்தார். இந்நியமனத்தை இவர் ஒரு புளொட் உறுப்பினர் என்ற காரணத்தால் அப்போதே படையினர் விரும்பியிருக்கவில்லை. படையினரோ தருணம் பார்த்துக் காத்திருந்தனர்.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் மாறன் குடும்பப் பிரச்சினை காரணமாக நஞ்சருந்தித் தற்கொலை செய்து கொண்டார். இதன் காரணமாக புதிய முகாமைத்துவப் பணிப்பாளர் ஒருவரை நியமிக்க வேண்டிய சூழ்நிலை எழுந்தது. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திய படை அதிகாரிகள் இறந்த மாறனது இடத்திற்கு தாம் குறிப்பிடும் நபரை அல்லது பணிப்பாளர் சபையின் மூத்த உறுப்பினர்களில் எவரையாவது நியமிக்குமாறும் வெளியிலிருந்து எவரையும் நியமிக்க வேண்டாமெனவும் எச்சரித்திருந்தனர். அத்தோடு தமக்குத் தெரியாமல் பணிப்பாளர் சபையைக் கூட்ட வேண்டாம் என்றும் இராணுவ அதிகாரிகள் அறிவுறுத்தல் விடுத்திருந்தனர்.

ஆனால் புளொட்டினரோ ஏ.ஜி.நஜிமுடீன் என்பவரை முகாமைத்துவப் பணிப்பாளராக நியமித்துள்ளனர். (நஜிமுடீன் புளொட்டின் முன்னாள் உறுப்பினர். இவரும் 1984 முதல் 1987 வரை சிறையில் இருந்தவர். இந்தியப்படையின் வருகையுடன் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டவர். )இன்று காலை சத்தியப்பிரமாணம் செய்வதற்காக புதியமுகாமைத்துவப் பணிப்பாளரான நஜிமுடீனும் மற்றைய பணிப்பாளர் சபை உறுப்பினர்களும் பஸ் டிப்போவுக்குச் சென்ற போதே இராணுவத்தினரால் இவர்கள் சுற்றி வளைக்கப்பட்டு பஸ் டிப்போவினுள் தடுத்து வைக்கப்பட்டு புதிய முகாமைத்துவப் பணிப்பாளரின் நியமனத்தை இரத்துச் செய்யுமாறும் தாங்கள் குறிப்பிடும் ஒருவரையே முகாமைத்துவப் பணிப்பாளராக நியமிக்குமாறும் கட்டாயப்படுத்தியுள்ளார்கள். ஆனால் அதனை ஏற்க மறுத்த பணிப்பாளர் சபையினர். இதனால் ஏற்பட்ட இழுபறி நிலையை அடுத்து பணிப்பாளர்கள் ஒன்பது பேரும் அங்கிருந்து வெளியேறா வண்ணம் தடுத்து வைக்கப்பட்டார்கள். இடையே பணிப்பாளர்சபையைச் சேர்ந்த ஐ.கேதீஸ்வரனை படையினர் ஜோசப் முகாமுக்கு அழைத்துச் சென்று விசாரணைகட்குட்படுத்திய பின்னர் விடுவித்தனர். காலை பத்தரை மணியளவில் தடுத்து வைக்கப்பட்ட இவர்கள் மாலை ஐந்தரை மணியளவிலேயே விடுவிக்கப்பட்டார்கள்.

இச்சம்பவம் குறித்து புளொட்டின் தலைவர் உப தலைவரான மாணிக்கதாசனிடம் கேட்ட போது திருகோணமலை, அம்பாறை ஆகிய பகுதிகளில் செய்தது போல இராணுவம் சிவில் நிர்வாகத்தில் தலையிட முனைகிறது. இராணுவ ஆட்சியினுடைய ஒரு வெளிப்பாடே இது என்றார். இது தவறானது. கண்டிக்கப்பட வேண்டியது. ஏற்கெனவே வவுனியா, மன்னார் மாவட்ட போக்குவரத்துச்சபையை அநுராதபுரத்துடன் இணைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. தமிழ் மக்களிடமிருந்து எழுந்த எதிர்ப்புக் காரணமாக அது நடைமுறைபடுத்தப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

▭

## 3 — இனச்சுத்திகரிப்பு...

மேசைக்குத் தள்ளியது. இம் மிரட்டல் இராஜதந்திரம் பொஸ்னியாவில் பொஸ்னிய சேர்பியர் மீது வீசப்பட்ட குண்டு சண்டையிடும் பிரிவினரை டேய்ரன் சமாதான உடன்படிக்கைக்கு இட்டுச் சென்றது.

நீங்கள் இலங்கை அரசாங்கத்தின் மீது பிரித்தானிய அரசாங்கம் குண்டுபோட வேண்டும் என்கிறீர்களா?

நான் அப்படிக் கூறவில்லை. நான் என்ன சொல்கிறேன் என்றால் அவர்கள் நல்லிணக்க முறையில் போரிடும் சக்திகளை பேச்சுவார்த்தை மேசைக்கு அழைப்பது மட்டுமல்ல, மிரட்டல் இராஜதந்திரம் மூலம் அதைச் செய்வார்கள் என்றே சொல்கிறேன். மேற்கு வேறு வழிகளை கையாள வேண்டும். இப்போது அவர்கள் தெரிந்தோ தெரியாமலோ அரசாங்கத்தின் நிலைப்பாட்டைப் பலமூட்டுகிறார்கள்

பிரித்தானியாவில் இப்போது நடைமுறைக்கு வந்துள்ள புதிய குற்றவியல் நீதிச் சட்டங்கள் புலிகளின் நடவடிக்கைகட்கு அங்கு தடையாக இருக்குமென்று நினைக்கிறீர்களா?

பிரித்தானியாவில் புலிகள் எந்தச் சட்டத்தையும் மீறவில்லை என்றே நான் நம்புகிறேன். அண்மையில் பிரித்தானிய தூதுவரே இதைச் தெரிவித்திருக்கிறார்.

ஆனால் புதிய சட்டம், வெளிநாடுகளில் பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபடுவதற்கான சதித்திட்டத்தை பிரித்தானியாவில் செய்யும் நபர்களை தண்டிக்கக் கூடியது. இது புலிகளின் நடவடிக்கைகளைப் பாதிக்காதா?

அது பயங்கரவாதம் என்று எதை நீங்கள் கூறுகிறீர்கள் என்பதைப் பொறுத்தது.

புலிகள் கொழும்பில் நடந்த பல குண்டுவெடிப்புச் சம்பவங்கள். மற்றும் தலதா மாளிகைக் குண்டுவெடிப்புகள் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டுள்ளார்கள். இவையெல்லாம் பயங்கரவாத நடவடிக்கைகள் அல்லவா?

இதற்குப் பதிலளிக்க நான் மறுக்கிறேன்.

இலங்கையில் ஒரு இனச் சுத்திகரிப்பு நடைபெறுவதாக தமிழர்களது அணிகளால் பிரச்சாரம் செய்யப்படுகிறது. இது மிகைப்படுத்தப்பட்ட ஒன்று என்று நீங்கள் கருதவில்லையா? தெற்கில் தமிழர்கள் பலர் வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் யாரும் கொலை செய்யப்படுவதில்லை அப்படியிருந்தும். . .

புலிகள் மட்டுமல்ல, பல வெளிநாட்டு நிபுணர்களும் இலங்கையின் இன்றைய யுத்தம் ஒரு இனச் சுத்திகரிப்பு யுத்தம் என்றே கருதுகின்றனர்.

பீற்றர் சாக், பேராசிரியர் மனோகரன் ஆகியோர் இவை பற்றி நிறைய எழுதி உள்ளார்கள். பல தமிழர்கள் அவர்களது தாயகத்திலிருந்து படையினரால் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். இது இனச் சுத்திகரிப்பு இல்லையா?

ஆனால் புலிகள் கூட இதே இனச் சுத்திகரிப்பைச் செய்யவில்லையா? வடக்கிலேயும் கிழக்கில் சில பகுதிகளிலும் சிங்களவரும், முஸ்லிம்களும் கொல்லப்பட்டு வெளியேற்றப்பட்டது இனச் சுத்திகரிப்பு இல்லையா?

நான் மாநாடு தொடர்பான விடயங்கள் பற்றி மட்டுமே பதில் கூற விரும்புகிறேன்.

○

## போரின் கருவி...

பிரச்சாரப்படுத்துவதற்காக கிருஷாந்தி வழக்குக்கு அரச முக்கியத்துவமும் கொடுக்கப்பட்டது. அதன்படி 20 மாதங்களாக நடந்த கிருஷாந்தி வழக்கின் தீர்ப்பாக 6 பொலிஸாருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

இதைச் சொல்லியே அரசு இன்றும், பாதிக்கப்படும் பெண்கள் மீதான தனது கரிசனையை பிரச்சாரப்படுத்தி வருகிறது. இந்த பிரச்சாரங்களின் முன்னால் ஏனைய சம்பவங்கள் அனைத்தையும் மூடி மறைத்து வருகிறது. ஏனைய சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்கள் சமூக அளவிலும் அந்தஸ்துடையவர்கள் அல்லர்.

இன்று வெளிக் கொணரப்படுகின்ற சம்பவங்கள் அனைத்துமே பாதிக்கப்பட்ட பெண் செத்தால் மாத்திரம் தான் சாத்தியமாகிறது. பெண்ணியவாதியான ஷாமினி பெர்ணாண்டோ இது குறித்து கருத்து தெரிவிக்கையில் "ஒரு பெண் படையினரால் தனக்கு ஏற்பட்ட அவலத்தை சட்டத்தின் முன் கொண்டு வர வேண்டுமெனில் நிச்சயம் சாகத்தான் வேண்டுமா," என வினவுகிறார். உண்மையில் இன்று வழக்கு தொடரப்பட்டிருக்கும் சொற்ப சம்பவங்களைத் தேடிப்பார்த்தால் அவை பாலியல் வல்லுறவின் பின்னர் கொலை செய்யப்பட்டவர் குறித்தானதாகத் தான் இருக்கின்றது. கிருஷாந்தி, ராஜினி, கோணேஸ்வரி போன்றன நல்ல உதாரணங்கள்.

இதே வேளை இது வரை சிங்களப் படையினரால் மேற் கொள்ளப்பட்டு வந்திருக்கிற பாலியல் வல்லறவு சம்பவங்கள் அனைத்திலும் பெண் அதிக சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டுள்ளாள்.

97 ஒக்டோபர் 16 அன்று அம்பாறையில் பொலிஸாரும் படையினரும் தங்கநாயகி எனும் பெண்ணை கூட்டாக பாலியல் வல்லுறவு கொண்டு விட்டு அப்பெண்ணின் பெண்குறியை வெட்டி சின்னாபின்னப்படுத்தி விட்டே சென்றனர். அதே போல 97 மே 17 அம்பாறையில் கோணேஸ்வரி பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்ட பின்னர் கோணேஸ்வரியின் பெண்குறியில் கிரனைட் வைத்து தகர்த்தனர். பெரும்பாலும் பாலியல் வல்லறவின் பின் கொலையும் செய்து வந்திருக்கின்றனர். இதன் மூலம் சகல சாட்சிகளையும் இல்லாது போய்விடுமென்றே சிங்களப் படையினர் கருதியிருப்பர்.

இதை விட இது வரை காலம் போரின் போது கைது செய்யப்பட்ட பெண் புலிகள் பலரை பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டமை குறித்த சம்பவங்கள் 94க்கு முன்னர் அதிகளவு தகவல் கிடைத்திருந்தன. இன்று அப்படிப்பட்ட தகவல்கள் பெறுவது கடினமாக இருக்கிறது. ஆனால் உயிர்விடும் தறுவாயில் பிடிக்கப்பட்ட பெண் போராளிகளை நிர்வாணப்படுத்தி பாலுறுப்புகளில் போத்தல்களாலும், கம்பிகளாலும் சேதப்படுத்துகின்ற புகைப்படங்களின் மூலம் கடந்த அரசாங்கங்களைப் போலவே இந்த அரசாங்கத்திலும் இடம் பெற்று வருவதை காண முடிகிறது. குறிப்பிட்ட தாக்குதல் சம்பவம் முடிந்ததும் மரணமுற்ற பெண் போராளிகளை நிர்வாணப்படுத்தி காட்சிப்படுத்தப்பட்டதை தொலைக்காட்சி செய்திகளிலும் காட்டப்பட்டது. அவை பற்றிய புகைப்படங்களும் கிடைத்திருக்கின்றன.

இதன் மூலம் எதிர்பார்க்கப்படுவது என்ன? குறிப்பிட்ட சமூகத்தை அவமானப்படுத்தி விட்டதன் களிப்பையல்லவா? ஏற்கெனவே சமூகத்தில் ஒருவர் தனக்கு வேண்டாத இன்னொருவரை அவமானப்படுத்த வேண்டுமென்றால் அவருக்கு கிட்டிய பெண்ணை வல்லுறவுக்குள்ளாக்குவேன் என்று கூறினாலே மற்றவர் ஆத்திரப்படுவார் அல்லவா? அப்படிப்பட்ட வெளிப்பாடொன்றே இந்த நிர்வாணக் காட்சிப்படுத்தலும்.

"தமிழ் மக்களை பயங்கரவாதிகளிடமிருந்து மீட்டெடுப்பதற்காக நடத்தப்படும்" சமாதான யுத்தத்தின் மறு பக்கம் எவ்வளவு கோரமானது என்பதைக் காட்ட தமிழ் மக்களுக்கு எதிரான இந்த சம்பவங்கள் போதுமானது. அரசாங்கத்தின் சர்வதேச பிரச்சாரங்கள் சமீப காலமாக தோல்வியடைவதற்கு ஒரு காரணம் போர்க்கால கொடுமைகளின் அத்தனை விபரீதங்களும் எல்லைத்தாண்டி போகுமளவுக்கு அதிகரித்திருப்பதே.

அரசு இவ்வாறான இம்சைகளின் வாயிலாக தமிழ் மக்களை பணிய வைத்து அரசு தரும் தீர்வினை ஏற்கச் செய்கின்ற நடவடிக்கையாக, போரின் கருவியாக, வதையின் கருவியாக, பாலியல் வல்லுறவு தொடர்ச்சியாக பாவிக்கப்பட்டு வருகிறது. அரச பயங்கரவாதத்தின் உச்ச வடிவம் இது தான். இது இனிமேல் தொடராது என்பதற்கான உறுதியை எவரும் தந்துவிடமாட்டார்கள்.

○

வெளியிடுபவர் : ச. பாலகிருஷ்ணன். இல. 18/02. அலோ சாலை. கொழும்பு 03. அச்சுப் பதிப்பு : பிறின்ற் இன். இல. 07. கெகடிய இடம். சிறிமல் உயன. இரத்மலானை. 27.10.1998